இலங்கையின் விவசாயத் துறைக்கான அரசின் ஒரே காப்புறுதி நிறுவனமாகச் செயல்படும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை, 2025 ஆம் ஆண்டிலும் விவசாய சமூகம், மீனவர்கள் மற்றும் ஒட்டுமொத்த விவசாயத் துறையினருக்குமான பரந்த பாதுகாப்பை வழங்கத் தொடர்ந்தும் பங்களிப்பு செய்தது. பிரதான உணவுப் பயிர்கள், வணிகப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள், கால்நடைகள் மற்றும் அது சார்ந்த விவசாயச் சொத்துக்களை உள்ளடக்கும் வகையில் இச்சபையின் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டிருந்தன. நாட்டின் முன்னணி பயிர் காப்புறுதியாளர் மற்றும் முதன்மைக் கால்நடை காப்புறுதியாளர் என்ற வகையில் சபையின் தனித்துவமான நிலையானது, கிராமப்புற வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதிலும், விவசாய அபாயங்களைக் குறைப்பதிலும், தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் ஆற்றும் தீர்க்கமான பங்களிப்பைத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது; மேலும், மூன்றாம் தரப்பு மற்றும் பொதுக் காப்புறுதிச் சேவைகள் அவர்களின் ஒட்டுமொத்தப் பங்களிப்பில் ஒரு சிறிய பகுதியை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

பிரிவுப் போக்குகளும் வளர்ச்சியும்

2025 ஆம் ஆண்டில், சபை அரசாங்கத்தின் அனுசரணையுடனான காப்புறுதித் திட்டங்களையும், தவணைக்கட்டணத்தை அடிப்டையாகக்கொண்டகாப்புறுதித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது. அதன்படி, தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நெல், சோளம், மிளகாய், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் சோயா போஞ்சி சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நெல் சாகுபடிக்கு 5 ஏக்கரும், ஏனைய பயிர்களுக்கு 2.5 ஏக்கரும் உள்ளடங்கும் வகையில் ஒரு ஏக்கருக்கு 40,000 ரூபாய் தொகையில் தானியங்கி முறையில் காப்புறுதி செய்யப்பட்டது. வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல் போன்ற பிரதான அசம்பாவிதங்களுக்கான செலவை அரசாங்கமே முழுமையாகப் பொறுப்பேற்றதுடன், பூச்சித் தாக்கங்கள், பயிர் நோய்கள் மற்றும் பிற விலங்குச் சேதங்கள் போன்ற மேலதிக அபாயங்கள் தவணைக்கட்டணப் பங்களிப்பு முறையின் மூலம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

641,594,466.71 ரூபாய் தவணைக்கட்டண வருவாயை ஈட்டிய தவணைக்கட்டணப் பங்களிப்பு முறையிலான காப்புறுதித் திட்டங்கள் மூலம் நிலப்பரப்பு, வணிக மற்றும் பெருந்தோட்டப் பயிர்களுக்குச் சொந்தமான 99,213 ஏக்கர் நிலப்பரப்பு காப்புறுதி செய்யப்பட்டது. இதில் 104,752.26 ஏக்கர் நிலப்பரப்பைப் உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பயிர்க் காப்புறுதி உரிமைக்கோரல்கள் 1,816.50 மில்லியன் ரூபாயாக இருந்தது. கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 6,183 விலங்குகள் காப்புறுதி செய்யப்பட்டதுடன், உரிமைக்கோரல்கள் 8.9 மில்லியன் ரூபாயாகும். விவசாயிகளுக்கான தனிநபர் விபத்துக்கான காப்புறுதிப் பாதுகாப்பு, மீனவர் சமூகத்திற்கான 'சயுர' காப்புறுதித் திட்டம் மற்றும் கித்துல், பனை, தென்னை, கறுவா ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான விசேட காப்புறுதிப் பாதுகாப்பு உட்பட்ட 10,033 பங்களிப்பு உறுப்பினர்களுக்குச் சேவை வழங்கப்பட்டதுடன், இதன் கீழ் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை 0.2 மில்லியன்

ரூபாயாகும். வாகன மற்றும் சொத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 574,497 வாகனங்கள், 7 களஞ்சிய அறைகள் மற்றும் 2 பாதுகாக்கப்பட்டவீடுகள் உள்ளடக்கப்பட்டதுடன், இதற்காகக் கொடுக்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை 2.5 மில்லியன் ரூபாயாகும்.

பன்றி வளர்ப்பு காப்புறுதித் திட்டம் மற்றும் விதை நெல் காப்புறதித் திட்டம் உள்ளிட்ட பல புதிய காப்புறுதித் திட்டங்கள் 2025 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன், காப்புறுதிப் பாதுகாப்பை விரிவுபடுத்தும் பொருட்டு கறுவா, ரப்பர், தேயிலை, தென்னை, வெற்றிலை மற்றும் ஏனைய பயிர்களுக்கான தற்போதைய பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் திருத்தப்பட்டன. கமக்காரர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் புதிதாக 8,837 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டதுடன், இதன் மூலம் 90,088,292.85 ரூபாய் தவணைக்கட்டண வருவாய் ஈட்டப்பட்டது. தீவு முழுவதிலும் நடத்தப்பட்ட மேம்பாட்டுப் போட்டிகள் மூலம், மிகச் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய முகவர்களுக்குப் பணப்பரிசுகளும் குடைகளும் வழங்கி முகவர்கள், குழுத் தலைவர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் காப்பீட்டுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வையும் பதிவுகளையும் வெற்றிகரமாக உயர்த்த முடிந்தது.

தொழில்நுட்ப நவீனமயமாக்கல் ஒரு முக்கிய இலக்குத் துறையாக இருந்தது. GIZ நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் கூடிய தொழில்முனைவு வள திட்டமிடல் (ERP) அமைப்பின் மூலம் நிர்வாகம், மனித வளம், பயிர் மற்றும் கால்நடைக் காப்புறுதி, ஓய்வூதியம் மற்றும் மூன்றாம் தரப்புத் தொகுதிகள் ஒரே அமைப்பிற்குள் ஒருங்கிணைக்கப்பட்டன. இது தவிர, தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டங்களுக்காகக் காப்புறுதி அட்டைகளை அறிமுகப்படுத்தச் சபை நடவடிக்கை எடுத்ததுடன், காப்புறுதித் தவணைக் கட்டணங்கள் மற்றும் காப்புறுதிப் பாதுகாப்புக் காலாவதியாவது குறித்துப் பயனாளிகளுக்கு நினைவூட்டுவதற்காகக் குறுஞ்செய்தி நினைவூட்டல் முறைமை மற்றும் அழைப்பு மையம் ஆகியனவும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த டிஜிட்டல் இடையீடுகள் வினைத்திறனைக் கூட்டவும், கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும், கள அளவிலான சேவை வழங்கலுக்கும் மேலும் வலுசேர்த்தன.

அனர்த்த அபாய முகாமைத்துவம் ஒரு மையப் பொருளாக இருந்தது. 2025 ஆம் ஆண்டில் வெள்ளப்பெருக்கு, வறட்சி, காட்டு யானை ஊடுருவல்கள், பூச்சித் தாக்கங்கள், பயிர் நோய்கள் மற்றும் பிற விலங்குச் சேதங்கள் போன்ற வழக்கமான அச்சுறுத்தல்களுடன் '்பெங்கல்' சூறாவளியினால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்கள் மற்றும் 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட கால்நடைச் சேதங்களுக்கான காப்புறுதி இழப்பீட்டுச் செலுத்தல்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்தத் இடையீடுகள் மூலம் விவசாயிகள் மற்றும் கால்நடை உரிமையாளர்கள் நிதி ரீதியாகப் பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகையின் விபரம்

- பயிர்க்காப்புறுதி: 104,752.26 ஏக்கர்களைஉள்ளடக்கும்வகையில் 1,816.50 மில்லியன்ரூபாய்.
- கால்நடைக்காப்புறுதி: 221 விலங்குகளைஉள்ளடக்கும்வகையில் 8.9 மில்லியன்ரூபாய்.
- வாகனக்காப்புறுதி : 8 விபத்துகளுக்காக 2.5 மில்லியன்ரூபாய்.
- பொதுக்காப்புறுதி : 0.2 மில்லியன்ரூபாய்.

இந்தச்செலுத்துல்கள்அதிகஅபாயகரமானசூழ்நிலைகளில்விவசாயசமூகத்தின்வாழ்வாதாரங்களைப்பாதுகாப்பதற்கானநிறுவனத்தின்தனித்துவமானபங்களிப்பைத்தெளிவாகஎடுத்துக்காட்டுகின்றன.

2025 ஆம்ஆண்டின்இறுதியில், இலங்கையின்கமத்தொழில்காப்புறுதித்துறையில்முன்னணிபயிர்-காப்புறுதியாளராகவும், தனித்துவமானகால்நடைகாப்புறுதியாளராகவும்சந்தையில்தனதுஆதிக்கத்தைத்தொடர்ந்துதக்கவைத்துக்கொள்ளச்சபையால்முடிந்ததுடன், மூன்றாம்தரப்புமற்றும்பொதுக்காப்புறுதிச்சேவைகள்குறைந்தமட்டத்திலேயேகாணப்பட்டன.
தீவுமுழுவதிலும்உள்ளவிவசாயிகளின்முதன்மைகாப்புறுதியாளராகத்தனதுபங்களிப்பைஉறுதிசெய்து, இத்துறையில்தனதுதலைமையைமேலும்வலுப்படுத்தியும்துறையில்தனதுதலைமைத்துவத்தைமேலும்பலப்படுத்தியும், பயிர்க்காப்பீட்டுத்துறைக்கானசபையின்சந்தைப்பங்கு 90% ஐவிடவிஞ்சிச்சென்றது.

பிரதான பங்குதாரர்களும் ஒருங்கிணைப்பும்

காப்புறுதிமற்றும்ஓய்வூதியத்திட்டங்கள், அனர்த்தஅபாயமுகாமைத்துவம், செயல்பாட்டுநவீனமயமாக்கல்ஆகியவற்றைவினைத்திறன்மிக்கதாகநடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும்பொருட்டு, சபை 2025 ஆம்ஆண்டில்தேசியமற்றும்பிரதேசமட்டத்திலானஅரசுநிறுவனங்கள், நிதிநிறுவனங்கள், அபிவிருத்திப்பங்காளிகள்மற்றும்சமூகஅமைப்புகளுடன்பரந்தஒருங்கிணைப்பைப்பேணிவந்தது.

தேசியமட்டத்தில்சபைகமத்தொழில், கால்நடை, காணிமற்றும்நீர்ப்பாசனஅமைச்சுடன்நெருக்கமாகப்பணியாற்றியதுடன், அங்குகொள்கைவழிகாட்டுதல்களைவழங்குதல், முன்மொழிவுகளைச்சமர்ப்பித்தல்மற்றும்தேசியகமத்தொழில்காப்புறுதிஇலக்குகளுடன்தனதுதிட்டங்களைஇணைத்துச்செயல்படுத்துதல்ஆகியவற்றைமேற்கொண்டது.

2025ஆம்ஆண்டில்தேசியபயிர்க்காப்புறுதித்திட்டத்திற்காகச்சபைக்கு 626 மில்லியன்ரூபாயும், கமக்காரர்ஓய்வூதியத்திட்டத்திற்காக 5,323.87 மில்லியன்ரூபாயும்கிடைத்ததுடன், அந்தப்பணம்காப்புறுதிஇழப்பீடுமற்றும்ஓய்வூதியங்களைஉரியநேரத்தில்பயனாளிகளுக்குவிடுவிப்பதற்காகமட்டுமேபயன்படுத்தப்பட்டது.

மேலும், விவசாயிகளைப்பதிவுசெய்தல், பயிர்மற்றும்கால்நடைசேதங்களைமதிப்பிடுதல்மற்றும்இழப்பீட்டுக்கோரிக்கைகளைமிகவும் திறம்படத்தீர்த்துவைத்தல்ஆகியவற்றிற்காகச்சபை, விவசாயத்திணைக்களம், விவசாயஅபிவிருத்தித்திணைக்களம், மகாவலிஅதிகாரசபை, விலங்குஉற்பத்திமற்றும்சுகாதாரத்திணைக்களம், பிரதேசசெயலகங்கள்மற்றும்நிதிநிறுவனங்களுடன்தொடர்ந்துபணியாற்றியது

பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில், சபை முதன்மை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வெளிக்கள அதிகாரிகளுடன் பின்வருமாறு பணியாற்றியது:

- கமநல சேவை நிலையங்கள்: கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களாகும். இங்கு பணியாற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி (கவிச) உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் விவசாயிகளைச் சேர்த்தல், காப்புறுதித் திட்டப் பிரச்சாரங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வெளிக்கள மட்ட செயல்பாட்டு உதவிகளை வழங்குதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

- விவசாயத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள்: உதவி ஆலோசகர்களால் தொழில்நுட்ப உதவி வழங்குதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பயிர்ச்சேத மதிப்பீடுகளுக்கு வசதி செய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

- பிரதேச கால்நடை அலுவலகங்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தி ஆலோசனை அலுவலகங்கள்: கால்நடை காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், விலங்கு சேத மதிப்பீடுகள் மற்றும் இழப்பீட்டுக் கோரிக்கைகளைச் செய்முறைக்குள்ளாக்கும் பணிகளை முகாமை செய்தன.

காப்புறுதித்திட்டங்களைவிளம்பரப்படுத்துவதற்கும்பதிவுகளைஊக்குவிப்பதற்கும்சபை, விவசாயஅமைப்புகள், 'சிதமு' பெண்கள்சங்கங்கள், அத்துடன்தேயிலைக்கொழுந்துபறிப்போர், ரப்பர், தென்னைமற்றும்ஏனையபெருந்தோட்டமற்றும் வணிகப்பயிர்ச்சங்கங்கள்உட்படப்பொருத்தமான அனைத்துப்பயிர்சார்ந்தசங்கங்களுடனும்இணைந்துபணியாற்றியது.
இதில்தெங்குஅபிவிருத்திச்சபை, ரப்பர்அபிவிருத்திச்சபைபோன்றவிசேடவிவசாயச்சபைகள்மற்றும்ஏனையதொடர்புடையஅரசுநிறுவனங்கள், விழிப்புணர்வுப்பிரச்சாரதிட்டங்கள்மற்றும்வெளிக்களமட்டத்திலானமக்கள்தொடர்புப்பணிகளுக்குத்தங்கள்பங்களிப்பைவழங்கின.
இதற்கும்மேலாக, கமக்காரர்ஓய்வூதியத்திட்டத்திற்குரியகொடுப்பனவுகளைஉரியநேரத்தில்செலுத்துவதற்குவசதிசெய்வதில்தபால்நிலையங்களும்முக்கியப்பங்குவகித்தன.

நன்னீர்மற்றும்உவர்நீர்மீன்பிடிச்சமூகத்திற்குச்சமூகப்பாதுகாப்புப்பாதுகாப்பைவழங்குவதைநோக்கமாகக்கொண்டகடற்றொழிலாளர்ஓய்வூதியத்திட்டம், கடற்றொழில்அமைச்சுமற்றும்தேசியநீர்வாழ்உயிரினவளர்ப்புஅபிவிருத்திஅதிகாரசபையுடன்பூரணஒருங்கிணைப்புடன்ஆரம்பிக்கப்பட்டது.

தனதுசெயல்பாட்டுமற்றும்டிஜிட்டல்திறனைஉயர்த்துவதற்காகச்சபைசர்வதேசஅபிவிருத்திமுகவர்நிறுவனங்களுடனானபங்காண்மைகளைவலுப்படுத்தியது. அதன்படி, GIZ நிறுவனத்தின்நிதிப்பங்களிப்புடனும்MIT நிறுவனத்தின்ஒத்துழைப்புடனும்உருவாக்கப்பட்டதொழில்முனைவுவளதிட்டமிடல் (ERP) அமைப்பில்நிர்வாகம், மனிதவளம், பயிர்மற்றும்கால்நடைக்காப்புறுதி, ஓய்வூதியம்மற்றும்மூன்றாம்தரப்புசெயல்பாடுகளுக்கானமொடியூல்கள்சேர்க்கப்பட்டிருந்தன.

2026ஆம்ஆண்டின்முதலாவதுகாலாண்டிற்குள்இந்தஅமைப்பின்பணிகளைமுடித்தபின்னர், அதன்வெளிக்களமட்டநடைமுறைப்படுத்தல்பணிகள்தொடர்ந்துமேற்கொள்ளப்படும்.
விவசாயஅபாயமுகாமைத்துவம், காலநிலை-தாக்குப்பிடிக்கும்ஆற்றல்மற்றும்சமூகப்பாதுகாப்புமுயற்சிகளுக்குஆதரவளிப்பதற்காக, கமத்தொழில்அமைச்சுஊடாகஉலகவங்கியின்IRDCRPதிட்டத்துடனும்சபைஇணைந்துபணியாற்றியது.

மக்கள்தொடர்புமற்றும்திட்டங்களுக்கானபங்களிப்பைஉயர்த்துவதற்காக, சபைவிவசாயிகள், மீனவர்கள்,
அரசஉத்தியோகத்தர்கள்மற்றும்சமூகஅமைப்புகளுக்காகத்தீவுமுழுவதும்விழிப்புணர்வுத்திட்டங்களையும்பயிற்சிமுகாம்களையும்நடத்தியது.

'சயுர'தனிநபர்விபத்துக்காப்புறுதித்திட்டம்மற்றும்கமக்காரர்ஓய்வூதியத்திட்டம்குறித்தவிழிப்புணர்வையும்பதிவுகளையும்உயர்த்துவதற்காகப்பிரச்சாரப்போட்டிகள்,
பணப்பரிசுகள்மற்றும்மிகச்சிறந்ததிறமைகளைவெளிப்படுத்தியமுகவர்களுக்குக்குடைகளைவழங்குதல்போன்றஊக்கப்பரிசுகள்பயன்படுத்தப்பட்டன.

இதுதவிர, ஆபத்துஒருங்கிணைப்பு, தரவுப்பகிர்வுமற்றும்வெளிக்களமட்டசெயல்பாடுகளுக்காகப்பாதுகாப்புஅமைச்சின்கீழ்இயங்கும்அனர்த்தமேலாண்மைமையத்துடனும், தேசியவறட்சித்திட்டத்தைத்தயாரிப்பதற்காகவிசேடமாகச்சுற்றாடல்அமைச்சடனும்சபைஇணைந்துபணியாற்றியது.
இதன்மூலம்காப்புறுதிச்செயல்பாடுகள்நிலையானவிவசாயநடைமுறைகள்மற்றும்தேசியவறட்சிமுகாமைத்துவமூலோபாயங்களுடன்இணைந்துசெயல்படுவதுஉறுதிசெய்யப்பட்டது.

இந்தப்பலமட்டஒத்துழைப்புகளின்மூலம், சபைதனதுநிறுவனஉறவுகளைவலுப்படுத்திக்கொண்டது;
செயல்பாட்டுத்திறனைஉயர்த்திக்கொண்டது;
காப்புறுதிமற்றும்சமூகப்பாதுகாப்புத்திட்டங்கள்தேசிய,
பிரதேசமற்றும்சமூகமட்டத்தில்இலக்குவைக்கப்பட்டபயனாளிகளைமிகவும்பயனுறுதிமிக்கதாகச்சென்றடைவதைஉறுதிசெய்தது.

பொருளாதார மற்றும் அரசியல் சூழலின் தாக்கம்

கமத்தொழில்மற்றும்கமநலக்காப்புறுதிச்சபை, இலங்கைமுழுவதும்காப்புறுதிமற்றும்ஓய்வூதியத்திட்டங்களுக்கானஅணுகல்மற்றும்அவற்றின்பங்களிப்பின்மீதுநேரடியாகப்பாதிப்பைஏற்படுத்தும்ஒருஇயங்குநிலைபொருளாதாரமற்றும்அரசியல்சூழலுக்குள்செயல்படுகிறது. 2025 ஆம்ஆண்டில்பணவீக்கம், வட்டிவிகிதங்கள்மற்றும்செலாவணிவிகிதஏற்றஇறக்கங்கள்உள்ளிட்டபேரினப்பொருளாதாரநிலைமைகள், நிறுவனத்தின்செயல்பாட்டுச்செலவுகள்மற்றும்வளத்திட்டமிடல்பணிகளைப்பாதித்தன.
மொத்தஉள்நாட்டுஉற்பத்தியில்விவசாயத்துறைவழங்கும்பங்களிப்பு, விவசாயிகளின்வருமானத்தைஸ்திரப்படுத்தவும்உற்பத்தித்திறனைப்பேணவும்அபாயமுகாமைத்துவத்தலையீடுகள்கொண்டமுக்கியத்துவத்தைவலியுறுத்துகிறது.

காப்புறுதிப்பாதுகாப்பிற்கானஅணுகல்விவசாயிகளின்நிதித்திறனைப்பொறுத்தேதீர்மானிக்கப்படுகிறது.பெரும்பாலானசிறுவிவசாயிகளுக்குக்காப்புறுதித்தவணைக்கட்டணங்களைச்செலுத்துவதற்குபோதுமானசெலவிடக்கூடியவருமானம்அல்லதுசேமிப்புகள்இருப்பதுஅத்தியாவசியமானதுஎன்றாலும், பருவகாலவருமானவேறுபாடு, பயிர்களுக்குக்கிடைக்கும்சந்தைவிலைமற்றும்உள்ளீட்டுச்செலவுகள்என்பவற்றால்இதில்பாதிப்புகள்ஏற்படலாம். இந்தப்பொருளாதாரயதார்த்தம், விவசாயிகள்அதிகநிதிச்சுமையின்றிகாப்புறுதித்திட்டங்களில்பங்களிக்கக்கூடியவகையில், காப்புறுதித்திட்டங்களைவடிவமைத்தல், தவணைக்கட்டணக்கட்டமைப்புகளைஉருவாக்குதல்மற்றும்மேம்பாட்டுமூலோபாயங்களைத்தீர்மானித்தல்ஆகியவற்றில்சபைபின்பற்றும்நடவடிக்கைகளைநேரடியாகப்பாதிக்கிறது.

அரசாங்கத்தின்நிதிக்கொள்கைகள்மற்றும்வரவுசெலவுத்திட்டஆதரவுஆகியவைசபையின்செயல்பாட்டுத்திறனைத்தீர்மானித்தமுக்கியகாரணிகளாகும்.

2025 ஆம்ஆண்டில்தேசியபயிர்க்காப்புறுதித்திட்டத்திற்காக 626 மில்லியன்ரூபாயும், கமக்காரர்ஓய்வூதியத்திட்டத்திற்காக 5,323.87 மில்லியன்ரூபாயும்ஒதுக்கீடுசெய்யப்பட்டதால், காப்புறுதிஇழப்பீடுமற்றும்ஓய்வூதியங்களைஉரியநேரத்தில்பயனாளிகளுக்குவிடுவிக்கச்சபைக்கு முடிந்தது.
இதன்மூலம்சமூகப்பாதுகாப்புமற்றும்விவசாயஅபாயமுகாமைக்கானஅரசாங்கக்கொள்கைக்கருவியாகச்சபைகொண்டுள்ளபங்குமேலும்உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், மானியங்கள், வரிகள்மற்றும்செலவினமுன்னுரிமைகள்உள்ளிட்டபரந்தநிதிச்சூழலும்நிறுவனத்தின்திட்டமிடல்,
வளஒதுக்கீடுமற்றும்செயல்பாட்டுநெகிழ்வுத்தன்மைஆகியவற்றில்தாக்கத்தைஏற்படுத்தியது

அரசியல்மற்றும்ஒழுங்குறுத்தல்வளர்ச்சிகள்,
சபையின்மூலோபாயமற்றும்செயல்பாட்டுமுடிவுகளைவடிவமைக்கப்பங்களித்தன.
விவசாயஅபிவிருத்தி,
அனர்த்தஅபாயமுகாமைமற்றும்காலநிலைத்தகவமைப்புகுறித்தகொள்கைகள்சபையின்முன்னுரிமைகளுக்குவழிகாட்டின;சட்டக்கட்டமைப்புகள்சட்டபூர்வஇணக்கம்,
பொறுப்புக்கூறல்மற்றும்தேசியஇலக்குகளுடன்இணைந்துசெயல்படுவதைஉறுதிசெய்தன.
இந்தஅரசியல்காரணிகள்வாய்ப்புகளையும்வரம்புகளையும்உருவாக்கியதுடன்,
இதன்காரணமாகமாறிவரும்நிலைமைகளுக்குஏற்பத்தனதுமூலோபாயங்களைச்சரிசெய்துகொள்ளச்சபைக்குநேரிட்டது.

உலகளாவியமற்றும்பிராந்தியபொருளாதாரப்போக்குகள், வர்த்தகக்கொள்கைகள்மற்றும்சர்வதேசஅபிவிருத்திப்பங்காண்மைகள்என்பனசெயல்பாட்டுச்சூழலின்மீதுமேலும்தாக்கங்களைஏற்படுத்தின.
கமத்தொழில்துறையின்சாதாரணமற்றும்அவசரநிலைமைகளுக்குவெற்றிகரமாகப்பதிலளிப்பதற்கானசபையின்திறனைவிரிவுபடுத்தி, நன்கொடையாளர்கள்மற்றும்தொழில்நுட்பமுகவர்நிறுவனங்களுடனானஒத்துழைப்புகள்டிஜிட்டல்நிலைமாற்றம், செயல்முறைத்தரப்படுத்தல்மற்றும்செயல்பாட்டுத்திறனைஉயர்த்துவதற்குஉதவியாகஇருந்தன.

இந்தப்பொருளாதார,நிதிமற்றும்அரசியல்காரணிகளைக்கண்காணிப்பதன்மூலமும், தவணைக்கட்டணங்களைச்செலுத்துவதற்கானவிவசாயிகளின்திறனைக்கருத்தில்கொள்வதன்மூலமும்,
சபைதனதுகாப்புறுதிமற்றும்ஓய்வூதியத்திட்டங்கள்மீள்தன்மையுடன்இருப்பதைஉறுதிசெய்ததுடன்,
உருவெடுத்துவரும்பேரினப்பொருளாதாரமற்றும்ஒழுங்குறுத்தல்சவால்களுக்குமத்தியிலும்தீவுமுழுவதும்உள்ளவிவசாயிகள், கால்நடைஉரிமையாளர்கள்மற்றும்மீனவர்களுக்குவிளைவாற்றல்மிக்கசமூகப்பாதுகாப்பைத்தொடர்ந்துவழங்கிவந்தது.

5

செயலாற்றுகை மீளாய்வும் முன்னேற்றப் பகுப்பாய்வும்



நிதிசார் செயலாற்றுகை, காப்புறுதிக் காப்பீடு மற்றும் சமூகப் பாதுதகாப்பு பங்களிப்பு

2025 ஆம் ஆண்டின் நிதிசார் மற்றும் தொழிற்பாடுகளின் முன்னேற்றம்

2025 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதித் துறையின் நிதிசார் உறுதிநிலை, தொழிற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் கமக்காரர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளின் விரிவாக்கத்தை மேன்மேலும் பலப்படுத்துவதில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை வெற்றிகண்டது.

2025 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதித் துறையில் உயர்மட்ட நிதிசார் செயலாற்றுகையையும் தொழிற்பாடுகளில் வளர்ச்சியையும் சபையினால் அடைய இயலுமாயிற்று. வருடத்திற்குள் எமது விவசாயக் காப்புறுதித் திட்டம் மூலமாக 1,205.8 மில்லியன் ரூபாய் ஒட்டுமொத்த தொழிற்பாட்டு இலாபத்தையும் 685.8 மில்லியன் ரூபாய் தேறிய இலாபத்தையும் ஈட்டியதன் மூலம் மிகவும் உறுதியான நிதிசார் வளர்ச்சியை நாங்கள் வெளிக்காட்டினோம்.

கமக்காரர்களுக்கான விரிவான காப்புறுதிக் காப்பீடு

காலநிலை மாற்றங்களிலிருந்து கமக்காரர்களை விடுவித்துக்கொள்வதற்காக கட்டாயமான 6 பயிர்களுக்காக அதாவது நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா, மிளகாய் போன்ற பயிர்களுக்காக அமுலாக்கப்பட்டு வருகின்ற காப்புறுதிக் காப்பீட்டுக்கான தவணைக் கட்டணங்களை விவசாயிகளிடமிருந்து அறவிட்டுக் கொள்ளாமல் ஏக்கருக்கு 40,000 ரூபாய் உச்ச எல்லைக்கு கட்டுப்பட்டதாக காப்பீட்டினை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்காக அரசாங்கத்தினால் 1,500 மில்லியன் ரூபா முழுமையான பங்களிப்பு வழங்கப்பட்டது. இதன் கீழ் 81,055 விவசாயிகளின் 94,169 ஏக்கர் பயிர் நிலங்களுக்காக 1,648 மில்லியன் ரூபாய் சேத இழப்பீட்டாக செலுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக அனைத்து இடர்வரவுகளையும் உள்ளடக்கத்தக்கதாக ஏக்கருக்கு 100,000 ரூபாய் வரையான இழப்பீடு செலுத்துகின்ற மேலதிக காப்புறுதித் திட்டமொன்றையும் நாங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினோம். மேலும், தேசிய பயிர்க் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2025 ஆம் ஆண்டில் இந்நாட்டின் இரண்டு பயிர்ச்செய்கைப் போகங்களையும் உள்ளடக்கத்தக்கவகையில் 85,319 கமக்காரர்களுக்கு சொந்தமான 101,983.69 ஏக்கர் பயிர் நிலங்கள் தேசிய காப்புறுதிக் காப்பீட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

கமக்காரர் மற்றும் மீனவர் சமுதாயத்திற்கான சமூகப் பாதுகாப்பு

எமது பிரதானமான சமூகப்பாதுகாப்பு அரும்பணியான ஓய்வூதியம் செலுத்தலின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 178,998 கமக்காரர்களுக்காக 4,989 மில்லியன் ரூபாய் தேறிய பணத்தொகை கமக்காரர் ஓய்வூதியமாகவும் 6,359 கடற்றொழிலாளர்களுக்காக 96 மில்லியன் ரூபாய் கடற்றொழிலாளர் ஓய்வூதியமகவும் வெற்றிகரமாக செலுத்தி முடிக்கப்பட்டது.

இந்த நன்மைகள் மூலமாக கமக்காரர் மற்றும் மீனவர் சமுதாயத்தின் இளைப்பாற்றுக்கால பொருளாதார உறுதிநிலைக்காக பலம்பொருந்திய பங்களிப்பினை வழங்கி "கமக்காரரின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடுவதற்கு அப்பால்சென்று அவர்களின் எதிர்கால பாதுகாப்பிற்கு உத்தரவாதமளித்தல் " எனும் சபையின் விரிவான சமூக அரும்பணி மென்மேலும் ஈடேற்றப்பட்டது.

பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள்

செயலாற்றுகை மீளாய்வும் மூலோபாய ஒருங்கிணைப்பும்

இந்த பகுதியானது கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் (க.க.கா.ச) 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயலாற்றுகையின் விரிவான மீளாய்வினைத் தருகின்றது. சபையின் மூலோபாய நோக்கங்கள், பிரதான தொழிற்பாட்டு முன்னுரிமைகள் மற்றும் செயலாற்றுகை இலக்குகள் என்பவற்றை தேசிய விவசாய அபிவிருத்தி முன்னுரிமைகளுடனும் விவசாய சமூகத்தின் சமூகப் பாதுகாப்பு மற்றும் மீள்தன்மைக்கான அரசாங்கத்தின் கொள்கைகள் என்பவற்றுடனும் கோடிட்டுக் காட்டுகின்றது.

நிதிசார் KPIS	
3,450 மில். ரூ. மொத்த வருவாய்	**853 மில். ரூ.** வரிக்கு முந்திய இலாபம் (க.கா.ச.)
12,260 மில். ரூ. முதலீட்டு வருமானம்	**(1,906) ரூ.** இலாபத்திற்கு முன்னரான வரி (குழுமம்)
13,049 ரூ. மொத்த சொத்துக்கள்	**731 மில். ரூ.** வரிக்கு பிந்திய இலாபம் (க.கா.ச.)
1,720 மில். ரூ. இழப்பீடு செலுத்துதல்	**(2,028) மில். ரூ.** வரிக்கு பிந்திய இலாபம் (குழுமம்)
5,083 மில். ரூ. கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல்	**91 மில். ரூ.** கடற்றொழிலாளர் ஓய்வூதியம் செலுத்துதல்

தொழிற்பாடுசார்ந்த KPIS - சேவை வழங்கல் அளவீடுகள்	
30 கிளை அலுவலகம்	**1,922** மொத்த சேவை நிலையங்கள்
25 உள்ளடக்கப்பட்ட மாவட்டங்கள்	**3,606** முகவர் வலையமைப்பு
24x7 அழைப்பு நிலையங்கள்	

அபிவிருத்திசார் KPIS – மனித மூலதனமும் சமூகத் தாக்கமும்	
307 மொத்த ஊழியர்களை	**25** பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
53% பெண்களின் பிரதிநிதித்துவம்	**2.6 மில். ரூ.** வழங்கிய கல்விசார் கடன்
94% பணியாளர் தக்கவைப்பு விகிதம்	

6

நிதிசார் செயலாற்றுகை



பத்து வருடகால நிதிசார் பொழிப்பு

வருடாந்த மொத்த இலாபம் - கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (குழுமம்)

(மி.ரூ.)

	2025	2024	2023	2022	2021	2020	2019	2018	2017	2016
மொத்த வருவாய்	3,449.93	4,013.93	3,848.42	3,676.44	3,655.16	3,724.63	3,566.55	4,569.71	5,916.38	972.87
தொழிற்பாட்டு செலவினங்கள்	(9,996.70)	(11,571.62)	(11,775.59)	(9,493.46)	(9,961.99)	(11,049.21)	(9,895.46)	(10,016.05)	(12,313.74)	(6,655.42)
தொழிற்பாட்டு மிகைநிலை	(6,546.76)	(7,557.69)	(7,927.18)	(5,817.01)	(6,306.83)	(7,324.58)	(6,328.90)	(5,446.34)	(6,397.36)	(5,682.55)
அரசாங்கக் கொடை	5,326.63	5,011.63	4,601.23	4,158.00	4,000.00	4,649.63	3,203.00	2,835.00	2,760.00	2,690.00
பிற வருமானம்	35.79	22.21	18.22	9.82	11.14	11.45	12.52	7.56	51.59	6.89
மொத்த செலவுகள்	(722.20)	(658.34)	(576.82)	(486.77)	(336.20)	(327.95)	(328.96)	(307.82)	(293.47)	(269.11)
வரிக்கு முந்தைய லாபம்	(1,906.55)	(3,182.19)	(3,884.55)	(2,135.97)	(2,631.89)	(2,991.45)	(3,442.35)	(2,911.60)	(3,879.24)	(3,254.77)
வருமான வரிச் செலவுகள்	(121.34)	(124.23)	(150.08)	(111.21)	-	-	-	-	-	-
வரிக்குப் பிந்திய இலாபம்	(2,027.89)	(3,306.41)	(4,034.63)	(2,247.18)	(2,719.49)	(3,061.51)	(3,486.25)	(2,968.84)	(3,883.29)	(3,273.66)
இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.	**(2,113.57)**	**(3,386.88)**	**(3,989.87)**	**(2,343.21)**	**(2,700.79)**	**(3,083.72)**	**(3,505.30)**	**(2,969.07)**	**(3,895.42)**	**(3,260.99)**

வருடாந்த மொத்த இலாபம் – கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

(மி.ரூ.)

	2025	2024	2023	2022	2021	2020	2019	2018	2017	2016
மொத்த வருவாய்	637.94	623.28	502.03	390.56	390.85	344.40	298.55	282.79	156.47	737.04
தொழிற்பாட்டு செலவினங்கள்	(1,839.81)	(1,892.18)	(2,220.02)	(769.18)	(1,704.90)	(2,129.08)	(2,487.01)	(3,253.78)	(5,654.23)	(404.49)
தொழிற்பாட்டு மிகைநிலை	1,205.85	1,799.76	1,268.23	2,663.14	1,752.00	1,401.34	878.06	1,144.73	80.94	377.72
பிற வருமானம்	28.57	17.21	14.35	6.75	8.16	8.29	9.14	4.00	130.12	122.51
நிர்வாகச் செலவுகள்	(381.58)	(353.56)	(299.86)	(229.10)	(184.22)	(179.61)	(184.27)	(169.04)	(160.85)	(144.02)
மொத்த செலவுகள்	(0.21)	(0.35)	(0.21)	(0.10)	(0.07)	(0.16)	(0.75)	(0.69)	(0.28)	(0.39)
வரிக்கு முந்தைய லாபம்	852.63	1,463.06	982.50	2,440.68	1,575.88	1,229.86	702.19	979.00	49.93	355.83
வருமான வரிச் செலவுகள்	(121.34)	(124.23)	(150.08)	(111.21)	-	-	-	-	-	-
வரிக்குப் பிந்திய இலாபம்	731.29	1,338.84	832.42	2,329.47	1,488.27	1,159.80	658.28	921.76	45.88	336.94
இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.	685.82	1,274.32	877.28	2,207.80	1,494.36	1,153.68	652.34	921.08	42.36	339.90

இலாபத்தன்மை

- **கமத்தழில் காப்புறுதித் திட்டம்**



	1 2016	2 2017	3 2018	4 2019	5 2020	6 2021	7 2022	8 2023	9 2024	10 2025
தொழிற்பாட்டு இலாபம் (மில். ரூ.)	377.7	80.9	1,144.7	878	1,401.3	1,752.0	2,663.0	1,268.2	1,799.7	1,205.9
தேறிய இலாபம் (மில். ரூ.)	339.9	42.3	921.0	652.3	1,153.7	1,494.4	2,208.0	877.0	1,274.3	685.8

➢ கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்



	1 2016	2 2017	3 2018	4 2019	5 2020	6 2021	7 2022	8 2023	9 2024	10 2025
வருமானம் (மில் ரூ.)	221.6	208.4	211.9	223.4	209.8	224	164.4	225.9	196.8	297.7
தொழிற்பாட்டுச் செலவு (மில். ரூ.)	2,432.2	2,679.4	3,271.2	3,144.6	4,555	3,766	3,967.9	4,539.6	4,895.4	5,132.8

- **கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்**



	1	2	3	4	5	6	7	8	9	10
	2016	2017	2018	2019	2020	2021	2022	2023	2024	2025
வருமானம் (மில் ரூ.)	60.4	56.1	69.6	53.03	29.6	35.2	102.5	134.1	125.1	106.6
தொழிற்பாட்டுச் செலவு (மில். ரூ.)	57.9	63.7	66	67.2	115.4	78.7	81.7	87.2	91.6	94.8

வருடாந்த காப்புறுதிக் கட்டுப்பண வருமானம்





(மி. ரூ.)

காப்பீட்டுத் திட்டம்	2025	2024	2023	2022	2021	2020	2019	2018	2017	2016
கால்நடைவளம்	26.23	19.63	15.59	5.25	11.07	5.78	7.87	10.59	13.39	10.57
சுவசெத காப்புறுதி / தனியாள் விபத்து	38.34	56.00	32.30	18.55	9.04	13.78	9.42	6.34	5.31	15.61
ஆசைவுள்ள ஆதனம்	371.07	358.85	353.44	311.04	296.50	278.94	220.15	137.85	41.91	7.81
கெத்தட்ட அருண (கட்டாய பயிர்க் காப்புறுதி)	191.06	178.80	90.95	50.99	67.84	43.62	58.07	119.97	65.64	667.54
உபஉணவுப் பயிர்கள்	11.24	9.99	9.75	4.72	6.41	2.28	3.05	8.04	30.01	30.09
கிடங்கு காப்பீடு									0.20	
மொத்தம்	637.94	623.28	502.03	390.56	390.85	344.40	298.55	282.79	156.47	731.63

7

சேவை வழங்கலிலான செயலாற்றுகையும் முன்னேற்றமும்



கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

1973 இன் 27 ஆம் இலக்க கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட இச்சபை 50 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் விவசாயிகள் மற்றும் மீனவர் சமுதாயங்களுக்காக பல்வேறு காப்புறுதி செயற்றிட்டங்களை அறிமுகஞ்செய்து அமுலாக்கி வந்துள்ளது. 1973 ஆம் ஆண்டில் நெற் செய்கையில் ஆரம்பித்த காப்புறுதிச் செயற்பாங்கு 2025 ஆம் ஆண்டளவில் செயற்றிட்டங்களை விரிவாக்கி காப்புறுதி தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக விவசாயிகளாலும் மீனவர்களாலும் கட்டுப்படுத்த முடியாத காரணங்களின்கீழ் (இயற்கையின் பாதிப்பு) இடம்பெறுகின்ற சேதங்களுக்காக காப்பீடுகளை வழங்கி அவர்களின் பொருளாதார நிலைமையை உறுதிநிலைப்படுத்துவதற்காக சபை பாரிய சேவையை ஈடேற்றியுள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் காப்புறுதிப் பிரிவு விவசாயிகளின் நடப்புத் தேவைகளுக்கிணங்கவும் சந்தைக் கேள்விக்கிணங்கவும் பலவிதமான காப்புறுதிச் செயற்றிட்டங்களை சந்தைக்கு அறிமுகஞ் செய்து வருகின்றது. காப்புறுதிப் பிரிவு மேற்கொண்டு வருகின்ற பிரதான பணியாக அமைவது பயிர்ச்செய்கைக் காப்புறுதி, கால்நடைக் காப்புறுதி, சுகாதார மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி செயற்றிட்டங்களைத் தயாரித்தல், சந்தைத் தேவைகளுக்கமைவாக இற்றைப்படுத்துதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் சேத இழப்பீட்டுச் செயற்பாங்கினை நெறிப்படுத்த இடர்வரவினை முகாமைசெய்தல் என்பனவாகும்.

இதன்கீழ் காப்புறுதிப் பிரிவினால் இற்றைவரை அறிமுகஞ்செய்து நடைமுறைப்படுத்தி வரப்படுகின்ற காப்புறுதிச் செயற்றிட்டங்கள் பின்வருமாறு அமையும்.

பயிர்ச்செய்கைக் காப்புறுதி



கட்டாய பயிர்க் காப்புறுதி

களத்தில் பரவலாக பயிர்செய்யப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட ஆறு பிரதான விவசாயப் பயிர்கள் தொடர்பில் அரச பங்களிப்புடனான காப்புறுதிக் காப்பீடு உரித்தாகும்.
(நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோயா)



கிழங்கு மற்றும் மரக்கறி பயிர்க் காப்புறுதி

கிழங்குப் பயிர்கள், மலைநாட்டு மற்றும் தாழ்நில மரக்கறி வகைகளுக்கான காப்புறுதி வழங்கப்படும். (வற்றாளை, மரவள்ளி, கிரி அல (பால் கிழங்கு அல்லது ஒரு வகை சேப்பங் கிழங்கு) , பீட்றூட், கோவா, கெரட், லீக்ஸ், சின்ன வெங்காயம், கத்தரி, போஞ்சி, கறி மிளகாய், தக்காளி, பாகல், பறங்கிக்காய்)



களப் பயிர்ச்செய்கை காப்புறுதி

ஒருசில கரடுமுரடான தானிய வகைகள், அவரையினத்தைச் சேர்ந்த பயிர்கள் மற்றும் எண்ணெய் பயிர்களுக்காக களப் பயிர்ச்செய்கை காப்புறுதி வழங்கப்படுகின்றது. (கவ்பி, பயறு, உழுந்து, குரக்கன், நிலக்கடலை, எள்ளு, கொள்ளு)



ஏனைய பயிர்களுக்கான காப்புறுதி

அன்னாசி, வாழை மற்றும் பப்பாசி போன்ற வணிகப் பழச் செய்கைகளுக்கான காப்புறுதி



வணிகப் பயிர்க் காப்புறுதி

இலங்கையில் வணிகரீதியான மற்றும் ஏற்றுமதி நோக்கத்திற்காக பயிரிடப்படுகின்ற பிரதான பலசரக்குப் பொருட்கள் தொடர்பான காப்புறுதி
(இஞ்சி, மஞ்சள், கறுவா, மிளகு)



வெற்றிலைச் செய்கை காப்புறுதி

வெற்றிலைச் செய்கை நோய்கள் பீடிக்கக்கூடியதாக அமைவதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதிச் சந்தையை நோக்கமாகக்கொண்டுவளர்க்கப்படுகின்ற வணிகரீதியான வெற்றிலைச் செய்கையின் இடர்வரவு முகாமைத்துவத்திற்கானது



தெங்கு வளர்ப்புக் காப்புறுதி

இயற்கையான காரணங்களின் பேரிலும் குறிப்பாக காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாகவும் அழிவடைகின்ற பாரிய அளவிலான வணிக தெங்கு வளர்ப்புச் செய்கைக்கான காப்புறுதி



இரப்பர் செய்கை காப்புறுதி

இலங்கையின் பிரதான பெருந்தோட்டப் பயிரான இரப்பர் செய்கைக்கு ஏற்படுகின்ற நோய்த் தாக்கங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் வணிக இரப்பர் செய்கைக்கு ஏற்படுகின்ற பாரியளவிலான சேதங்களை ஈடுசெய்வதற்கான காப்புறுதி



கோப்பிச் செய்கைக் காப்புறுதி

மலைநாட்டிலும் தாழ்நிலங்களிலும் பயிர்செய்யப்படுகின்ற பாரியளவிலான கோப்பிச் செய்கைக் காப்புறுதிக்கானது (தயாரிக்கப்பட்டு வருகின்றது)



கரும்புச் செய்கைக் காப்புறுதி

பாரிய அளவிலான வணிகக் கரும்புச் செய்கை காப்புறுதிக்கானது



விதை நெல் செய்கை விவசாயப் பண்ணைக் காப்புறுதி

தரத்தில் உயர்ந்த விவசாயத் திணைக்களத்தின் விதைப்புரையைக் கொண்ட வணிக விதைநெல் விவசாயப் பண்ணைகளை காப்புறுதிசெய்து நெல்லுற்பத்திக்கு உறுதுணையாக அமைதல்



காளான் வளர்ப்புக் காப்புறுதி

காளான் வளர்ப்பு தொடர்பில் தொழில்முனைவோரது ஆர்வம் அதிகரித்துள்ளதால் வணிகரீ தியான காளான் வளர்ப்பிற்கான காப்புறுதி

பொதுக் காப்புறுதி



விவசாய உபகரணக் காப்புறுதி

நவீன இயந்திரசாதனங்களை பாவித்து விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் விவசாய உபகரணங்களுக்கான காப்புறுதி



டிராக்டர் காப்புறுதி

விவசாய நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படுகின்ற இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர உழவு இயந்திரக் (டிரெயிலர் உள்ளிட்டதாக) காப்புறுதி



களஞ்சியக் காப்புறுதி

பெறப்பட்ட விளைச்சலை இயற்கை அனர்த்தங்கள், காட்டு யானைகள், திருடர்கள் காரணமாக ஏற்படுகின்ற சேதங்களின் இடர்வரவு முகாமைக்காக கமக்காரர்களின் பிரத்தியேக நெல் கையிருப்புகளையும் நெற் களஞ்சியங்களையும் காப்புறுதி செய்தல்



பசுமைக் குடில்களுக்கானது

பாதுகாக்கப்பட்ட குடிலை உள்ளிட்ட பசுமைக்குடில் துணைச்சாதனங்கள் இதன்போது காப்புறுதி செய்யப்படும்.



பசுமைக்குடில் செய்கைகளுக்கானது

பசுமைக் குடிலுக்குள் செய்கைபண்ணப்படுகின்ற பயிர்கள் இதன்போது காப்புறுதி செய்யப்படும்

சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி



சுவசெத சுகாதாரக் காப்புறுதி

கமக்காரர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களும் திடீர் விபத்துக்குள்ளாகி அல்லது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதால் ஏற்படுகின்ற நிதிசார் சிரமங்களை குறைப்பதற்கான திட்டம்



கமக்காரர்களுக்கான வருடாந்த திடீர் விபத்துக் காப்புறுதி

விவசாயி திடீர் விபத்து காரணமாக இறத்தல், நிரந்த அல்லது தற்காலிக உடலியலாமைக்கான திட்டம்

New



பனை, தெங்கு, கித்துள் திடீர் விபத்துக் காப்புறுதி

65 வயதினைவிடக் குறைவான, சிறந்த தேகாரோக்கிய நிலையில் இருக்கின்ற, உயர் அபாயநேர்வு கொண்ட பனை, தெங்கு மற்றும் கித்துள்சாரந்த தொழில்களில் ஈடுபடுபவர்களுக்காக

New



கறுவா திடீர் விபத்துக் காப்புறுதி

65 வயதினைவிடக் குறைவான, சிறந்த தேகாரோக்கிய நிலையில் இருக்கின்ற, உயர் அபாயநேர்வு கொண்ட கறுவா அடித்தல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்காக

New



சயுர திடீர் விபத்துக் காப்புறுதி

65 வயதினைவிடக் குறைவான, சிறந்த தேகாரோக்கிய நிலையில் இருக்கின்ற, உயர் அபாயநேர்வு கொண்ட மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்காக



சுழியோடிகளுக்கான திடீர் விபத்துக் காப்புறுதி

இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதற்காக உயர் அபாயநேர்வு கொண்ட தொழிலில் ஈடுபடுகின்ற சுழியோடிகளுக்கு திடீர் விபத்துகளால் ஏற்படக்கூடிய இடர்வரவினை குறைப்பதற்காக இந்த காப்புறுதித்திட்டம் அமுலில் உள்ளது.

கால்நடை வளங்கள் காப்புறுதி



மாடுகள் ,ஆடுகள்
செம்மறியாடுகள் காப்புறுதி

பாரிய அளவிலான மற்றும் சிறிய அளவிலான மாடுகள், ஆடுகள் மற்றும் செம்மறியாடுகள் வளர்ப்பில் ஈடுபடுகின்றவர்களுக்காக



பன்றிகள் காப்புறுதி

2025 ஆம் ஆண்டின் இறுதியில் தோன்றிய ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் நிலைமை காரணமாக சீரழிந்த பன்றி வளர்ப்புத் தொழிலை மீள் நிறுவுவதற்காக விஞ்ஞானரீதியான ஆய்வொன்றினை மேற்கொண்டு இந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த காப்புறுதி செயற்றிட்டங்கள் மத்தியில் மீனவர்களுக்காக வழங்கப்படுகின்ற "சயுர" திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம், பனை, தெங்கு, கித்துள் ஆகிய தொழில்களில் ஈடுபடுகின்ற உயர் அபாயநேர்வு கொண்டவர்களைப்போன்றே கறுவாத் தொழில்த்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காகவும் வருடாந்த திடீர் விபத்து காப்புறுதிக்காப்பீடு 2025 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்டது.

காப்புறுதிச் செயற்றிட்டங்களை வெளிக்கள மட்டத்தில் அமுலாக்குதல்

சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மாவட்ட மட்டத்தில் அனைத்து காப்புறுதிச் செயற்றிட்டங்கள் பற்றியும் வெளிக்கள மட்டத்திலான விழிப்பூட்டலை மேற்கொண்டு வருகின்றார்கள். காப்புறுதிச் செயற்றிட்டத்திற்கிணங்க விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கடற்றொழில் அமைச்சு, தேசிய நீரின வளர்ப்பு அதிகாரசபை மற்றும் ஏனைய வெளிக்கள மட்டத்தில் இயங்கி வருகின்ற அனைத்து நிறுவனங்கள் ஊடாக நகர்சார் மற்றும் கிராமிய மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி வருகிறார்கள்.

இழப்பீடு செலுத்துதல்

2025 ஆம் ஆண்டில் பயிர்க்காப்புறுதிச் செயற்றிட்டங்கள் மத்தியில் 2024 - 25 பெரும்போகத்தில் ஏற்பட்ட "ஃபிங்கல்" சூறாவளி காரணமாக பயிர்ச்சேதம் ஏற்பட்ட கமக்காரர்களுக்கு போகம் நிறைவடைவதற்கு முன்னராகவே மதிப்பீட்டு பணிகளைத் துரிதமாக நிறைவுசெய்து இழப்பீட்டுத் தொகைகளை செலுத்தி முடித்தமையும் 2025 சிறுபோகத்தில் பயிர்ச்சேதத்திற்கான கொடுப்பனவுகளில் 80% இழப்பீடு செலுத்தி முடித்தமையும்.

போகம்	கமக்காரர் எண்ணிக்கை	ஏக்கரளவு	இழப்பீட்டுத் தொகை ரூ. (மில்லியன்)
2024 சிறுபோகம்	6,558	6,803	121,354,841
2024/25பெரும்போகம்	73,865	86,844	1,514,227,538
2025 சிறுபோகம்	635	522	12,544,184
2024 மகா மற்றும் மேல்முறையீடுகளுக்கான கட்டணங்கள்	4,261	7,814	107,096,587
கூட்டுத் தொகை	**85,319**	**101,983**	**1,755,223,150**

விலங்கினம்	வருமானம் ரூ. (மில்லியன்)	இழப்பீடு செலுத்துதல் ரூ. (மில்லியன்)
மாடுகள் காப்புறுதி	14,844,746	4,585,181
ஆடுகள் காப்புறுதி	12,384,777	4,388,723
செல்லப் பிராணிகள்	3,700	-
கூட்டுத் தொகை	**27,233,223**	**8,973,904**

சனாதிபதி செயலணி மூலமாக மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவிற்கிணங்க பன்றிகளுக்கான காப்புறுதிக்கான அவசியம் தோன்றியதால் அது பற்றி கற்றாராய்தல் தொடங்கப்பட்டது. 2026 ஆம் ஆண்டில் முன்னோடிக் கருத்திட்டமாக அது ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக்கு விழிப்பூட்டப்பட்டது.

அத்துடன் பசுக் கன்றுகள், எருது கன்றுகளை காப்புறுதி செய்வதற்கான பல்வேறு முன்மொழிவுகள் கிடைத்ததால் அது பற்றியும் கற்றாராயப்பட்டது. அதனை 2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் கால்நடைக் காப்புறுதியின்கீழ் ஊக்குவிப்புப் படிகளை துரிதமாக செலுத்தியதோடு காப்புறுதி சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்த மாவட்டங்களுக்கு அவசியமான பின்னணியை வகுத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி 2025 ஆம் ஆண்டில் காப்புறுதிப் பிரிவின் பிரதான பணியான காப்புறுதி செயற்றிட்டங்களின்கீழ் இழப்பீடு செலுத்துதல் பற்றிய ஒட்டுமொத்த பொழிப்பு பின்வருமாறு.

ஒட்டுமொத்த இழப்பீடு செலுத்துதல்

காப்புறுதி வகை	இழப்பீடு உரித்தான கமக்காரர்களின் எண்ணிக்கை	இழப்பீட்டுத் தொகை ரூ. (மில்லியன்)
பயிர்க் காப்புறுதி	85,319	1,755,223,150
கால்நடைக் காப்புறுதி	221	8,973,904
கூட்டுத்தொகை	**85,540**	**1,764,197,054**

அதைப்போலவே ஆண்டின் இறுதியளவில் 2024 சிறுபோகம், 2024/25 மகா, 2025 சிறுபோகம் தொடர்பான மேன்முறையீடுகளை பரிசீலனை செய்தல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் 2025/26 மகா போகத்தில் பயிர்ச்சேத இழப்பீடு செலுத்துதலுடன் தொடர்புடையதாக பூர்வாங்க கடமைகள் தொடங்கப்பட்டன

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துகின்ற கமக்காரரின் செயற்பொறுப்பினை இனங்கண்டு அந்த செயற்பாங்கினுள்ளே அவர்களின் அந்திமப் பொழுதினை பலப்படுத்தும் நோக்கத்துடன் 1987 இல் அமுலாக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் அடிப்படை குறிக்கோளை நிறைவேற்றி 2025 ஆம் ஆண்டின் இறுதியளவில் 178,998 கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களுக்காக ரூ. 4,989,488,879 பணத்தொகை அவர்களின் வாழ்க்கையின் பாதுகாப்பு கருதி ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது.

அக்டோபர் 2022-ல் பதிவுப் பணிகளைத் தொடங்கியதும், காலத்திற்கேற்றவாறும் சந்தாதாரரின் வாங்கும் திறனுக்கு ஏற்பவும் பங்களிப்புத் தொகையைச் செலுத்த வகை செய்வதுமான புதிய விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில், 2025-ஆம் ஆண்டின் இறுதிக்குள் 14,252 பேர் இணைந்துள்ளனர்.

இறப்பு மற்றும் ஏலாமை பணிக்கொடை செலுத்துதல்

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், ஓய்வூதியம் பெறும் தகுதி பெறுவதற்கு முன்பே விபத்துகள் அல்லது எதிர்பாராத நோய்கள் காரணமாக உயிரிழந்த 195 சந்தாதாரர்களின் வாரிசுகள் மற்றும் குடும்பத்தினருக்கு மொத்தம் ரூ. 4,207,054.00 மதிப்பிலான பலன்கள் வழங்கப்பட்டன.

ஏலாமை நன்மைக் கொடுப்பனவுகள்

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்திருந்து பூரண ஏலாமை நிலைக்குள்ளாகிய 96 உதவுதொகை செலுத்துனர் சார்பாக பூரணமான ஏலாமை நிலையுற்ற நாளில் இருந்து வாழ்க்கையின் இறுதிவரை செலுத்துகின்ற கொடுப்பனவாக 2025 ஆம் ஆண்டில் ரூ. 1,075,664.00 செலுத்தப்பட்டது.

ஏலாமை நன்மைக் கொடுப்பனவுகள்

	மாதம்	பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை	தொகை (ரூ.)
1	ஜனவரி	97	87,200
2	பிப்ரவரி	96	81,058
3	மார்ச்	97	158,044
4	ஏப்ரல்	97	82,891
5	மே	97	82,891
6	ஜூன்	98	88,853
7	ஜூலை	98	83,433
8	ஆகஸ்ட்	98	83,433
9	செப்டம்பர்	98	83,433
10	அக்டோபர்	96	81,476
11	நவம்பர்	96	81,476
12	டிசம்பர்	96	81,476
	கூட்டுத்தொகை		**1,075,664**

கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல்			
தொடர் இலக்கம்	மாவட்ட அலுவலகம்	ஓய்வூதியம் பெறுகின்ற உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை	செலுத்திய தொகை (ரூ.)
1	அம்பாறை	4,550	115,799,836
2	அநுராதபுரம்	9,507	236,607,736
3	பதுளை	8,073	223,591,803
4	மட்டக்களப்பு	1,427	33,986,398
5	கொழும்பு	6,131	192,718,226
6	காலி	15,139	476,224,412
7	கம்பஹா	12,078	355,709,536
8	அம்பாந்தோட்டை	10,375	268,806,743
9	யாழ்ப்பாணம்	2,793	74,661,725
10	களுத்துறை	9,527	298,259,152
11	கண்டி	17,652	499,586,210
12	கேகாலை	10,824	292,482,089
13	குருநாகல்	22,132	584,317,396
14	மன்னார்	114	2,448,750
15	மாத்தளை	5,806	150,551,318
16	மாத்தறை	10,747	311,753,540
17	மொணறாகல	6,765	170,866,419
18	முல்லைத்தீவு	145	4,269,345
19	நுவரெலியா	3,493	96,174,235
20	பொலநறுவை	6,253	169,522,157
21	புத்தளம்	5,833	158,495,824
22	இரத்தினபுரி	7,908	228,350,553
23	திருகோணமலை	1,021	27,085,283
24	வவுனியா	705	17,220,193
	கூட்டுத்தொகை	**178,998**	**4,989,488,879**

- கிளிநொச்சி மாவட்டத்துடன் தொடர்புடைய ஓய்வூதியம் செலுத்துதல் வவுனியா மாவட்டம் ஊடாக இடம்பெறுகின்றது

இறப்புப் பணிக்கொடைசெலுத்துதல்			
தொடர் இலக்கம்	மாவட்டம்	இறப்புப் பணிக்கொடை செலுத்தப்பட்ட உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை	இல் செலுத்திய தொகை (ரூ.)
1	அம்பாறை	3	63,272
2	அனுராதபுரம்	9	216,689
3	பதுளை	9	197,949
4	மட்டக்களப்பு	9	204,029
5	கொழும்பு	3	59,732
6	காலி	9	182,831
7	கம்பஹா	13	274,982
8	ஹம்பாந்தோட்டை	15	300,432
9	யாழ்	5	104,504
10	களுத்துறை	2	28,650
11	கண்டி	9	215,459
12	கேகாலை	8	147,595
13	குருநாகல்	9	176,365
14	கிளிநொச்சி	3	37,488
15	மாத்தளை	14	329,847
16	த்தறை	10	247,579
17	மொனராகலை	7	167,746
18	மஹோ	8	204,900
19	மனம்பிட்டிய	4	72,188
20	தெஹியத்தகண்டிய	6	97,840
21	தம்புத்தேகம	8	198,225
22	எம்பிலிபிட்டிய	7	156,987
23	நுவரெலியா	8	182,795
24	பொலன்னறுவை	5	105,784
25	புத்தளம்	5	112,641
26	இரத்தினபுரி	5	67,582
27	திருகோணமலை	1	17,132
28	வவுனியா	1	35,831
	மொத்தம்	**195**	**4,207,054**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நன்மைகள் திட்டத்தின்கீழ், ஆண்டின் இறுதிக்குள் 69,049 கடற்றொழிலாளர்கள் தமது பங்களிப்பினை வழங்கியுள்ளனர். 2025 ஆம் ஆண்டில் 6,359 கடற்றொழிலாளர்கள் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்றுவருவதுடன், ஓய்வூதியக் கொடுப்பனவாக ரூ. 96,002,144 செலுத்தப்பட்டுள்ளது.இத்திட்டத்தின்கீழ், குறித்த ஆண்டில் மரணமடைந்த 15 பங்களிப்பாளர்களின் சார்பாக ரூ. 188,000 மரண நலன்புரிப் பலன்களாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்ட, புதிதாக மேம்படுத்தப்பட்ட மீன்பிடித் துறை ஓய்வூதியத் திட்டத்திற்கான ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள், உலக மீன்பிடித் தினத்தை முன்னிட்டு 2025 நவம்பரில் தொடங்கப்பட்டன.

மீன்பிடி மற்றும் நீர்வளத் திணைக்களம் மற்றும் இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து, தீவு முழுவதும் முறையான விளம்பர மற்றும் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏலாமை நன்மைக் கொடுப்பனவுகள்		
மாவட்ட மீன்வள விரிவாக்கப் பிரிவு	பங்களிப்பாளர்கள் எண்ணிக்கை	தொகை (ரூ.)
களுத்துறை	1	8,000
தங்கல்லை	1	8,000
திருகோணமலை	2	23,000
மன்னார்	3	55,000
கல்முனை	3	33,000
கிளிநொச்சி	1	15,000
யாழ்	4	46,000
மொத்தம்	**15**	**188,000**

ஓய்வூதிய கொடுப்பனவுகள்		
மாவட்ட மீன்வள விரிவாக்கப் பிரிவு	**பங்களிப்பாளர்கள் எண்ணிக்கை**	**தொகை (ரூ.)**
களுத்துறை	137	2,156,647
காலி	141	2,085,273
மஹாவெவ	509	7,780,050
மாத்தறை	371	5,679,934
கொழும்பு	73	1,110,703
தங்கல்லை	329	5,039,079
புத்தளம்	75	1,092,745
நீர்கொழும்பு	708	10,461,759
மட்டக்களப்பு	659	10,606,738
திருகோணமலை	158	2,463,739
மன்னார்	664	10,412,112
கல்முனை	427	6,257,704
முல்லைத்தீவு	93	1,226,395
கிளிநொச்சி	511	7,714,059
யாழ்	1419	20,623,030
நன்னீர் மீன்பிடி நீர்த்தேக்கங்கள்		
நுவரெலியா	7	95,004
பொலன்னறுவை	4	64,392
இரத்தினபுரி	4	52,620
மொனராகலை	1	15,804
குருநாகல்	4	54,725
அனுராதபுரம்	3	43,248
மாத்தளை	6	85,308
கண்டி	9	134,004
பதுளை	7	98,604
வவுனியா	2	29,208
மட்டக்களப்பு (நன்னீர்)	38	619,260
மொத்தம்	**6359**	**96,002,144**

8

எதிர்கால நோக்கும் மூலோபாயத் திட்டங்களும்



அடுத்துறும் ஆண்டிற்கான சவால்கள் (2026-2028)

🎯 அடுத்த நிதியாண்டிற்கான முக்கிய முன்னுரிமைகளும் இலக்குகளும்

2026 ஆம் ஆண்டிற்காக, நிதி ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துதல் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பாதுகாப்பை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட தெளிவான நிறுவன செயல்திறன் இலக்குகளைச் சபை நிர்ணயித்துள்ளது:

💰 நிகர சொத்துக்களை 1,500 மில்லியன் ரூபாய் வரை உயர்த்துதல்

🌾 பயிர்க் காப்புறுதியிலிருந்து 1,280 மில்லியன் ரூபாய் தவணைக்கட்டண வருவாயை ஈட்டுதல்

🐄 கால்நடைக் காப்புறுதியிலிருந்து 25 மில்லியன் ரூபாய் தவணைக்கட்டண வருவாயை ஈட்டுதல்

🏢 ஏனைய காப்புறுதிச் செயல்பாடுகளிலிருந்து 545 மில்லியன் ரூபாயை ஈட்டுதல்.

👥 ஓய்வூதியத் திட்டத்திற்காக 15,000 புதிய பங்களிப்பாளர்களைச் சேர்த்தல்.

💻 அனைத்து நிறுவனச் செயல்பாடுகளையும் முழுமையாக டிஜிட்டல் மயமாக்குதல்.

🔍பிரதான கவனம்: நிலைபெறுதகு தன்மை🌱| வினைத்திறன்⚡| சேவைகள் விரிவாக்கம் 🌐| விருத்தி செய்யப்பட்ட இழப்பீடு செலுத்துதல்கள் 💳

புதிய தொடக்கங்களும் கொள்கை மாற்றங்களும்



1. இடர்வரவினை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதி முறையியல்கள்

நிதிச் சாத்தியக்கூற்றினை உறுதிசெய்யும் பொருட்டு, சபை விவசாய சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப மாவட்ட அடிப்படையிலான பயிர்க் காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்தும் என்பதுடன் தற்போதைய காப்புறுதித் திட்டங்களைப் புதுப்பிக்கும். புதுப்பிக்கப்பட்ட அபாயநேர்வு வரைபடமாக்கல் மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தரங்களின் உதவியுடன், இடர் வலயங்களை அடிப்படையாகக் கொண்டு தவணைக்கட்டண விகிதங்கள் தீர்மானிக்கப்படும்

2. நவீன தொழில்நுட்பமும் சேத மதிப்பீடும்

தரப்படுத்தப்பட்ட சேத மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் கையேடுகளுடன் செயற்கைக்கோள் புகைப்படங்கள், ட்ரோன்கள் மற்றும் வானிலை தரவுகளைப் பயன்படுத்திப் பயிர்ச்சேத மதிப்பீட்டு முறைகள் வலுப்படுத்தப்படும். முன்-கண்காணிப்பு அமைப்புகள், புதுப்பிக்கப்பட்ட இடர் வலய வரைபடங்கள் மற்றும் பயிர்ச்சேத கண்காணிப்புக் குழுக்களை விரைவாகப் பயன்படுத்துவதன் மூலம் மகா மற்றும் சிறுபோகங்களில் விரைவான இழப்பீடுகளை வழங்குவதும், உரிமைக்கோரல்களை செலுத்தித் தீர்ப்பதும் உறுதி செய்யப்படும்.

3. பங்காண்மையும் மேம்பாடும்

சபை, தனியார் துறைப் பங்காண்மைகளை விரிவுபடுத்துதல், விலங்கு உற்பத்தி மற்றும் பால் பண்ணையாளர் சங்கங்களுடனான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், விவசாயத்துடன் தொடர்புடைய தொழில்களுக்கான காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், நம்பகத்தன்மை மற்றும் ஊக்கத்தொகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அத்துடன் மின்னணு மற்றும் சமூக ஊடகத் தளங்கள் ஊடாக விளம்பரப்பெயர் உருவாக்கல் மற்றும் மேம்பாட்டு மூலோபாயங்களை உயர்த்துதல் ஆகியவற்றைச் செய்யும். வங்கி முறைகள் மூலம் ஓய்வூதியம் வழங்கும் பணிகள் முறைப்படுத்தப்படும்.

4. சிய கொள்கைகள் சட்டகம்

தேசிய அனர்த்த முகாமைத்துவ மற்றும் விவசாயக் கொள்கைக் கட்டமைப்புகளுக்கு அமைய, தேசிய அபாய நிதிக் கொள்கையொன்றைத் தயாரித்தல் மற்றும் பங்களிப்புடன் கூடிய அரசாங்க பயிர்க் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும்..

வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு பற்றிய எதிர்பார்ப்பு

2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஆதாரங்கள் தேசிய வரவுசெலவுத் திட்டம் மற்றும் சபையின் சொந்த நிதிகள் ஆகிய இரண்டின் மூலமும் திரட்டப்படும்.

🏛️ தேசிய வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள்:

- கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்காக 5,800 மில்லியன் ரூபாய்.
- கட்டாயப் பயிர்க் காப்புறுதிக்காக 1,800 மில்லியன் ரூபாய்.
- மாத்தறை மாவட்டத்தில் உவர்நீர் ஊடுருவல் காரணமாக ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க 1,200 மில்லியன் ரூபாய்.

🏢 சபையின் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள்:

- டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தொழில்முனைவு வள திட்டமிடல் (ERP) அமைப்புகளை நடைமுறைப்படுத்துதல்.
- தொழில்முறை வளர்ச்சி உட்பட மனித வள மேம்பாடு மற்றும் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல்.
- முக்கிய நகரங்களில் உப அலுவலகங்களை அமைப்பது உட்பட பௌதிக உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
- தொழில்நுட்ப முயற்சிகள், GIS (புவியியல் தகவல் முறைமை) நிறுவுதல் மற்றும் முறைமை மேம்பாடுகள்.
- சந்தைப்படுத்தல், மேம்பாடு, ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன வலுவூட்டல் செயல்பாடுகள்.



டிஜிட்டல் அல்லது மறுசீரமைப்புத் திட்டங்கள்

சபை, தொழில்முனைவு வள திட்டமிடல் (ERP) அமைப்பைக் வெளிக்கள மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதை நிறைவு செய்யும் என்பதுடன், காப்புறுதி மற்றும் செயல்பாட்டுச் செயல்முறைகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கும். தரவு முகாமை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காகப் புவியியல் தகவல் முறைமை (GIS) அலகு ஒன்றும், தீச்சுவர் (Firewall) பாதுகாப்பு அமைப்பொன்றும் நிறுவப்படும்.

இந்த டிஜிட்டல் நிலைமாற்றத்திற்காக , காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிர்வாகத்தை நவீனமயமாக்குதல், செயல்பாட்டு மற்றும் கால்நடைக் காப்புறுதிக் கையேடுகளைத் தயாரித்தல், அத்துடன் நிறுவன தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுக்கான தரப்படுத்தப்பட்ட சான்றிதழ்களைப் பெறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

பட்டயம்பெற்ற காப்புறுதித் தகுதிகளை எட்டுவது உட்பட அதிகாரிகளின் தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தி மூலம் ஆளுகை, வெளிப்படைத்தன்மை, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் சேவை வழங்கல் தரங்கள் மேலும் உயர்த்தப்படும்.

.

அரசாங்கத்தின் முக்கிய கொள்கைச் சாதனைகள்



சபையின் மூலோபாய வழிகாட்டலானது விவசாய அபாய முகாமை, அனர்த்த தாக்குப்பிடித்தல், சமூகப் பாதுகாப்பு விரிவாக்கம் மற்றும் காலநிலை அபாயங்களைக் குறைத்தல் ஆகிய தேசிய முன்னுரிமைகளுக்கு ஆதரவளிக்கிறது. தொடர்புடைய அரசு நிறுவனங்கள் மற்றும் பிராந்திய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன், சபை தேசிய மட்டத்தில் அனர்த்த அவசரப் பதிலளிப்பு வேலைத்திட்டங்களை மேம்படுத்துதல், கொள்கைகளை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துதல் மற்றும் விவசாயக் காப்புறுதி ஆளுகையை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பங்களிக்கும்.

9

மனித வளமம் தாபனஞ்சார் கொள்திறனும்



பணியாட்டொகுதி

2025.12.31 ஆந் திகதியில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பணியாட்டொகுதி பின்வருமாறு அமைந்திருந்தது.

சேவைகள் தொகுதி	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்டோர் எண்ணிக்கை	உள்ளோர் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேட்ட முகாமைத்துவம்				
HM	பணிப்பாளர்நாயம்	1	1	-
	பணிப்பாளர்	5	-	5
முகாமைத்துவம்				
MM	பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர்	45	37	8
கனிட்ட முகாமைத்துவம்				
JM	நிருவாக உத்தியோகத்தர்	2	1	1
	முறைமை நிருவாகி	1	1	-
	நிதி உத்தியோகத்தர்	1	-	1
	வழங்கல் உத்தியோகத்தர்	1	-	1
இணை உத்தியோகத்தர்கள்				
ASS.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	55	34	21
	வழங்கல் உத்தியோகத்தர்	1	-	1
	உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)				
MA - Tech	போக்குவரத்து உதவியாளர்	1	1	-
	செயலாளர்	1	1	-
	புத்தகம் பேணுனர்	4	1	3
	வன்பொருள் மற்றும் வலையமைப்பாக்க வினைஞர்	1	1	-
	தொழில்நுட்ப வினைஞர் ர(செவிப்புல /கட்புல)	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத)				
MA – Non Tech	முகாமைத்துவ உதவியாளர்	220	183	37
ஆரம்ப (வினைஞர்)				
PL - Skilled	சாரதி	38	19	19
ஆமரம்ப (வினைஞர் அல்லாத)				
PL - Non Skilled	அலுவலக உதவியாளர்	42	27	15
		421	**307**	**114**

சபையின் செயற்பொறுப்பினை இடையறாமல் பேணிவருவதற்காக உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்வரை நிலவுகின்ற வெற்றிடங்களில் அத்தியாவசியமான ஒருசில பதவிகளுக்காக தலைமையகத்திற்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒப்பந்த அடிப்படை

HM	பணிப்பாளர்	1
ASS.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	6
MA - NonTech	முகாமைத்துவ உதவியாளர்/வெளிக்கள	13
PL - Skilled	சாரதி	11
PL - Non Skilled	அலுவலக உதவியாளர் (துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்)	7
	கூட்டுத்தொகை	**38**

2025.12.31 ஆந் திகதியில் பணியாட்டொகுதி பகுப்பாய்வு

- **பணியாட்டொகுதியின் ஆண் பெண் பகுப்பாய்வு**

ஆண் - 145
பெண் - 162
கூட்டுத்தொகை - 307



- **சேவைக் காலத்திற்கிணங்க பகுப்பாய்வு**

வருடம்	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
30 இற்கு மேல்	8	3%
26 - 30	7	2%
21 - 25	9	3%
16 - 20	41	13%
15 இற்கு குறைவான	242	79%
கூட்டுத்தொகை	**307**	**100%**



- **வயதுப் பகுப்பாய்வு**

வயதுத் தொகுதி	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
56 - 60	12	4%
51 - 55	28	9%
46 - 50	53	17%
41 - 45	51	17%
36 - 40	34	11%
31 - 35	30	10%
30 இற்கு குறைவான	99	32%
கூட்டுத்தொகை	**307**	**100%**



2025 இல் இளைப்பாறல், இறத்தல் மற்றும் சேவையிலிருந்து நீங்குதல்

2025 ஆம் ஆண்டில் சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களில் 20 பேர் கீழே குறிப்பிட்ட காரணங்களின்பேரில் சேவையிலிருந்து நீங்கிச்சென்றுள்ளனர்.

	பதவிப்பெயர்	எண்ணிக்கை	சேவை முடிவுறுத்தப்பட காரணம்
1	பணிப்பாளர்	01	இளைப்பாறுதல்
2	பிரதி /உதவிப் பணிப்பாளர்	01 01	இளைப்பாறுதல் பதவி விலகல்
3	நிர்வாக உத்தியோகத்தர்	01	இளைப்பாறுதல்
4	அபிவிருத்தி உத்தியோகத்தர்	02 03	இளைப்பாறுதல் பதவி விலகல்
5	முகாமைத்துவ உதவியாளர்	04 02 02	இளைப்பாறுதல் பதவி விலகல் பதவியை விட்டுச் செல்லல்
6	அலுவலக உதவியாளர்	03	இளைப்பாறுதல்

- **2025 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பும் பதவியுயர்வும்**

இவ்வருடத்தில் எந்தவிதமான ஆட்சேர்ப்பும் இடம்பெறவில்லை.

- **ஊழியர் நலனோம்பல்**

சுகாதாரக் காப்புறுதித் திட்டம், மோட்டார் சைக்கிள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் கடன் வழங்குதல் முந்திய வருடங்களில்போல் இவ்வருடத்திலும் இடையறாமல் அமுலாக்கப்பட்டு வந்தது.

10

நிர்வாகமும் இடர்வரவு முகாமைத்துவமும்



கூட்டாண்மை நிர்வாகம் பற்றிய அறிக்கை

அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு தொழில் முயற்சி என்ற வகையில், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை உயர் மட்டத்திலான தாபன நிர்வாகம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நன்னெறிரீதியான நடத்தைகளைப் பேணிவருவதற்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றது. சபை தனது கொள்கைகள், உபாயமார்க்கங்கள் மற்றும் தீர்மானங்களை நல்லாட்சிக் கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொண்டு வருகின்றதென்பதையும், அவை சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள நியதிச்சட்டமுறையான தத்துவங்களின் பொறுப்புக்களின் அத்துடன் விவசாய சமுதாயத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றதென்பதையும் இடையறாமல் உத்தரவாதமளித்து வருகின்றது.

அறிமுகம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தனது நியதிச்சட்டமுறையான நோக்கங்களை அடைதல், மக்களின் நம்பிக்கையை உறுதிசெய்துகொள்ளல், கமக்காரர்களினதும் ஏனைய பயனாளிகளினதும் உரிமைகளையும் தேவைகளையும் பாதுகாத்தல் அத்துடன் மக்களின் வளங்களை வினைத்திறனுடனும் பொறுப்புமிகுந்தவகையிலும் முகாமைசெய்வதற்காக பலம்பொருந்திய நிறுவனம்சார் நிர்வாகம் அத்தியாவசியமான அத்திவாரமென்பதை ஏற்றுக்கொள்கின்றது. சபை தனது கருமங்களை ஈடேற்றுகையில் உயர் மட்டத்திலான பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, நேர்மை, பொறுப்பு மற்றும் நன்னெறிசார் நடத்தைகளை மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றது.

சபையின் நிர்வாகக் கட்டமைப்பு 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை சட்டம் , 1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மற்றும் 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம், ஏற்புடைய ஏனைய சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மேலும் அரச தொழில்முயற்சிகளுக்காக நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அரசுக்குச் சொந்தமான கூட்டாண்மை நிர்வாக வழிகாட்டிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கையேடு சபையினால் கடைப்பிடிக்கப்பட்டு வருவதோடு அதன் மூலமாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுடன் ஏற்புடைத்தாகின்ற தேசிய நிர்வாக எதிர்பார்ப்புக்களுடன் சபையின் நிர்வாக முறையியல்கள் அமைந்தொழுகி செயலாற்றப்படுவதை உறுதிசெய்கின்றது.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையும் சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களும் கூட்டாக சபையின் அலுவல்கள் மற்றும் தொழிற்பாடுகள் சம்பந்தமாக பயனுறுதிமிக்க மேற்பார்வையை இடையறாமல் மேற்கொண்டு வந்தன. நிறுவனத்தின் செயலாற்றுகையை மேற்பார்வை செய்தல், தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் அபாயநேர்வினை மேற்பார்வை செய்தல், அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் உபாய மர்க்கங்களை அமுலாக்குவதிலான முன்னேற்றத்தை மதிப்பீடுசெய்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குவதற்காக மாதாந்தம் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களும் தம்மிடம் கையளிக்கபட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பொறுப்புக்களின்கீழ் சம்பந்தப்பட்ட விடயங்களை விபரமாக மீளாய்வு செய்வதன் மூலமாக சபையின் நிர்வாக மற்றும் தீர்மானம் மேற்கொள்கின்ற செயற்பாங்கினை தொடர்ந்தும் பலப்படுத்தி பங்களிப்புச் செய்தன. பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் முனைப்பான பங்கேற்பு, அவர்களின் சுதந்திரமான கருத்துக்கள், தொழில்சார் அறிவு மற்றும் நிபுணத்துவம், ஆக்கபூர்வமான அவதானிப்புகள் மற்றும் உபாயமார்க்கரீதியான வழிகாட்டல் மூலமாக சபையின் தரத்தை மேம்படுத்தவும் ஆண்டு பூராவிலும் சாதகமான மற்றும் பொறுப்புவாய்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக உதவிபுரியவும் இயலுமாயிற்று.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை கமத்தொழில் காப்புறுதி மற்றும் அதனோடு சம்பந்தப்பட்டதாக சமூகப் பாதுகாப்பு காப்பீட்டினை வழங்குவதற்காக நிறுவப்பட்ட நியதிச்சட்டமுறையான நிறுவனமாக அமைதோடு கமக்காரர்களுக்கும் மீனவர்களுக்கும் உதவக்கூடிய பல்வேறு செயற்றிட்டங்ளை அமுலாக்குவதும் அதன் செயற்பொறுப்பில் அடங்குகின்றது. அதனால் சபையின் நிர்வாக முறையியலில் நிதிசார் நிலைபெறுதகு தன்மை, பயனுறுதிமிக்க இடர்வரவு முகாமைத்துவம், இழப்பீடு செலுத்துதல் மற்றும் உரிமைகோரல் நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை, நிதியங்களை பொறுப்புமிக்கவகையில் முதலீடுசெய்தல் அத்துடன் பயனாளிகளின் உரிமைகள் மற்றும் அவசியப்பாடுகளை பாதுகாத்தல் தொடர்பில் விசேட கவனத்தை செலுத்தி வருகின்றது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நீண்டகால நிலைபெறுதகு தன்மை, நிதிசார் உறுதிநிலை, தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் தானஞ்சார் நற்பெயரை உறுதிசெய்தல் என்பவற்றுக்காக பலம்பொருந்திய அத்துடன் பயனுறுதிமிக்க தாபனஞ்சார் நிர்வாகம் அவசியமென்பதை சபை திடமாக ஏற்றுக்கொள்கிறது. அதனால், சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள நியதிச்சட்டமுறையான பொறுப்பினை நிறைவேற்றுகையிலும் கமக்கார சமுதாயத்திற்கு சேவை புரிகையில் சாதகமான நிர்வாக முறையியல்கள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புவாய்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளல் என்பவற்றை இடையறாமல் பேணிவருவதற்காக சபை தன்னை அர்ப்பணித்துள்ளது.

முதலீட்டுக் குழுவின் அறிக்கை

முதலீட்டுக் குழுவின் நோக்கங்கள்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் முதலீட்டுக் குழுவானது சபையின் அனைத்து அலுவல்களும் பாதுகாப்பான, இலாபகரமான, உயர் திரவத்தன்மைகொண்ட அத்துடன் 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அரச நிதிப் பிரமாணங்களுடன் முழுமையாக அமைந்தொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை வகிக்கின்றது. சபையின் இரட்டை நோக்கங்களுக்காக ஒத்துழைப்பதே குழுவின் அடிப்படை அரும்பணியாக அமைகின்றது. அதாவது, பயிர்க் காப்புறுதி, கால்நடை வளங்கள் மற்றும் ஏனைய பொதுக் காப்புறுதி இழப்பீடு செலுத்துலை திருத்துவைத்தல் மற்றும் கமக்காரர்/ கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நிதியங்களின் நெடுங்கால **நிதிசார் உறுதிநிலையையும் செலுத்துவதற்கான ஆற்றலையும் பாதுகாத்தல்** ஆகியவை நோக்கங்களாக அமைகின்றன. மேலும் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற செயற்பாங்கினை முறைசார்ந்த, வெளிப்படைத்தன்மைகொண்ட அத்துடன் பொது நிதி முகாமைத்துவத்தின் **சாதகமான நடைமுறைகளுக்கு அமைவாக** பேணிவரப்படுதலையும் குழு உறுதிசெய்கின்றது.

முறையான மதிப்பீடும் தீர்மானம் மேற்கொள்ளலும்

முதலீட்டுக் குழுவானது பல்வேறு தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் துறைகளை பிரதநிதித்துவம் செய்கின்ற தொழில்வாண்மையாளர்களை உள்ளடக்குவதோடு அவர்கள் பேரினப் பொருளாதார குறிகாட்டிகள், வட்டி வீதப் போக்குகள் மற்றும் இடர்வரவு மட்டங்கள் பற்றிக் கலந்துரையாடி முதலீட்டுக் கொள்கைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வர். இந்த முறைசார்ந்த செயற்பாங்கு சபையின் நிதிசார் அத்திவாரத்தை பலப்படுத்துவதில் நேரடியான பங்களிப்புச் செய்கின்றது.

இயங்குநிலைசார்ந்த சந்தைச் சுற்றுச்சூழல் நிலவியபோதிலும் குழுவின் சரியான இடையீட்டின்பேரில் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் குழும மட்டத்தில் 1,903,13 மில்லியன் ரூபா ஒட்டுமொத்த வட்டி வருமானத்தையும் பிரதான விவசாயக் காப்புறுதி செயற்றிட்டங்களின்கீழ் 686.22 மில்லியன் ரூபாய் வட்டி வருமானத்தையும் சபையினால் ஈட்டிக்கொள்ள இயலுமாயிற்று.

சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் முகாமைத்துவமும் முதலீடுகளின் பன்வகைமைப்படுத்தலும்

கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் (1987 இன் 12 ஆம் இலக்கமுடைய சட்டம்) மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டங்களில் (1990 இன் 23 ஆம் இலக்கமுடைய சட்டம்) நிலவுகின்ற நெடுங்கால கடப்பாட்டினை (உதவுதொகை செலுத்தனர்களுக்கு 60 வயது நிறைவடைகையில் செலுத்தவேண்டிய செலுத்தவேண்டிய நன்மைகளை) கருத்திற்கொண்டு சொத்துக்களுக்கும் கடப்பாடுகளுக்கும் இடையிலான இடைவெளியை குறைப்பதற்காக குழுவானது தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகின்றது.

முதலீடுகளின் இடர்வரவுகளை குறைப்பதற்காக சபைக்கச் சொந்தமான **5,935.43 மில்லியன் ரூபாய் ஒட்டுமொத்த முதலீடுகளை (குழுமம்**) பிரதானமாக இடர்வரவின்றி அரச பிணைங்களில் (திறைசேரி உண்டியல்களும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளும் - 1,991.66 மில்லியன் ரூபாய்) மற்றும் இந்நாட்டின் முதன்மை அரச வங்கியான மக்கள் வங்கி (1,313.70

மில்லியன் ரூபாய்), இலங்கை வங்கி (2,477.76 மில்லியன் ரூபாய்) அத்துடன் பிரதேச அபிவிருத்தி வங்கி (152.31 மில்லியன் ரூபாய்) போன்ற நிலையான நிதி நிறுவனங்களில் நிலையான வைப்புகளாக பன்வகைமைப்படுத்தி உள்ளது.

நிதியங்களையும் ஒதுக்கங்களையும் பலப்படுத்துதல்

முதலீடுசெய்யப்படுகின்ற அனைத்து நிதியங்களும் சபையின் நியதிச்சட்ட முறையான நோக்கங்களை அடைவதற்கேதுவாக இடையறாமல் மேற்பார்வை செய்யப்படுகின்றது. இதன்போது கீழே குறிப்பிட்ட தனித்துவமான ஒதுக்கங்களை பாதுகாப்பது குழுவின் பிரதான முதன்மைத்தானங்களாக விளங்குகின்றன:

- எதிர்பாராத அனர்த்தங்களின்போது இழப்பீடு செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள **கமத்தொழில் காப்புறுதி நிதியம்** 2025 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 648.82 மில்லியன் ரூபாய் வரை உறுதியாக வளர்ச்சியடைந்துள்ளது.

- பயனாளிகளின் குடும்பங்களை பாதுகாக்கின்ற **கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியம்** (Farmer's Death Gratuity Fund) 1,616.23 மில்லியன் ரூபாய் வரை பலம்பொருந்தியதாக நிலவுகின்றது.

- காலநிலை அனர்த்தங்களுக்கான நிவாரணங்களை வழங்குகின்ற **கட்டாய பயிர்க் காப்புறுதி நிதியம் (கெத்தட்ட அருண)** பயிர்ச்சேத இழப்பீடு செலுத்துகின்ற தருணங்களுக்கு அவசியமான நிதிசார் ஒத்துழைப்பினை வழங்குகின்ற பிரதானமான நிதியமாகும்.

போதியளவிலான திரவத்தன்மை வீதங்களைப் பேணிவந்தும் சபையின் நிதிசார் சக்தியை பாதுகாத்துக்கொண்டும் இலங்கையின் கமக்காரர் மற்றும் மீனவ சமுதாயங்களுக்கு **நீண்டகால நிதிசார் பாதுகாப்பினை** உறுதிசெய்வதற்காக முதலீட்டுக்குழு இடையறாமல் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது.

முதலீட்டுத் தொகுதியின் வளர்ச்சியும் விரிவாக்கமும் (2007-2025)

மில்லியன் ரூபாய்

வருடம்	கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	கமக்காரர் ஒய்வூதியத் திட்டம்	கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டம்	மொத்த முதலீடுகள்
2025	7,511	3,998	750	**12,260**
2024	6,787	2,923	742	**10,452**
2023	6,102	2,016	793	**8,911**
2022	4,615	1,455	663	**6,732**
2021	3,734	1,339	387	**5,460**
2020	2,796	1,237	333	**4,366**
2019	1,879	1,223	134	**3,236**
2018	1,092	1,132	96	**2,319**
2017	1,546	1,126	35	**2,707**
2016	813	1,135	11	**1,960**
2015	382	1,153	23	**1,558**
2014	286	1,320	17	**1,623**
2013	274	14	24	**313**
2012	326	13	35	**374**
2011	419	31	63	**513**
2010	609	4	299	**911**
2009	546	582	538	**1,666**
2008	413	1,256	467	**2,135**
2007	100	1,656	411	**2,168**

முதலீட்டுத் தொகுதியின் வளர்ச்சியும் விரிவாக்கமும் (2007–2025)





கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்ட

பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (Audit and Management Committee) நிறுவப்பட்டுள்ளது. சபையின் நிதி நிர்வாகம், உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் வினைத்திறன் மற்றும் இடர்வரவு முகாமைத்துவ செயற்பாங்கினை முறைசார்ந்தவகையில் அவதானித்தல் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல் இந்த குழுவின் பிரதான நோக்கங்களாகும்.

மற்றும் முகாமைத்துவக் குழுவின் உள்ளடக்கம்

பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு அதன் உள்ளடக்கம் பின்வருமாறு அமையும்

- **குழுவின் தலைமைத்துவம்** - நிதி அமைச்சினை பிரதிநிதித்துவம் செய்கின்ற பணிப்பாளர்சபை அங்கத்தவர்.
- **குழு அங்கத்தவர்கள்** - கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் / கமத்தொழில் அமைச்சினை பிரதிநிதித்துவம் செய்கின்ற பணிப்பாளர் சபை அங்கத்தவர்.

த்திலான பங்கேற்பு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் சுயாதீனத்தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதிசெய்வதற்காக 2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் அவதானிப்பு மட்டத்தில் தனது முனைப்பான பங்களிப்பு வழங்கப்பட்டது:

- **தேசிய கணக்காய்வு அலுவலகத்தை பிரதிநிதித்துவம் செய்து அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு அத்தியட்சகர்**
- **வரிசை அமைச்சினை (கமத்தொழில் அமைச்சு) பிரதிநிதித்துவம் செய்து பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்**

அதன்படி 2025 நிதியாண்டுக்காக 2025.02.27, 2025.04.28, 2025.08.13 **மற்றும் 2025.12.16 ஆகிய தினங்களில்** கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

குழுவின் செயற்பொறுப்பும் அவதானிப்புகளும்

2025 நிதியாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் கீழே குறிப்பிட்ட துறைகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு செயலாற்றப்பட்டது.

- **உள்ளக கணக்காய்வு மீளாய்வு**

  உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கு அவசியமான முகாமைத்துவ பிரதிபலிப்புகளையும் தீர்வுகளையும் காண்பதற்காக பிரிவுத் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

- **வெளிவாரி கணக்காய்வு அவதானிப்பு (கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள்)**

  கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் சம்பந்தமாக கவனம்செலுத்தி அவற்றைத் தீர்த்துவைக்க சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதோடு தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- **உள்ளகக் கட்டுப்பாடும் இடர்வரவு முகாமைத்துவமும்**

  நிறுவனத்தின் நிதிசார் மற்றும் நிர்வாக செயற்பாங்குகளில் நிலவுகின்ற அபாயநேர்வுகளை இனங்கண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மென்மேலும் பலப்படுத்த அவசியமான ஆலோசனைகளை சபையின் முகாமைத்துவத்திற்கு வழங்குதல்.

- **சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அமைந்தொழுகல்**

  பகிரங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றிக்கைகள், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு அமைவாக தாபனஞ்சார் அலுவல்கள் இடம்பெறுவதை உறுதிசெய்தல்.

ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்களின் பொழிப்பு

(அ) (தகவல் தொழில்நுட்பமும் டிஜிட்டல்மயமாக்கலும்)

- ERP முறைமை - 2026.03.31 ஆந் திகதிக்கு முன்னர் முறைமையை நிறைவுசெய்யவும், SLCERT ஊடாக ஸ்கேன் பதிவேடுகளின் சட்டபூர்வமான செல்லுபடியாகுந்தன்மையை உறுதிசெய்யவும் அறிவுறுத்ததல்கள் வழங்கப்பட்டுள்ளன.

- AIMS மற்றும் HRIS முறைமை - AIMS முறைமை சபையின் உள்ளகரீதியாக நிகழ்காலத்தில் அபிவிருத்தியடைந்து வருகின்ற ERP மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 'Geo-கமக்காரன்' முறைமையுடன் ஒருங்கிணைக்கவும், HRIS முறைமையில் ஊழியர் தகவல்களை இற்றைப்படுத்துதலை 2026.04.30 இற்கு முன்னர் மேற்கொள்ளவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) (ஓய்வூதியமும் சமூகப் பாதுகாப்பும்)

- பழைய கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் - இந்த செயற்றிட்டத்தின் ஓய்வூதியம் செலுத்தும் பணிகள் அஞ்சல் அலுவலகங்களுக்குப் பதிலாக வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பிவைக்கவும் இறந்த ஓய்வூதியம் பெறுனர்களை இனங்காணவும் உயிர்த்தரவுகளை உறுதிசெய்வதற்கான முறையியல் ஒன்றைத் தயாரிக்கவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

- கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் - 64,117 உதவுதொகை செலுத்துனர் மத்தியிலிருந்து ஓய்வூதியம் பெறுவதற்கான வயதினை அடைந்த 32,149 பேர்களில் 26,093 பேர்களின் ஓய்வூதியத்தை செலுத்துதல் 2 தொடக்கம் 119 மாதங்கள் வரை தாமதமடைந்துள்ளமையால் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களை இனங்காண்பதற்காக மாதிரிப் பரிசோதனையொன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

(இ) மனிதவள நிர்வாகம் மற்றும் சொத்துக்கள் (நிதிசார் சொத்துக்களை உள்ளிட்டதாக) முகாமைத்துவம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 2025 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் வழங்கப்பட்ட அவதானிப்புகள், அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் மூலமாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நிதிசார் கட்டுப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உயர்வான மட்டத்தில் பேணி வருவதற்கான முழுமையான ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.

இடர்வரவு முகாமைத்துவக் குழு

சபை எதிர்நோக்கக்கூடிய பல்வேறு உள்ளக மற்றும் வெளிவாரி இடர்வரவுகளை (Risk) இனங்காணல், மதிப்பீடுசெய்தல் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதானமாக பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் விடயத்துறைசார்ந்த நிபுணர்களை இந்த குழு உள்ளடக்கி இருக்கின்றது.

2025 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் இடர்வரவு முகாத்துவக் குழு கூட்டங்களை நடாத்தியதோடு அதில் பின்வரும் உத்தியோகத்தர்கள் அவசியப்பாட்டின் நிமித்தம்

கலந்துகொண்ட உத்தியோகத்தரின் பெயர்	பதவி
திரு. ரோஹண ராஜபக்ஷ	ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம்
திரு. ஏ.எஸ் எச். பெரேரா	மேலதிக பணிப்பாளர் நாயகம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
திரு. எச்,ஏ.கே,ஆர். திசேரா	மேலதிக செயலாளர் (நிர்வாகம்), கிராமிய பொருளாதாரப் பிரிவு, கமத்தொழில் அமைச்சு.
திரு. ஆர்ஏ.டீ.எஸ்.ரணதுங்க	கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,கமநல சேவைகள் திணைக்களம்.
திரு. ஹேமந்த அமரசிங்க	பணிப்பாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

பிரதான பொறுப்புகளும் செயற்பொறுப்பும்



உள்ளக கட்டுப்பாட்டு மதிப்பீடு பற்றிய அறிக்கை



2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) மற்றும் 38 (2) பிரிவுகளின் பிரகாரம் சபையினால் சபையின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதோடு அதன்போது நிதிநார் திட்பநுட்பத்தன்மை, சட்டரீதியான அமைந்தொழுகல் மற்றும் சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிவரப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

பிரதான மதிப்பீடுகள்

- **திட்டமிடுதலும் பெறுகையும்** - வருடாந்த செயற்பாட்டுத் திட்டமும் பெறுகைத் திட்டமும் முறைப்படி தயாரிக்கப்பட்டு உரியவகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- **உள்ளக கணக்காய்வும் இடர்வரவு முகாமைத்துவமும்** - உதவிப் பணிப்பாளரின்கீழ் (உள்ளக கணக்காய்வு) இயங்கிவருகின்ற உள்ளக கணக்காய்வுக் கூறு நிறுவப்பட்டுள்ளது. இடர்வரவு பதிவேட்டினை அடிப்படையாகக்கொண்ட வருடாந்த வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின்படி கணக்காய்வு நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

- **உள்ளக பரிசோதிப்புகள்** - ஒவ்வோர் உத்தியோகத்தரதும் கடமை அலுவல்கள் மேலதிகாரியொருவரின் மேற்பார்வைக்குள் வரத்தக்கதாக கடமைகளை பிரித்தொதுக்குதல் எழுத்தில் ஒழுங்கமைந்தவகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **மேற்பார்வை** - கட்டளை பிறப்பிக்கின்ற பதவி வரிசைப்படி கடமைகள் மேற்பார்வை செய்யப்படுவதோடு பணியாளர் பயிற்சி காலத்துடன் நேரொத்ததாக மேற்கொள்ளப்படுகின்றன. காலாண்டு வாரியாக உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை பரீட்சிக்கப்படுகின்றது.

- **நிதி மற்றும் சொத்துக்கள் கட்டுப்பாடு** - அனைத்துவிதமான சொத்துக்களும் இலக்கமிடப்பட்டுள்ளதோடு நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுகின்றது. வருடாந்த பண்ட மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக கையுதிர்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **கட்டப்பாடும் தொடர் நடவடிக்கையும்** - நியதிச்சட்டமுறையான அறிக்கைகள் உரிய தினங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள், உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கோப் (COPE) குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்காக காலாண்டுவாரியான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

அறிமுகஞ்செய்த முறைமைசார்ந்த மாற்றங்கள்

- **ERP முறைமை** - சபையின் நெறிப்படுத்தல் நடவடிக்கைகளை டிஜிட்டல்மயமாக்குவதற்காகவும் சுற்றாடல் நேயமிக்கதாக அமையும் நோக்கத்துடனும் (கடதாசிப் பாவனைக் குறைத்தல்) ERP மென்பொருள் முறைமையை விருத்திசெய்த அமுலாக்கியமை.

- **கையேடுகளை இற்றைப்படுத்துதல்** - காப்புறுதி செயற்றிட்டங்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய உற்பத்திக் கையேட்டினையும் (Product Manual) சேத இழப்பீட்டுக் கையேட்டினையும் (Indemnity Assessment Manual) இற்றைப்படுத்தியமை.

- **கடமைக்காக இணைத்தலை ஒழுங்குபடுத்ததல்** - செயலாற்றுகை வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களின் கடமைப் பட்டியலை மீளவும் இற்றைப்படுத்துதல்.

சபையின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை வெற்றிகரமாக திட்டமிட்டு அமுலாக்கப்பட்டுள்ளதோடு அது தொடர்ச்சியாக மீளாய்விற்கு உள்ளாக்கப்படுகின்றது. 02/2022 முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றிக்கையின் பிரகாரம் 2025 நிதியாண்டுக்காக 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின்படி மேற்கொள்ளவேண்டிய மீளாய்வினை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

11

நிதிசார் அறிக்கையிடல்



11.1

நிதிசார் அறிக்கையிடல் - கமத்தொழில் காப்புறுதித் திட்டம்



எனது இலக்கம்: ARI/C/AAIB/1/25/34/FA 2026 மே 31

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினதும் அதனால் நிர்வகிக்கப்படுகின்ற அமைப்புகளினதும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் பிற சட்டமுறையான, ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ("சபை") மற்றும் அதனால் நிர்வகிக்கப்படுகின்ற ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களினதும் ("குழுமம்") 2025 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று மற்றும் கணியரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுடன் சம்பந்தப்பட்ட குறிப்புகளையும் உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையினதும் குழுமத்தினதும் நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச்சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக சபையினதும் குழுமத்தினதும் நிதிக்கூற்றுகள் மூலமாக 2025 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமைகள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அவற்றின் நிதிச்செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்வுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையினதும் அதனால் நிர்வகிக்கப்படுகின்ற ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களினதும் நிதிக்கூற்றுகளின் பேரில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் கீழே குறிப்பிடப்பட்டட அவதானிப்புகளை அடிப்படையாகக்கொண்டு என்னால் வெளியிடப்படுகின்றது.

1.2.1 கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நிதிக்கூற்றுகள் பற்றிய கருத்துரைகள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 36 வது பிரிவின் பிரகாரம் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகுப்பினம் முழுமையாகவே மீள்கணிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும் வாகனங்கள், காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகிய சொத்துக்களின் ஒரு பகுதி மாத்திரம் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நீண்டகால குத்தகை அடிப்படையில் நிலவுகின்ற தம்புத்தேகம மாகோ மகாவலி காணி இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமம் 16 இன் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை (rights of use Assets) என்றவகையில் கணக்குப் பதியப்படவேண்டியிருப்பினும் மேற்படி காணிகளை மதிப்பீடுசெய்து சயின் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமற்ற காணிகளில் அமைந்துள்ள தம்புத்தேகம, பொலநறுவை, குருநாகல் மற்றும் அநுராதபுர மாவட்ட அலுவலகங்களில் மேற்கொண்ட புதுப்பித்தல் வேலைகளுகக்கான செலவுகள் ரூ. 41,725,299 ஆக அமைந்திருந்ததோடு இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமம் 16 இன் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை (rights of use Assets) அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் பற்றிய இணக்கப்பாடு உடன்படிக்கையில் காட்டப்பட்டிராமையால் அந்த பெறுமானம் 2025 ஆம் ஆண்டில் கட்டிடச் சொத்துக்களின் பெறுமதியாக மூலதனமயமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2025 நவெம்பர் 21 ஆந் திகதி பருவமுதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியலுடன் தொடர்புடைய மொத்த வட்டி வருமானம் ரூ. 130,520,714 ஆக அமைந்திருந்ததோடு அதில் 2025 வருடத்துடன் தொடர்புடைய வருமானம் ரூ. 121,194,327 ஆக அமைந்திருப்பினும் ஒட்டுமொத்த வட்டித்தொகையும் கூப்பன் வருமானக் கணக்கில் வரவுவைக்கப்பட்டிருந்தது. அதன்படி கடந்த வருடத்துடன் தொடர்புடையதாக கணக்குப்பதியப்பட்டுள்ள வட்டித் தொகையான ரூ. 9,326,387 இல் இவ்வருடத்தின் வட்டி வருமானமும் திறைசேரி உண்டியல் முதலீட்டு வருமானமும் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த 30 பிரதேச அலுவலகங்களின் வங்கிக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூ. 460,000 ஆக விளங்கியபோதிலும் வங்கிக் கணக்கு மீதிகளின் உண்மைான கூட்டுத்தொகை ரூ. 600,760 ஆக அமைந்தமை காரணமாக அறிக்கைசெய்த வங்கி மீதிகளில் ரூ. 140,760 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) எம்பிலிபிட்டியவில் 20 பர்ச்சஸ்களிலும் அநுராதபுரத்தில் 40 பர்ச்சஸ்களிலும் அமைந்துள்ள 2 உத்தியோகபூர்வ குடிமனைக் காணிகள் சபைக்குச் சொந்தமானதாக இருந்தபோதிலும் மேற்படி காணிகளை மதிப்பீடுசெய்து நிதிக்கூற்றுகளில்

சேர்க்கப்பட்டிருக்கவில்லை. கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையினால் வருடந்தோறும் வாடகை அடிப்படையில் எடுத்த 9 கட்டிடங்கள் சம்பந்தமாக முந்திய வருடங்களில் உறப்பட்ட ரூ. 6,758,813 திருத்தவேலைகளுக்கான செலவுகள் மூலதனமயமாக்கப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் அந்த அளவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(எ) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் வருடாந்த வாடகை அடிப்டையில் 9 கட்டிடங்களுடன் தொடர்புடையதாக முந்திய வருடங்களில் உறப்பட்ட ரூ. 6,758,813 திருத்தவேலைகளுக்காக செலவுகள் மூலதனமயமாக்கப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் அந்த அளவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) காசுப்பாய்வுக் கூற்றுகளைத் தயாரிக்கையில் இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இற்கு முரணாக அரசாங்க கொடையை மதிப்பிறக்கம் செய்தலான ரூ. 23,027,553 தொகையை ரூ. 25,114,449 என சீராக்கியமையால் தொழிற்பாட்டு காசுப்பாய்வு ரூ. 3,172,925 ஆல் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. ஊழியர் மருத்துவ காப்புறுதி நிதிய முதலீடுகளின் வருமானக் கிடைப்பனவான ரூ. 5,880,500 ஐ முதலீட்டுச் செயற்பாடுகளில் அறிக்கையிட்டமை மற்றும் பங்களிப்புத்தொகை கிடைப்பனவான ரூ. 5,293,350 ஐ தொழிற்பாட்டுக் காசுப்பாய்வில் சீராக்குவதற்கப் பதிலாக கணக்கு மீதிகளின் வித்தியாசமான ரூ. 8,525,713 முதலீட்டு காசுப்பாய்வில் அறிக்கையிட்டமையால் முதலீட்டு காசுப்பாய்வு ரூ. 2,645,213 ஆல் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.

1.2.2 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகள் பற்றிய கருத்துரைத்தல்

1.2.2.1 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த கீழே குறிப்பிடப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் நிதிக்கூற்றுகள் மீதான முனைப்பழியுள்ள அபிப்பிராயம் பின்வரும் அவதானிப்புகளை அடிப்படையாகக்கொண்டு வெளியிடப்பட்டது.

(அ) 2025 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதிய பங்களிப்பு வைப்புக்களிலிருந்து ஈட்டப்பட்ட ரூ. 17,577,610 முதலீட்டு வட்டி வருமானம் நடப்பு வருடத்தின் வருமானமாக கணக்குப் பதியப்படாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு இருந்தமையால் அந்த அளவினால் இலாபம் குறைவாக காணப்பட்டது.

(ஆ) ஓய்வூதியம் உரித்தான உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து 2025 ஆண்டு சம்பந்தமாக அறவிடப்பட்டிருந்த ரூ.125,341,700 ஓய்வூதிய பங்களிப்பு வருமானமும் காப்புறுதிக் கட்டுப்பணப் பெறுகையான ரூ. 6,795,722 உம் நடப்பு வருடத்தின் வருமானமாக கணக்குப் பதியப்படாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தமையால் நடப்பு வருடத்தின் இலாபம் ரூ. 132,137,422 ஆல் குறைவடைந்திருந்தது.

(இ) நிதிக்கூற்றுகளுக்கான குறிப்பு இலக்கம் 2.7.1 இன்படி திட்டத்திற்கு இடையறாத வழியுரிமை நிலவுவதாக தெளிவுபடுத்தப்பட்டிருப்பினும் திட்டத்தின் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்த பொறுப்புகள் அதாவது தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூ. 91,930, 824,552 எதிர்க்கணியப் பெறுமானத்தை வகித்ததாலும் தேறிய நடைமுறைப் பொறுப்புகள் ரூ. 2,078,842,204 ஆக அமைந்தமையாலும் சுயாதீனமாக செயற்படு மூலதன தேவைப்பாடுகளை

ஈடுசெய்து கொள்ளக்கூட திட்டத்திடன் இயலுமை கிடையாதென்பது அவதானிக்கப்பட்டது. ஆண்டில் ரூ. 5,083,177,439 ஓய்வூதியமாக செலுத்தப்பட்டிருந்ததோடு திறைசேரியிடமிருந்து அதற்காக ரூ. 5,043,000,000 வழங்கப்பட்டிருந்தது. 2025 திசெம்பர் 31 இல் ஒட்டுமொத்த முதலீடு ரூ. 3,998,427,672 ஆக அமைந்ததோடு 2025 ஆம் ஆண்டுக்கான முதலீட்டு வருமானம் ரூ. 315,257,792 ஆக விளங்கியது. அதன்படி திறைசேரியின் பங்களிப்பு இல்லாமல் திட்டத்தை பேணிவர முடியாத நிலைமை நிலவியபோதிலும் திட்டத்தை எதிர்காலத்தில் சுயாதீனமாக பேணிவருதல் பற்றிய வேலைத்திட்டமோ அல்லது திறைசேரியின் பங்களிப்பினை இடையறாமல் வழங்குதல் பற்றிய எந்தவிதமான இணக்கப்பாட்டிற்கோ வந்திராததால் திட்டத்தின் இடையறாத வழியுரிமை கருத்துபேதத்தை ஏற்படுத்த வல்லது.

1.2.2.2 கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் 2025 திசெம்பர் 31 அந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளின்பேரில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

நிதிக்கூற்றுகளுக்கான குறிப்பு இலக்கம் 2.7.1 இன்படி திட்டத்திற்கு இடையறாத வழியுரிமை நிலவுவதாக தெளிவுபடுத்தப்பட்டிருப்பினும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் திட்டத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 5,439,404,553 எதிர்க்கணிய பெறுமானத்தைக் கொண்டிருந்ததோடு அன்றைய திகதியிலான எதிர்கால ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 6,068,890,556 ஆக அமைந்தபோதிலும் முதலீடுகளின் பெறுமதி ரூ. 750,403,931 ஆக அமைந்திருந்தது. அதன்படி திட்டத்தின் மொத்த சொத்துக்கள தேறச்செய்விப்பதால் மொத்த பொறுப்பினை தீர்க்கமுடியாதென்பதோடு அதற்கான எதிர்காலத்திட்டமொன்றும் செயற்றிட்டத்திடம் நிலவாமையால் திட்டத்தின் இடையறாத வழியுரிமை சர்ச்சைக்குரியதாகும். இது சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மறுக்கப்படமாட்டாது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் உசிதமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 குழுமத்தின் 2025 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையிலுள்ள திகதிக்கு முன்னர் நான் குழுமத்தின் 2025 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள எனினும் நிதிசார் அறிக்கைகள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதன் மூலமாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுகள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதோடு நான் அது பற்றிய எந்தவிதமான உத்தரவாதத்தையோ அல்லது அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்தப் போவதில்லை.

நிதிக்கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக அமைவது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக்கூடியதாக அமைந்தவிடத்து வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள்

நிதிக்கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் வேறுவிதமாகப் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கிணங்க கணியரீதியாக பொருந்துவதில்லையா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதுமாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின்பேரிலும் என்னால் புரியப்பட்ட பணிகளின் அடிப்படையிலும் இந்த ஏனைய தகவல்கள் கணியரீதியாக தவறாக காட்டப்பட்டுள்ளதாக நான் ஊகிப்பேனாயின் அந்த விடயங்களை நான் அறிவிக்க வேண்டும். இது சம்பந்தமாக நான் அறிவிக்கவேண்டிய விடயமேதும் கிடையாது.

1.4 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் குழுமத்தை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் குழுமத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் சபையினதும் குழுமத்தினதும் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் ஸ்ரீலங்கா கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்வோரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்வாண்மை தீர்ப்பளிப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்தேகங்களுடன் ஶ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடு செய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற அபாயநேர்வுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், போதியளவிலானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, மறைசூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் எற்பட காரணமாக அமைகின்றன.
- சபையினதும் குழுமத்தினதும் உள்ளக் கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும்பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வு பெறப்பட்டது.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் உசிதமானதன்மை, நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக கொள்கைகள் சபையின் இடையறாத வழியுரிமை பற்றிய நிச்சமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சமற்றதன்மைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் மறுக்கப்பட்டதாதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமாகவும் நியாயமாகவும் உள்ளடங்கி இருப்பதாகவும் வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.
- ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகள் பற்றிய அபிப்பிராயமொன்றை வெளியிடுவததற்காக குழுமத்திற்குள் இருக்கின்ற நிறுவனங்கள் அல்லது தொழில்முயற்சி செயற்பாடுகளின் நிதிசார் தகவல்கள் சம்பந்தமான போதியளவிலான பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்காக குழுரீதியான கணக்காய்வுகளை திட்டமிட்டு அமுலாக்கவேண்டும். குழுமக் கணக்காய்வின் நெறிப்படுத்தல், மேற்பார்வை மற்றும் செயலாற்றுகை தொடபில் நான் பொறுப்புக்கூற வேண்டும். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக நான் முழுமையான பொறுப்பினை வகிக்கவேண்டும். எனது கணக்காய்வில் இனங்கண்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதானமான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக ஆளுந்தரப்பினர் விழிப்பூட்டப்பட்டனர்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன .

2.1.1 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியி விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக கணக்காய்விற்கு அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது விசாரணையில் புலனாகின்றவிதத்தில் முறையான நிதியறிக்கைகள் சபையினால் பேணிவரப்பட்டிருந்தன.

2.1.2 சமர்ப்பிக்கப்பட்ட கணக்குக் கூற்றுகள் 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க முந்திய வருடத்துடன் நேரொத்தவையாக அமைகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாட்டிற்கு அமைவாக எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.2.2 (உ),(ஊ) (எ) மற்றும் (ஏ) ஆகிய பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் கணியரீதியான மட்டுப்பாடுகளுக்குள்ளேயும் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் அளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க சபையின் ஆளுகைச் சபையினது எவரேனும் அங்கத்தவருக்கு சபையுடன் இணைந்த ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக எதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றி உள்ளமை.

சட்டவிதிகள்/ கட்டளைக்கான தொடர்பு	அவதானிப்புகள்
(அ) 2022 யூலை 8 ஆந் திகதிய 02/2022 இலக்கமுடைய அரசாங்க கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் 1.2.5 பந்தி	ஏதேனும் குறித்துரைத்த கருமத்திற்காக நியதிச்சட்டமுறையான நிறுவனமொன்றுக்கு ரூ. 01 மில்லியன் வரை வெகுமதிகள்/ கொடைகள் என்றவகையில் கிடக்கின்ற பணம் சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டியிருப்பினும் மொபிரெல் நிறுவனத்தினால் 2024 ஆம் ஆண்டில் கிடைத்த ரூ. 01 மில்லியன் பணத்தொகை அவ்விதமாக அனுப்பிவைக்கப்படாமல் வங்கிக்கணக்கொன்றில் தேக்கிவைக்கப்பட்டிருந்தது.
(ஆ) 2021 நவெம்பர் 6 ஆந் திகதிய 01/ 2021 இலக்கமுடைய அரசாங்க பொறுப்புமுயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்க பொறுப்புமுயற்சிகளுக்காக அமுலாக்கப்படுகின்ற தொழிற்பாடுகள் கையேட்டின் 3.2 (v) பந்தி	மூன்றாந்தரப்பு காப்புறுதி வருமானத்தில் நூற்றுக்கு 5 வீதத்தை ஒதுக்கி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின்பேரில் ஊக்குவிப்புப்படி நிதியமொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்ததோடு 2025 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான ஒதுக்கீடு ரூ. 18,553, 661 ஆக அமைந்ததோடு 2025 திசெம்பர் 31 ஆந திகதியில் மீதி ரூ. 46,639,435 ஆக அமைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டிலிருந்து 2025 அம் ஆண்டுவரை கூட்டுத்தொகை ரூ. 37,808,740 ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்ததோடு இந்த நிதியத்தை நிறுவுவதற்கும் ஊக்குவிப்பு படியைச் செலுத்துகின்ற முறையியலுக்காகவும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
(இ) 2025 திசெம்பர் 02 ஆந் திகதிய PED 02/2025 ஆம் இலக்கமுடைய மற்றும் 2024 திசெம்பர் 23 ஆந் திகதிய PED 03/2024 இலக்கமுடைய அரசாங்க பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளும் 2024 இன் 44 ஆம் இலக்கமுடைய அரச நிதி முகாமைத்துவ சட்டமும்	2023 மற்றும் 2024 ஆண்டுகளில் வரிவிதிப்பின் பின்னரான இலாபத்திலிருந்து குறைந்தபட்சம் நூற்றுக்கு 30 சதவீதம் திரட்டு நிதியத்திற்கு பங்கிலாபமாவோ வரியாகவோ செலுத்தவேண்டுமென்பதோடு அவ்வாறான கொடுப்பனவுகளை செலுத்தியுள்ள நிறுவனங்களுக்காக மாத்திரம் மிகையூதியத்தை செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக சபையின் வரிக்குப் பிந்திய இலாபம் முறையே ரூ. 697,665,211 மற்றும் ரூ. 1,338,838,415 ஆக அமைந்தபோதிலும் சபையினால் அதனோடு தொடர்புடைய வரி செலுத்தப்படவில்லை என்பதோடு மிகயூதியத்திற்காக 2025 நிதியாண்டில் ரூ. 21,855,834 ஒதுக்கப்பட்டிருந்தது.

2.2.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன் அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாட்டிற்கு அமைவாக கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் தவிர்ந்ததாக சபையின் வளங்களை சிக்கனமாகவும் விளைவாற்றல்மிக்க வகையிலும் காலப்பகுதிகளுக்குள் சம்பந்தப்பட்ட சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைசெய்து பாவித்திருக்கவில்லை என்பது.

சபையின் முகாமைத்துவ தகவல் முறைமைக்கான தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடல் முறைமைக்காக (ERP System) 2023 ஆம் ஆண்டளவில் ரூ. 72,002,970 செலுத்தியிருந்ததோடு பின்னர் உடன்படிக்கை காலத்தை 2025 திசெம்பர் 31 வரை நீடித்துக்கொண்டிருந்தபோதிலும் 20256 மார்ச் 20 ஆம் திகதியளவிலும் மேற்படி அலுவல்கள் நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

3. ஏனைய விடயங்கள்

(அ) எதிர்பாராத நிகழ்வுகளால் தோன்றுகின்ற உரிமைகோரல்களுக்காக பிரயோகிக்கப்படவேண்டிய ஒதுக்க நிதியமொன்று 2002 ஆம் ஆண்டிலிருந்து கட்டியெழுப்பப்பட்டிருந்ததோடு 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் அதன் மீதி ரூ. 648,817,048 ஆக அமைந்தது. மேற்படி நிதியம் பாவிக்கப்படவேண்டிய எதிர்பாராத நிகழ்வுகள் சம்பந்தமாக வரைவிலக்கணம் விதித்து விதிமுறைகள் கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை என்பதால் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டுவரை 23 வருட காலத்திற்குள் இந்த நிதியம் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2024 பெப்ருவரி 28 திகதியைக்கொண்ட 01 /2024 இலக்கமுடைய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 வது பிரிவிற்கமைவாக அரசாங்கத்திற்குச் சொந்தமான பொறுப்புமுயற்சிகளின் நிதியங்கள் நலன்புரிச் சங்கங்கள் அல்லது வேறு எந்தவொரு நலனோம்பல் அலுவல்களுக்காகவும் மாற்றப்படக்கூடாதபோதிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்பேரில் ஊழியர்களுக்கு காப்புறுதிக் காப்பீடொன்றினை வழங்குவதற்காக ஊழியர் மருத்துவக் காப்புறுதி நிதியமொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்ததோடு 2025 ஆம் ஆண்டில் குழுமத்தின் பங்களிப்பு ரூ. 5,293,1350 மற்றும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதியத்தின் மீதி ரூ. 44,799,953 ஆக அமைந்திருந்தது. இந்த நிதியத்தை தாபிப்பதற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கும் இடையில் நிலவுகின்ற தாபனஞ்சார் வாடிக்கையாளர் உடன்படிக்கையின்கீழ் (Corporate Customer Agreements) சபைக்கு கொடையளிப்பாக வழங்கப்பட்டிருந்த ரூ. 1,022,691 பெறுமதியான 10 கையடக்கத் தொலைபேசிகள் சபைக்கு வழங்கப்பட்டதாக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் உறுதிசெய்திருந்தபோதிலும் அவை சபையின் கையிருப்பு பதிவேடுகளிலோ பௌதீகரீதியாகவோ சபையில் காணப்படவில்லை. மேலும் 1918 Call Center சேவைக்காக பெறப்பட்டிருந்த 60 தொலைபேசிகளில் 3 தொலைபேசிகள்

மாத்திரம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கபட்டிருந்ததோடு 57 தொலைபேசிகள் பௌதீகரீதியாக சபையிடம் இருக்கவில்லை. அத்துடன் சேவைபெறுனர்களை விழிப்பூட்டுகின்ற உத்தியோகத்தர்களுக்காக 2025 ஆம் ஆண்டில் புதிய 04 தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) மொபிடெல் நிறுவனத்திடமிருந்து ரூ. 514,998 பெறுமதிகொண்ட Samsung Eider FM வகையைச்சேர்ந்த 153 கையடக்கத் தொலைபேசிகள் கிடைத்திருந்தபோதிலும் நிறுவனம் அல்லது பிரதான வாடிக்கையாளர்களிடையே அவை விநியோகிக்கப்பட்டிருந்தமைக்கான அல்லது சபையின் கையிருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) AIMS முறைமையை கமக்காரர்களை பதிவுசெய்தல், பயிர்ச்செய்கை தகவல்களை சேகரித்தல், வயல்களின் மேற்பார்வை, பயிர்ச்சேதங்களை மதிப்பீடுசெய்தல் மற்றும் காப்புறுதி இழப்பீட்டினைக் கணித்தல் என்பவற்றுக்காக தயாரித்த முழுமையான டீஜிட்டல் முறைமையாக 2022 ஆம் ஆண்டில் IFC நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தபோதிலும் AIMS நடமாடும் செயலி (Mobile Application) உரிய பராமரிப்பு அலுவல்களுடன் காலத்துடன் பொருத்தமானவகையில் இற்றைப்படுத்தப்பட்டிராமை. நிகழ்காலத்தில் பாவிக்கப்படுகின்ற Android தொழிற்பாட்டு முறைமை பதிப்புகளுடன் அமைந்தொழுகாமை மற்றும் நீண்டகால தொழில்நுட்ப உரித்தாண்மை இல்லாமை காரணமாக முழுமையாகவே செயலிழந்து காணப்பட்டதோடு Google Play Store ஊடாகவும் இந்த நடமாடும் செயலி அகற்றப்பட்டிருந்தது. அதைப்பேலவே செயலிழந்த இந்த இந்த நடமாடும் செயலியை (Mobile Application) சிறிய திருத்தங்கள் மூலமாக இற்றைப்படுத்துவதை நடைமுறையில் செய்யமுடியாத நிலைமையில் நிலவியதோடு அது மீண்டும் முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான நிலைமையை அடைந்திருந்தது. அதன்படி கருத்திட்டத்திற்காக செலவிட்ட ரூ. 95,494,054 பணத்தொகை பலனற்ற செலவாக மாறியிருந்தது.

(ஊ) 2024/25 பெரும்போக இழப்பீடு செலுத்துவதற்காக 9 சந்தர்ப்பங்களில் 71,746 கமக்காரர்களுடன் தொடர்புடைய 83,383 ஏக்கர்களுக்காக ரூ. 867,882,909 பணத்தொகை சபைக்கு தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைத்துள்ளது. அதில் சேத இழப்பீடு செலுத்துவதற்காக ரூ. 800,843,332 செலவிடப்பட்டிருந்தது. அதன்படி ரூ. 67,039,577 மிகைநிலை சம்பந்தமாக இவ்வறிக்கையின் திகதிவரை எந்தவிதமான நடவடிக்கையோ திறைசேரிக்கு அனுப்பிவைத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்
எல்.எஸ்.ஐ.ஜயரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
ஒருங்கிணைந்த வருமானக் கூற்று
நிதிநிலைமை பற்றிய கூற்று

		கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
		31.12.2025	31.12.2024	31.12.2025	31.12.2024
	குறிப்பு	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
சொத்துக்கள்					
நடைமுறையல்லா சொத்துக்கள்					
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி	1	415,834,837	295,956,724	405,451,396	283,845,231
தொட்டுணர முடியாத சொத்து : WIP ERP முறைமை		72,002,970	72,002,970	72,002,970	72,002,970
		487,837,807	367,959,694	477,454,366	355,848,201
நிதிசார் சாதனங்கள்					
திறைசேரி முறிகள்		6,324,789,819	5,657,249,551	3,579,643,674	3,319,257,408
		6,324,789,819	5,657,249,551	3,579,643,674	3,319,257,408
நடைமுறை சொத்துக்கள்					
கையிருப்புகள்	2.1	38,662,016	35,195,530	29,916,072	26,899,915
வருமதிகள்	2.2	191,436,682	149,863,972	1,035,983,536	993,153,254
வருமதியான கட்டுப்பணம்	2.3	1,185,390	1,826,970	553,893	810,790
வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும்	2.4	15,889,836	23,882,944	15,889,836	23,882,944
முற்பணங்கள்	2.5	10,687,617	29,781,785	10,687,617	29,781,785
பருவமுதிர்வுவரை தடுத்துவைத்த நிதிச் சாதனங்கள்	2.6	5,935,430,315	4,795,234,411	3,931,744,859	3,467,937,002
காசு மற்றும் காசுக்கு இணையானவை	2.7	43,252,240	56,711,051	22,909,818	37,965,764
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		6,236,544,097	5,092,496,662	5,047,685,631	4,580,431,453
மொத்த சொத்துக்கள்		**13,049,171,723**	**11,117,705,908**	**9,104,783,671**	**8,255,537,063**
உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்					
மூலதனமும் ஒதுக்கங்களும்					
திறைசேரியால் வழங்கப்பட்ட தொடக்க மூலதனப் பங்களிப்பு		50,000,000	50,000,000	50,000,000	50,000,000
க.க.கா.ச. திரண்ட நிதியம்	3	(93,328,021,802)	(93,318,413,051)	5,133,742,803	4,479,043,840
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	4	91,882,835	10,654,285	91,882,835	10,654,285
க.க.கா.ச. ஒதுக்க நிதியம்	5	648,817,048	588,524,391	648,817,048	588,524,391
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	6	1,616,228,942	1,527,083,863	1,577,918,847	1,490,350,049
பணியாளர் மருத்துவக் காப்புறுதி நிதியம்		44,799,954	36,274,241	44,799,954	36,274,241
கெத்தட்ட அருண கட்டாய காப்புறுதி நிதியம்		706,503,600	706,503,600	706,503,600	706,503,600
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		255,524,821	214,006,925	246,477,321	206,206,925
உற்பத்தி மேற்பாட்டு மற்றும் ஊக்குவிப்பு நிதியம்		46,639,435	38,361,464	46,639,435	38,361,464
கமக்காரர் ஒய்வூதியத்திற்கான அரசாங்கக் கொடை		1,081,488,000	1,081,488,000	-	-
மூலதனக் கொண்டை - GIZ		88,404,556	88,404,556	88,404,556	88,404,556
		(88,697,732,611)	(88,977,111,726)	8,635,186,399	7,694,323,350
நடைமுறையல்லாப் பொறுப்புகள்					
பணிக்கொடைக்கான ஏற்பாடு		161,784,887	90,459,417	64,437,437	39,032,761
ஓய்வூதியப் பொறுப்பு		98,149,339,648	97,122,025,950	-	-
		98,311,124,535	97,212,485,368	64,437,437	39,032,761
நடைமுறைப் பொறுப்புகள்					
அச்சிடலுக்கான ஏற்பாடு		1,656,082	1,845,812	700,000	700,000
கிடைத்த முற்கொடுப்பனவு	7.1	73,127,038	116,164,521	73,127,038	116,164,521
பிற சென்மதிகள்	7.2	3,179,059,858	2,528,330,730	154,938,437	175,229,578
அட்டுறு செலவினங்கள்	7.3	35,383,185	38,374,728	29,840,723	32,470,377
இழப்பீட்டுக்கான ஏற்பாடு	7.4	146,553,637	197,616,476	146,553,637	197,616,476
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		3,435,779,800	2,882,332,266	405,159,835	522,180,952
மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்		**13,049,171,723**	**11,117,705,908**	**9,104,783,671**	**8,255,537,063**

இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

…….. நிதிப் பிரதானீ

…….. நிதிப் பிரதானீ

இந்த நிதிக்கூற்றுகளின் தயாரிப்பிற்கும் சமர்ப்பணத்திற்கும் பணிப்பாளர்சபை பொறுப்புக் கூறுகின்றது.
சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கையொப்பமிட்டது.

…….. பணிப்பாளர்சபை உறுப்பினர் கமத்தெhழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

…….. பணிப்பாளர்சபை உறுப்பினர் கமத்தெhழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
ஒருங்கிணைந்த வருமானக் கூற்று
விரிவான வருமானம் பற்றிய கூற்று

		கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
		31.12.2025	31.12.2024	31.12.2025	31.12.2024
வருவாய்	*குறிப்பு*	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**
கட்டுப்பணமும் பங்களிப்புத் தொகையும்	8.1	638,309,613	623,351,504	637,938,187	623,284,487
காப்புறுதிக் கட்டுப்பணம் – திறைசேரி பங்களிப்பு		626,000,000	1,000,000,000	626,000,000	1,000,000,000
இழப்பீட்டுக்கான கொடை – NITF பயிர் அறவீடு		1,095,498,379	1,282,703,785	1,095,498,379	1,282,703,785
வட்டி வருமானம்	8.2	1,090,126,559	1,107,874,664	686,224,469	785,952,802
மொத்த வருவாய்		**3,449,934,552**	**4,013,929,953**	**3,045,661,035**	**3,691,941,074**
தொழிற்பாட்டு செலவினங்கள்					
இழப்பீடு	9.1	(1,719,672,545)	(1,780,680,767)	(1,719,672,545)	(1,780,680,767)
தொழிற்பாட்டு செலவுகள்	9.2	(141,770,775)	(129,694,540)	(120,135,341)	(111,497,555)
ஓய்வுதியக் கொடுப்பனவு		(5,174,620,005)	(4,933,473,726)	-	-
தேறிய வட்டியினதும் உதவுதொகையினதும் மீளளிப்பு		(18,832,101)	(17,769,003)	-	-
குழுமக் காப்புறுதிக் கட்டுப்பணம்		(17,150,820)	(17,721,420)	-	-
ஏலாமைப் பணிக்கொடை கொடுப்பனவு		(813,662)	(1,046,127)	-	-
ஓய்வூதியப் பொறுப்பு அதிகரிப்பு		(2,923,835,138)	(4,691,231,548)	-	-
		(9,996,695,046)	**(11,571,617,132)**	**(1,839,807,885)**	**(1,892,178,323)**
தொழிற்பாட்டு மிகைநிலை/ (பற்றாக்குறை)		**(6,546,760,494)**	**(7,557,687,179)**	**1,205,853,150**	**1,799,762,752**
ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான அரசாங்கக் கொடை		5,043,000,000	4,762,000,000	-	-
நிருவாகச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை		283,627,000	249,630,000	2,757,000	-
பிற வருமானம்	10	35,789,679	22,214,226	25,810,240	17,207,153
		5,362,416,679	**5,033,844,226**	**28,567,240**	**17,207,153**
		(1,184,343,815)	**(2,523,842,953)**	**1,234,420,390**	**1,816,969,905**
செலவுகள்					
நிருவாகச் செலவுகள்	11	(679,127,568)	(611,377,838)	(381,581,026)	(353,558,609)
நிதி மற்றும் பிற செலவுகள்.	12	(43,074,207)	(46,964,427)	(211,638)	(346,723)
மொத்த செலவுகள்		**(722,201,775)**	**(658,342,265)**	**(381,792,664)**	**(353,905,331)**
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)		**(1,906,545,590)**	**(3,182,185,218)**	**852,627,726**	**1,463,064,574**
வருமான வரிச் செலவுகள்	13	(121,339,946)	(124,226,159)	(121,339,946)	(124,226,159)
வரிக்குப் பிந்திய இலாபம்		**(2,027,885,537)**	**(3,306,411,377)**	**731,287,780**	**1,338,838,415**
க.க.கா.ச. ஒதுக்க நிதியத்திற்கான ஏற்பாடு		(60,292,658)	(89,988,138)	(60,292,658)	(89,988,138)
ஏற்பாடுகளுக்குப் பின்னரான தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)		**(2,088,178,194)**	**(3,396,399,515)**	**670,995,122**	**1,248,850,277**
பிற விரிவான வருமானம்					
பணிக்கொடை ஆதாயம் /(இழப்பு)		(66,906,262)	(31,961,267)	(25,447,098)	(15,059,774)
		(66,906,262)	(31,961,267)	(25,447,098)	(15,059,774)
ஆதனம், சாதனம், பொறித்தொகுதியின் மீள்மதிப்பீட்டு மிகைநிலை		41,517,896	41,476,578	40,270,396	40,526,578
இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.		**(2,113,566,560)**	**(3,386,884,204)**	**685,818,420**	**1,274,317,081**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

குழுமம்

விபரம்	திறைசேரி வழங்கிய தொடக்க மூலதனம்	திரண்ட மிகைநிலை/ (பற்றாக்குறை)	மூலதனத்திற்கான அரசாங்கக்கொடை	க.க.கா.ச. ஒதுக்க நிதியம்	கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	பணியாளர் மருத்துவக் காப்புறுதி நிதியம்	அருண கட்டாயக் காப்புறுதி நிதியம்	மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்	மேம்பாட்டு மற்றும் ஊக்குவிப்பு நிதியம்	திறைசேரி முறிமீதான அரசாங்கக் கொடை	மூலதனக் கொடை GIZ	கூட்டுத்தொகை
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
2024 சனவரி 01 இல் மீதி	**50,000,000**	**(90,041,219,155)**	**17,330,189**	**498,536,253**	**1,427,193,842**	**27,313,478**	**706,503,600**	**172,530,347**	**30,686,023**	**1,081,488,000**	**65,792,100**	**(85,963,845,323)**
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்		7,600,000										7,600,000
ஆண்டில் சேர்த்தவை:	-	143,566,886	9,150,000	89,988,138	17,721,420	5,221,150	-	-	18,056,415	-	22,612,456	306,316,465
வட்டி வருமானம்	-				84,137,602	5,876,906	-	-	-	-	-	90,014,507
அரசாங்கக் கொடை இலதாக்கல்	-	-	(15,825,905)	-	-	-	-	-	-	-	-	(15,825,905)
செலுத்திய நன்மைகள்	-				(1,969,000)	(2,137,293)	-	-	(10,380,974)	-	-	(14,487,267)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	(3,428,360,782)	-	-	-			41,476,578	-	-	-	(3,386,884,204)
2024 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**(93,318,413,051)**	**10,654,285**	**588,524,391**	**1,527,083,864**	**36,274,240**	**706,503,600**	**214,006,925**	**38,361,464**	**1,081,488,000**	**88,404,556**	**(88,977,111,727)**
ஆண்டில் சேர்த்தவை:	-	239,803,325	106,343,000	60,292,658	17,150,820	5,293,350	-	-	18,553,661	-	-	447,436,814
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்		1,905,672,380	-	-	-	-	-	-	-	-	-	1,905,672,380
வட்டி வருமானம்	-	-	-	-	73,123,259	5,880,500	-	-	-	-	-	79,003,758
அரசாங்கக் கொடை இலதாக்கல் கமக்காரர் ஓய்வூதிய அரசாங்கக்கொடை இலதாக்கல்	-	-	(25,114,449)	-	-	-	-	-	-	-	-	(25,114,449)
செலுத்திய நன்மைகள்	-	-	-	-	(1,129,000)	(2,648,137)	-		(10,275,690)	-	-	(14,052,827)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	(2,155,084,456)	-	-	-	-	-	41,517,896		-	-	(2,113,566,560)
2025 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**(93,328,021,802)**	**91,882,835**	**648,817,048**	**1,616,228,942**	**44,799,953**	**706,503,600**	**255,524,821**	**46,639,435**	**1,081,488,000**	**88,404,556**	**(88,697,732,611)**

உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

விபரம்	திறைசேரி வழங்கிய தொடக்க மூலதனம்	திரண்ட மிகைநிலை/ (பற்றாக்குறை)	மூலதனத்திற்கான அரசாங்கக்கொடை	க.க.கா.ச. ஒதுக்க நிதியம்	கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	பணியாளர் மருத்துவக் காப்புறுதி நிதியம்	கெத்தட்ட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம்	மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்	உற்பத்தி மேம்பாட்டு மற்றும் ஊக்குவிப்பு நிதியம்	திறைசேரி முறிமீதான அரசாங்கக் கொடை	மூலதனக் கொடை GIZ	கூட்டுத்தொகை
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
2024 சனவரி 01 இல் மீதி	**50,000,000**	**3,237,653,337**	**17,330,189**	**498,536,253**	**1,391,994,627**	**27,313,478**	**706,503,600**	**165,680,347**	**30,686,023**	-	**65,792,100**	**6,191,489,954**
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	-		9,150,000	89,988,138	15,977,820	5,221,150	-	40,526,578	18,056,415	-	22,612,456	201,532,557
வட்டி வருமானம்	-				84,137,602	5,876,906	-	-	-	-	-	90,014,507
அரசாங்கக் கொடை இலதாக்கல்	-	-	(15,825,905)	-	-	-	-	-	-	-	-	(15,825,905)
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	-	7,600,000	-	-	-	-	-	-	-	-	-	7,600,000
செலுத்திய நன்மைகள்	-	-	-	-	(1,760,000)	(2,137,293)	-	-	(10,380,974)	-	-	(14,278,267)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	1,233,790,503	-	-	-			-	-	-	-	1,233,790,503
2024 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**4,479,043,840**	**10,654,285**	**588,524,391**	**1,490,350,049**	**36,274,240**	**706,503,600**	**206,206,925**	**38,361,464**	-	**88,404,556**	**7,694,323,350**
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	-	-	106,343,000	60,292,658	15,402,540	5,293,350	-	40,270,396	18,553,661	-	-	246,155,605
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	-	9,150,939	-	-	-	-	-	-	-	-	-	9,150,939
வட்டி வருமானம்	-	-	-	-	73,123,259	5,880,500	-	-	-	-	-	79,003,758
அரசாங்கக் கொடை இலதாக்கல் கமக்காரர் ஓய்வூதிய அரசாங்கக்கொடை இலதாக்கல்	-	-	(25,114,449)	-	-	-	-	-	-	-	-	(25,114,449)
செலுத்திய நன்மைகள்	-	-	-	-	(957,000)	(2,648,137)	-	-	(10,275,690)	-	-	(13,880,827)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	645,548,024	-	-	-	-	-	-	-	-	-	645,548,024
2025 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**5,133,742,803**	**91,882,835**	**648,817,048**	**1,577,918,847**	**44,799,953**	**706,503,600**	**246,477,321**	**46,639,435**	-	**88,404,556**	**8,635,186,399**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

காசுப்பாய்வுக் கூற்று

	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
	31.12.2025	**31.12.2024**	**31.12.2025**	**31.12.2024**
	ரூ.	**ரூ.**	**ரூ.**	**ரூ.**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்வு				
வரிவிதிப்பிற்கு முன்னரான தேறிய மிகைநிலை /(பற்றாக்குறை)	(1,906,545,590)	(3,182,185,218)	852,627,726	1,463,064,574
சீராக்கல்கள்				
தேய்மானம்	59,526,861	43,690,621	56,524,610	41,644,775
அரசாங்கக் கொடை இலதாக்கல்	(25,114,449)	(15,825,905)	(25,114,449)	(15,825,905)
ஓய்வூதிய பொறுப்பிலான அதிகரிப்பு	2,923,835,138	4,691,231,548	-	-
சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடு/அட்டுறு	97,098,343	151,252,512	97,098,343	151,252,512
க.கா.சபையினால் செலுத்தப்பட்ட நிருவாகச் செலவுகள்	-	-	(255,944,923)	(241,024,034)
க.கா. சபை மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்கக் கொடை	-	-	280,870,000	249,630,000
பணியாளர் ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு நிதியம்	18,553,661	18,056,415	18,553,661	18,056,415
இறப்புப் பணிக்கொடைக் கட்டுப்பணம்	17,150,820	17,721,420	-	-
வட்டிச் செலவுகள்	42,831,809	46,482,878		
	3,133,882,183	**4,952,609,491**	**171,987,241**	**203,733,764**
ஆதனம், சாதனம்,பொறித்தொகுதி விற்பனையிலான (ஆதாயம்) / இழப்பு	(330,084)	(49,715)	(318,197)	(49,715)
இளைப்பாற்று பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	18,022,668	10,187,207	10,135,162	5,324,589
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்	**1,245,029,177**	**1,780,561,765**	**1,034,431,933**	**1,672,073,211**
சரக்குத்தொக்குகளிலான (அதிகரிப்பு) /வீழ்ச்சி	(3,466,486)	3,342,609	(3,016,157)	6,371,563
வருமதிகளிலான (அதிகரிப்பு) /வீழ்ச்சி	(41,572,710)	313,546,506	17,899,642	337,624,005
பெறத்தக்க பிரீமியத்தை அதிகரித்தல்/குறைத்தல்	668,279	(538,790)	256,897	(439,056)
வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகளிலான (அதிகரிப்பு) /வீழ்ச்சி	7,993,108	6,654,082	7,993,108	6,654,082
முற்பணத்திலான (அதிகரிப்பு) /வீழ்ச்சி	19,094,167	(29,112,437)	19,094,167	(29,112,437)
சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடுகளின் அதிகரிப்பு/(வீழ்ச்சி)	(146,862,381)	(919,404,690)	(146,862,381)	(919,404,690)
அச்சிடல் ஏற்பாடுகளிலான அதிகரிப்பு/(வீழ்ச்சி)	(189,730)	(76,888)	-	100,000
முற்கட்டுப்பண முற்பணத்திலான அதிகரிப்பு/(வீழ்ச்சி)	(43,037,484)	478,203	(43,037,484)	478,203
பிற சென்மதிகளின் அதிகரிப்பு/(வீழ்ச்சி)	668,675,880	612,168,072	(27,281,353)	(37,623,517)
அட்டுறு செலவினங்களின் அதிகரிப்பு/(வீழ்ச்சி)	(2,991,542)	(1,039,688)	(2,629,653)	(2,915,524)
	458,311,101	**(13,983,020)**	**(177,583,213)**	**(638,267,370)**
தொழிற்பாடு நடவடிக்கைகளிலிருந்து பிறப்பித்த காசு	**1,703,340,278**	**1,766,578,745**	**856,848,719**	**1,033,805,841**
செலுத்திய வருமான வரி	(129,699,872)	(347,270,504)	(129,699,872)	(347,270,504)
செலுத்திய இளைப்பாற்று நன்மை	(13,603,460)	(7,152,010)	(13,603,460)	(7,152,010)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்வுகள்	**1,560,036,946**	**1,412,156,230**	**713,545,387**	**679,383,327**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்வுகள்				
மருத்துவ நிதியம்	8,525,713	8,960,763	8,525,713	8,960,763
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	29,162,449	35,685,723	30,291,449	37,654,723
பணியாளர் ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு நிதியம்	(10,275,690)	(10,380,974)	(10,275,690)	(10,380,974)
ஆண்டிலான முதலீடுகள்	(1,807,736,172)	(1,541,699,169)	(724,194,123)	(685,409,788)
ஆதனம், சாதனம், பொறித்தொகுதிக் கொள்வனவு	(33,337,135)	(52,761,756)	(33,310,436)	(47,270,065)
ஆதனம், சாதனம், பொறித்தொகுதிக் கொள்வனவு	361,753	50,620	361,753	50,620
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்வுகள்	**(1,813,299,082)**	**(1,560,144,792)**	**(728,601,333)**	**(696,394,720)**
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்வுகள்				
மூலதனச் செலவுகளுக்கான கொடை	-	22,612,456	-	22,612,456
புதிய ஓய்வூதியத் திட்ட நிதியம்	114,461,625	54,818,394	-	-
பழைய ஓய்வூதியத் திட்ட நிதியம்	125,341,700	88,748,492	-	-
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்வு	**239,803,325**	**166,179,342**	**-**	**22,612,456**
காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி)	**(13,458,811)**	**18,190,780**	**(15,055,946)**	**5,601,062**
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு இணையானவை	**56,711,052**	**38,520,272**	**37,965,764**	**32,364,702**
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு இணையானவை	**43,252,241**	**56,711,052**	**22,909,818**	**37,965,764**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

1. பொதுவான கொள்கைகள்

1.1. அறிக்கையிடும் அமைப்பாண்மை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது. சபையின் பதிவுசெய்த அலுவலகம் நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதியில் இலக்கம் 117 எனுமிடத்தில் அமைந்துள்ளதோடு பிரதான தொழில்முயற்சி நிலையமும் மேற்படி முகவரியிலேயே அமைந்துள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள கமத்தொழில் காப்புறுதிச்சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள அத்துடன் 1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ள அனைத்துவிதமான தத்துவங்களும் பணிகளும் விதிக்கப்பட்டுள்ள திகதியில் இருந்து சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களாகவும் பணிகளாகவும் கருதப்படல் வேண்டும்.

1.2 தாய் அமைப்பாண்மை மற்றும் இறுதியான தாய் அமைப்பாண்மை

சபையின் தாய் அமைப்பாண்மை மற்றும் இறுதியான தாய் அமைப்பாண்மையாக அமைவது இலங்கை அரசாங்கமாகும்.

1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கமத்தொழில் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள், மூலிகைச் செடிகள், பண்ணை விலங்குகள், மீன்பிடிக் கைத்தொழில், காடு வளர்ப்பு, கமத்தொழிற் சாதனங்களும் கருவிகளும், கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை உற்பத்திகள், மூலிகைச் செடிகளின் உற்பத்திகள், மீன்பிடி மற்றும் காடுகளுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்தல், பாதுகாத்துவைத்தல் உள்ளிட்டதாக கமத்தொழில் காப்புறுதியில் சபை பிரதானமாக ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் கமத்தொழில் புரிபவர்களுக்கு மருத்துவ நலன்களையும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் வழங்குதல் மற்றும் உரக் காப்புறுதி நடவடிக்கைகளிலும் விவசாயிகளுக்குச் சொந்தமான வாகனங்களுக்காக மூன்றாந்தரப்பு காப்புறுதிக் காப்பீட்டினை வழங்குதலிலும் சபை ஈடுபட்டு வருகின்றது. மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டில் சபையின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் கணிசமான மாற்றமேதும் ஏற்படவில்லை.

1.4 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

1. 5 ஊழியர் எண்ணிக்கை

2025 திசெம்பர் 31 இல் சபையின் ஊழியர் எண்ணிக்கை 352 ஆகும்.

1.6 பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுகள் அங்கீகரிக்கப்படுதல்

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுகள் 2026 பெப்ருவரி 26 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு வெளியிடுவதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்டது.

2. தயாரித்தலுக்கான அடிப்படையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

2.1 இசைவுக் கூற்று

இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள் /இலங்கை கணக்கீட்டு நியமமங்கள்) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் கீழ்க்காணும் ஆக்கக்கூறுகளை உள்ளடக்குகின்றன.

- நிதி நிலைமை பற்றிய கூற்று 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் பற்றிய தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 01)
- விரிவான வருமானக் கூற்று மீளாய்வாண்டுக்கான கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் நிதிசார் செயலாற்றுகை பற்றிய தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 02)
- உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று உரிமைப் பங்கிலான அனைத்துவிதமான மாற்றங்களையும் சித்தரிக்கின்றது. (பக்கம் 03)
- காசுப் பாய்வுக் கூற்று, காசு மற்றும் காசுக்கு இணையானவற்றை பிறப்பிப்பதில் சபை கொண்டுள்ள இயலுமையையும் மேற்படி காசுப்பாய்வின் பாவனை பற்றியும் பயனர்களுக்கு தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 04)
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல்களுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள். (பக்கம் 05 - 29)

2.2 அளவிடுதலுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புகளின்கீழ் நியாயமான பெறுமதி தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றவேளையில் தவிர்ந்ததாக இந்த நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய மரபின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்

சபை அதன் சார்புரீதியான திரவத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில் விரிவாக அதன் நிதிநிலைமை பற்றிய கூற்றினை வெளியிடுகின்றது. நிதிக்கூற்றுகள்மீது தாக்கமேற்படுத்துகின்ற பணவீக்கம்சார்ந்த காரணிகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

2.4 நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தலிலான புழக்கத்திலுள்ள பணம்

சபையின் நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தல் புழக்கத்திலுள்ள பணமான இலங்கை ரூபாய்களில் இந்த நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்துவிதமான நிதிசார் தகவல்களும் வேறுவிதமாக குறிப்பிட்டிருந்தாலேயொழிய கிட்டிய ரூபாவில் கணிக்கப்பட்டுள்ளது.

2.5 கணிசநிலையும் திரட்டலும்

ஒத்த உருப்படிகளில் ஒவ்வொரு கணிசமான வகுப்புகளும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இயல்பு அல்லது பணிகளுக்கிணங்க உருப்படிகள் சமமற்றதாக அமைந்தாலேயன்றி அவையும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.6 அறிக்கையிடல் காலப்பகுதி

அறிக்கையிடல் காலப்பகுதியாக அமைவது 2025 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியாகும். ஏற்புடையதாகுமிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அதனையடுத்து காட்டப்பட்டுள்ள குறிப்புகள் மூலமாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

2.7 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள் /இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகளின் கணிசநிலை பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தை பணிக்கின்றது. பிரயோகிக்கப்பட்ட இந்த மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஊகங்களும் இடையறாதவகையில் மீளாய்வு செய்யப்படும். கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீட்டுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதிக்குள்ளேயும் அவை தாக்கமேற்படுத்துகின்ற எதிர்கால காலப்பகுதிகளுக்குள் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிசார் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகளின்பேரில் மிகவும் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக்கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், ஐயப்பாடுகள் மற்றும் தீர்மானகரமான தீர்மானங்கள் பற்றி கருத்திற்கொள்ளப்படவேண்டிய துறைகள் பற்றிய தகவல்கள் நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகளில் அடக்கப்பட்டுள்ளன.

2.7.1 இடையறாத வழியுரிமை

நடப்புத் தொழில்முயற்சி என்றவகையில் இடையறாமல் நிலவ சபை கொண்டுள்ள இயலுமை பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றினை செய்துள்ளதோடு எதிர்வுகூறப்பட்டுள்ள எதிர்காலத்திற்காக தொழில்முயற்சி அலுவல்களை இடையறாமல் பேணிவருவதற்கான வளங்களை சபை கொண்டுள்ளதென்பதில் திருப்தியடைகின்றது. அதனால் நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2.7.2 ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

இடைப்பட்ட காலஎல்லையின் ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும் பொருட்டு நடப்புக் காலஎல்லையின் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்துவதற்காக நிதிக்கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பணத்தொகைகளுக்காகவும் முந்திய கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட கணியரீதியான, தொடருரைசார்ந்த மற்றும் விபரங்களை உள்ளடக்கிய ஒப்பீட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும்பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பணத்தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.7.3 நிதிசார் சொத்தொன்றின் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம்

கீழே காட்டப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படின் இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் சபை நிதிசார் சொத்துக்களை இனங்காண்கின்றது.

(அ) உடன்படிக்கைசெய்த காசுப் பாய்வினை சேகரிக்கும்பொருட்டு நிதிசார் சொத்துக்களை தேக்கிவைக்கின்ற நோக்கத்தைக்கொண்ட தொழில்முயற்சி மாதிரிக்குள் நிதிசார் சொத்துக்களை தேக்கிவைத்தல்

(ஆ) நிதிசார் சொத்துக்களின் உடன்படிக்கைசெய்த விதிகள் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினங்களில் காசுப்பாய்வினை உருவாக்குவதோடு அவை வெறுமனே ஆரம்பத் தொகை மற்றும் ஆரம்பத் தொகையின் தீர்க்கப்படாத பணத்தொகை மீதான வட்டியாக அமையும்.

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் மேற்கொண்ட முதலீடுகள், நிதிசார் சொத்துக்களின் மதிப்பிறக்கஞ்செய்த கிரய வழிமுறையின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2.7.4. நிதிச் சாதனங்களின் நியாயமான பெறுமதி

அவதானிக்கக்கூடிய சந்தைவிலையொன்று இல்லாத, நிதிநிலைமை பற்றிய கூற்றில் அறிக்கைசெய்யப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புகளுக்கான நியாயமான விலையை கணித முறை மாதிரிகளை பிரயோகித்தல் உள்ளிட்ட மதிப்பீடு செய்கின்ற பலதரப்பட்ட நுணுக்கமுறைகளை பாவித்தே நியாயமான விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. பெறக்கூடியவிடத்து அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளிலிருந்தே இந்த மாதிரிகள் வழமையாக பெறப்படுகின்றது. எவ்வாறாயினும் அவ்வாறான தரவுகள் இல்லாதவிடத்து இந்த நிதிச்சாதனங்களின் நியாயமான பெறுமதியை நிலைநாட்டும்பொருட்டு தீர்மானங்கள் அவசியப்படுத்தப்படுகின்றன.

2.7.5 பொறுப்புக்கள் மற்றும் நிச்சயமற்ற தருணங்களுக்கான ஏற்பாடுகள்

பொதுவான தொழில்முயற்சி அலுவல்களில் சபைக்கு எதிராக உரித்துக்கோரல்கள் சபைக்கு கிடைத்து வருகின்றன. அதற்கான நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்கையில் ஏதேனும் உரித்துக்கோரல் வெற்றிகரமானதாக அமைவதற்கான சாத்தியநிலை பற்றி முகாமைத்துவம் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது. சட்டமுறையான உரிமைகோரல் முடிவடைகின்ற காலத்தைப் போன்றே பாய்ந்துசெல்வதற்கான வாய்ப்புள்ள பொருளாதார நன்மைகளின் அளவு நிச்சயமற்றது. கால நிர்ணயமும் கிரயமும் சம்பந்தப்பட்ட நீதித்துறை தத்துவங்களின் இயல்பான செயற்பாங்குகளின் மீதே தங்கியுள்ளது. ஒட்டுமொத்த சட்டமுறையான உரிமைகோரல்களின் 15% மூன்றாந்தரப்பு உரிமைகோரல்களுக்கான வழக்கு ஏற்பாடுகளுக்காக ஒதுக்க சபை தீர்மானித்துள்ளது. அது தொடர்ச்சியான மூன்று வருட வருமானத்தின் 15% நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் என இனங்காணப்பட்டுள்ளது. மேற்படி 15%வீதத்தில் 7%, 5%, 3% வீதங்கள் முறையே நடப்பு வருட வருமானத்திலும் முந்திய வருடத்திற்கு முந்திய வருட வருமானத்திலும் விகிதசம அடிப்படையில் ஒதுக்கப்படும்.

2.8 நிதிச்சொத்துக்கள் சேதமடைதல்

சபை ஒவ்வோர்அறிக்கையிடல் திகதியிலும் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைவதற்கான புறநிலையான சான்றுகள் உள்ளனவாவென மதிப்பீடுசெய்து வருவதோடு அத்தகைய சேதமடைதல் இடம்பெற்றிருப்பின், சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் நடப்புப் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை பெற்றுக்கொள்ளல் மூலமாக சேதத்தின் அளவு கணிக்கப்படும்.

3. சொத்துக்களும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையும்

3.1 ஆதனம், சாதனம், பொறித்தொகுதி

3.1.1 இனங்காணலும் அளவிடலும்

சொத்துக்களை சார்ந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவரல் இடம்பெறுமாயின் மற்றும் சொத்தின் கிரயத்தை நம்பிக்கைமிக்கவகையில் அளவிட இயலுமாயின் மாத்திரமே ஆதனம், சாதனம், பொறித்தொகுதியை இனங்காண்பதற்கான அடிப்படை அடையாளம் காணப்படும்.

திரண்ட தேய்மானம் அல்லது சேதநட்டம் கழிக்கப்பட்ட கிரயத்திற்கே அனைத்துவிதமான ஆதனம், சாதனம், பொறித்தொகுதி தொடக்கத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன. சொத்தொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றது. ஆதனம், சாதனம், பொறித்தொகுதியொன்றின் கணிசமான பகுதிகள் இந்த காலஇடைவெளிக்குள் மீள்நிறுவப்படுவதற்கான அவசியமேற்படுமிடத்து மீள்நிறுவிய பகுதி அதனைச்சார்ந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்தைக் கொண்டதாக அமைப்பாண்மையால் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய சகலவிதமான திருத்தவேலைகளும் பராமரிப்பும் உறப்பட்ட செலவினமாக வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

ரூ. 37,246,534.60 மொத்த வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாகவே தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் ஆதனம், சாதனம், பொறித்தொகுதியில் அடங்குகின்றன.

3.1.2 கிரயம்

சொத்தொன்றாக இனங்காணப்பட தகைமைபெறுகின்ற ஆதனம், சாதனம், பொறித்தொகுதி அல்லது உபகரண உருப்படி முதலில் கிரயத்திற்கே அளக்கப்படுகின்றது. ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளின் கிரயம் அதன் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்காக நேரடியாக செலவிடப்பட்ட கிரயத்தைக் கொண்டதாகவே கணிக்கப்படுகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிலையானதன்மைகொண்ட சொத்துக்களை கையகப்படுத்துதல் , விரிவாக்குதல் அல்லது முன்னேற்றுவதற்காக உறப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கருதப்படும்.

பழுதுபார்த்தல்களும் பராமரிப்பும் அவை உறப்பட்ட நிதிசார் காலப்பகுதிக்குள் இலாப - நட்டக் கூற்றில் செலவுச்சுமையாக காட்டப்படும். பிரதான மறுசீரமைப்புக்களின் கிரயம், நிலவுகின்ற செத்துக்களில் மிகவும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை தரநியமத்தை விஞ்சியதாக எதிர்கால பொருளாதார நன்மைகள் சபையைநோக்கிப் பாய்ந்து வருவதற்கான இயலுமை நிலவுமாயின் அத்துடன் மறுசீரமைத்த சொத்தின் அடையாளம் காணக்கூடிய ஒரு பகுதி மீள்நிறுவப்படுமாயின் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானத்தில் உள்ளடக்கப்படும்.

3.1.3 மீள்கணிப்பீடு

சொத்தொன்றாக இனங்காணப்பட்ட பின்னர் நியாயமான பெறுமதியை நம்பகத்தன்மைமிக்கதாக அளவிடக்கூடிய காணிகளும் கட்டிடங்களும், ஏதேனும் அடுத்தடுத்த திரண்ட தேய்மானம் மற்றும் அடுத்தடுத்த திரண்ட சேத நட்டத்தைக் கழித்து மீள்கணிப்பீடு செய்யப்பட்ட திகதியில் மீள்கணிப்பீட்டு பெறுமானத்தில் காட்டப்பட்டுள்ளது. மீள்கணிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அறிக்கையிடல்

திகதியில் அதன் கொண்டுசெல்லல் பெறுமதியிலிருந்து கணிசநிலையில் வேறுபடுவதில்லை என்பதை உறுதிசெய்யும்பொருட்டு மதிப்பீடுசெய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

திறந்த சந்தைப் பெறுமதியை பாவித்து மோட்டார் வாகனங்களுக்கான மீள்கணிப்பீடானது தொழில்சார் தகைமைகளைக்கொண்ட வெளிவாரி விலைமதிப்பீட்டாளர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. சொத்தின் தேறிய கொண்டுசெல்லல் பெறுமதியின் அடிப்படையிலேயே மீள்கணிப்பீட்டு மிகைநிலை இனங்காணப்படுவதோடு மீள்கணிப்பீடுசெய்த பணத்தொகைக்கு சொத்து மீண்டும் வெளிப்படுத்தப்பட்ட பின்னர் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுகின்றது. இலாப - நட்டக் கூற்றில் இனங்காணப்பட்ட மேற்படி சொத்தின் பெறுமதியில் முன்னர் இடம்பெற்ற குறைத்தலை அது தீர்க்குமாயின் அன்றி மோட்டார் வாகனமொன்று மீள்கணிப்பீடு செய்வதன் பேரில் மீள்கணிப்பீட்டு பெறுமதியிலாள ஏதேனும் அதிகரிப்பு முன்னுரிமைப் பங்கின் மீள்கணிப்பிட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படும். மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் முன்னர் இனங்காணப்பட்ட அதிகரிப்பு அதனை விஞ்சிச்செல்கின்ற சந்தர்ப்பங்களில் பெறுமதியிலான குறைவடைதல் இலாப - நட்டக் கூற்றில் இனங்காணப்படும். விற்றொழித்தலின்போது ஏதேனும் சார்ந்த மீள்கணிப்பீட்டு ஒதுக்கமொன்று மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து தேக்கிவைத்த ஈட்டல்களுக்கு சாட்டுதல் செய்யப்படுவதோடு விற்றொழித்தலின்பேரில் இலாபத்தை அல்லது நட்டத்தை தீர்மானிக்கையில் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

3.1.4 தேய்மானம்

எளிய நேர்கோட்டு வழிமுறையின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டுள்ள வருடாந்த வீதங்களுக்கு மேற்படி சொத்துக்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தில் மேற்படி அளவுகளை பதிவேடுகளிலிருந்து அகற்றும் பொருட்டு தேய்மானம் விபரமான வருமானக் கூற்றில் செலவுச் சுமையாக காட்டப்படும். சொத்தினை பாவனைக்கு எடுத்த தருணத்தில் இருந்தே தேய்மானம் ஆரம்பிக்கும்.

கட்டிடங்கள்	4%
மோட்டார் வாகனம்	20%
தளபாடம், பொருத்திகள்	10%
அலுவலக சாதனங்கள்	10%
பிரச்சார சாதனங்கள்	10%
நட்டத் தடுப்புச் சாதனம்	10%
பயிர் அறுவடைச் சாதனம்	10%
துவிச்சக்கர வண்டிகள்	20%
நிலஅளவைச் சாதனங்கள்	10%
எடைத் தராசுகள்	10%
நலன்புரிச் சாதனங்கள்	10%
தொலைபேசி	20%
கணனி	20%
மோட்டார் சைக்கிள்	20%

3.2 அருவச் சொத்துக்கள்

சொத்தொன்றின் இயற்பண்பாகக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தைநோக்கி பாய்ந்துவரக்கூடிய நிலைமை இருக்குமாயின் அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - 38 இன் அருவச் சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியுமாயின் அருவச் சொத்தாக இனங்காணப்படும். அதன்படி இந்த சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் ஏதேனும் திரண்ட சேத நட்டத்தை கழித்து நிதிநிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படும்.

சபையின் அருவச் சொத்துக்களில் பெறப்பட்ட கணனி மென்பொருட்கள் அடங்கும். கணனி மென்பொருட்கள் எளிமையான நேர்கோட்டு வழிமுறையின்பேரில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

3.3 சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் மிகவும் குறைந்த கிரயத்திலும் நிகர தேறிய பெறுமானத்திலுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமதி என்பது பொதுவான தொழில்முயற்சிப் பணிகளின்போது மதிப்பீடுசெய்யப்பட்ட நிறைவுசெய்கின்ற மற்றும் விற்பனை செலவுகளைக் கழித்தபின்னர் மதிப்பீடுசெய்யப்பட்ட விற்பனை விலையாகும். இந்த கிரயத்தில் கையிருப்புப் பண்டங்களை கையகப்படுத்துவதற்கான மற்றும் அவை தற்போது இருக்கின்ற இடத்திற்கு அல்லது நிலைமைக்கு கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்கும்.

3.4 நிதிசார் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் விடயப் பரப்பிற்குள் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமானவகையில் இலாபம் அல்லது நட்டம் மற்றும் வருமதியானவை, பருவமுதிர்வுவரை தேக்கிவைக்கப்பட்ட முதலீடுகள், விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் அல்லது எதிர்கால பாதுகாப்பு சாதனங்களாக பெயர்குறிக்கப்பட்ட பெறப்பட்டவை ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். தனது நிதிசார் சொத்தில் அடிப்படை ஏற்பிசைவின் பேரில் பணிப்பாளர்சபை அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கும்.

அனைத்து நிதிசார் சொத்துக்களும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாக சொத்துக்கள் நியாயமான பெறுமதிக்கு ஏற்புடையதாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடியாக இயற்பண்பாகிய கொடுக்கல் வாங்கல் கிரயத்திலும் ஆரம்பத்தில் இனங்காணப்படும்.

சபையினால் கடன் மற்றும் வருமதிகள் மற்றும் வைப்புகள் அவை தொடங்கப்படுகின்ற தினத்திலேயே முதலில் இனங்காணப்படும். ஏனைய அனைத்து நிதிசார் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு காரணமாக்கப்பட்ட சொத்துக்களை உள்ளிட்டதாக) தொடக்கத்தில் சாதனங்களின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திலேயே இனங்காணப்படுகின்றது.

எதேனும் சொத்தொன்றின் காசுப்பாய்வுகள் மீதுள்ள ஒப்பந்தம்சார்ந்த உரிமைகள் நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்துக்கள் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமானவகையில் சாட்டுதல் செய்யப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின்பேரில் ஒப்பந்தம்செய்யப்பட்ட காசுப்பாய்வுகள் கிடைப்பதற்குள்ள உரிமையை அது சாட்டுதல் செய்யுமிடத்து சபை நிதிசார் சொத்துக்களை இனங்காணலை நீக்கிவிடும். சாட்டுதல் செய்யப்பட்ட சொத்தொன்று சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தேக்கிவைக்கப்பட்ட எதாவது கடப்பாடு, தனிவேறான சொத்தாகவோ அல்லது பொறுப்பாகவோ இனங்காணப்படும்.

நிதிசார் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு பணத்தொகையை எதிரீடுசெய்ய சபை சட்டரீதியான உரிமையைக் கொண்டுள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலுத்தித்தீர்க்க அல்லது சொத்தினை தேறியதாக்கி சொத்துக்களை இணையாக செலுத்தித்தீர்க்க கருதப்படுமாயின் மாத்திரம் தேறிய பணத்தொகைகள் நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு, குறுங்கால முதலீடுகள் மற்றும் வர்த்தக மற்றும் பிற வருமதிகள் அடங்குகின்றன.

3.4.1 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களில் வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்பிசைவின்பேரில் பெயர்குறித்த நிதிசார் சொத்துக்கள் அடங்குகின்றன. நிதிசார் சொத்துக்கள் கிட்டிய காலப்பகுதி சார்ந்ததாக விற்பனை அல்லது மீள்கொள்வனவு செய்கின்ற கருமத்திற்காக கையகப்படுத்தப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்பட்டு வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் நியாயமான பெறுமதியில் அறிக்கை செய்யப்படும். நியாயமான பெறுமதியின் மாற்றங்கள் நிதிசார் வருமான மற்றும் விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் செலவினமாக இனங்காணப்படும்.

3.4.2 கடனும் வருமதிகளும்

கடனும் வருமதிகளும் முனைப்பான சந்தையில் விலைகளை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட உருவாக்கப்படாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப கணக்கிடலின் பின்னர் அத்தகைய நிதிசார் சொத்துக்களின் சேதங்கள் கழிக்கப்பட்டு விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பிடப்படும். மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயமானது கையகப்படுத்துகையில் ஏதேனும் கழிவு அல்லது காப்பீட்டுக் கட்டணம் மற்றும் விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலின் உள்ளடங்கிய பகுதியான கட்டணங்களையும் கிரயத்தையும் கவனத்திற்கொண்டே கணிக்கப்படுகின்றது. விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலானது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதங்கள் காரணமாக ஏற்படுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடனும் வருமதிகளும் வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்பு முற்பணம், ஏனைய வருமதிகள் அத்துடன் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றையே உள்ளடக்குகின்றது.

3.4.3 நிதிசார் சொத்தொன்றின் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம்

கீழே குறிப்பிட்ட இரண்டு நிபந்தனைகளும் நிறைவுசெய்யப்படின் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 09 இன் பிரகாரம் சபை நிதிசார் சொத்துக்களை மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்தில் இனங்காண்கிறது.

(அ) உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப் பாய்வுகளை சேகரிக்கும் பொருட்டு நிதிசார் சொத்துக்களை தேக்கிவைக்கின்ற நோக்கத்தைக்கொண்ட தொழில்முயற்சி மாதிரியொன்றுக்குள் நிதிசார் சொத்துக்களை தேக்கிவைத்தல்.

(ஆ) நிதிசார் சொத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட விதிமுறைகள் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினங்களில் காசுப் பாய்வுகள் உருவாக்கப்படுவதோடு அவை வெறுமனே ஆரம்பத் தொகை அல்லது ஆரம்பத் தொகையில் தீர்க்கப்பட்டிராத தொகையின் மீதான வட்டியாகும்.

அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புக்களிலுமான முதலீடுகள் நிதிசார் சொத்துக்களில் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத் திட்டத்தின்கீழ் வகைப்படுத்தப்படும்.

3.4.4 விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் எனப்படுவது விற்பனைக்காக உள்ளதென பெயர் குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனுமொரு நிதிசார் சொத்துக்கள் பிரிவுக்கு வகைப்படுத்தப்படாத உருவாக்கப்பட்டிராத நிதிசார் சொத்துக்களாகும். அடிப்படை ஏற்பிசைவுகளுக்குப் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேத நட்டங்களைத் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படுகின்றன. விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்களின் பேரிலான வட்டி வருமானம் விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து கணிக்கப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றின் ஏற்பிசைவுசெய்தலை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டங்களில் மீள்வகைப்படுத்தப்படும்

அடிப்படை ஏற்பிசைவின்கீழ் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபை ஏதேனும் நிதிசார் சொத்துக்களை பெயர்குறிக்கவில்லை.

3.4.5 நிதிசார் சொத்துக்கள் சேதமடைதல்

ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் நிதிசார் சொத்தொன்றோ அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமமோ சேதமடைவதற்கான வெளிப்படையான சான்றுகள் இருக்கிறதா என்பதை சபை மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதமடைதல் இடம்பெற்றிருப்பின் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசத்தை பெற்றுக்கொள்வதன் மூலமாக சேதத்தின் அளவு கணிக்கப்படும்.

4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களென வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக அமைவது கேள்வியின் பேரில் அல்லது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்படவேண்டியதாக உள்ளவையாகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக அமைவது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய மீதியாகும்.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.1 உரிமைகோரலுக்கான ஏற்பாடுகள்

செலுத்தவேண்டியுள்ள கோரப்பட்ட பணத்தொகைக்கான பொறுப்பு பயிரின் அபாயநேர்வுக் காரணி மற்றும் காப்புறுதிபெறுனரின் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு இனங்காணப்படும். 2025 நிதியாண்டுக்காக இழப்பீடு ஏற்பாடுகள் கீழ்க்காணும் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காப்புறுதிசெய்த விடயம்	சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடுகள் (ரூ.)
கெத்தட்ட அருண	83,848,178
கால்நடை வளம்	5,900,000
சுவசெத காப்புறுதி	50,000
தனிப்பட்ட விபத்து	100,000
மேலதிக பயிர்கள்	4,520,400
அசையும் ஆதனங்கள்	52,135,059
	146,553,637

4.2 மூன்றாந் தரப்பு காப்புறுதி இழப்பீட்டுக்கான ஏற்பாடுகள்

ஏற்பாடுகளை ஒதுக்குகையில் ஏதேனும் உரிமைகோரல் வெற்றியடைவதற்கான சாத்தியப்பாடு பற்றி முகாமைத்துவம் தீர்மானம் எடுத்துள்ளது. சட்டமுறையான உரிமைகோரல் நிறைவடைகின்ற காலத்தைப் போன்றே பாய்ந்து செல்ல வாய்ப்புள்ள பொருளாதார நன்மைகளின் அளவு நிச்சயமற்றது. கால நிர்ணயமும் கிரயமும் இறுதியில் தங்கியிருப்பது சம்பந்தப்பட்ட சட்டமுறையான நீதித்துறை நியாயாதிக்கத்தின் இயல்பான செயற்பாங்கின் பேரிலாகும். மொத்த சட்டமுறையான உரிமைகோரல்களின் 15% ஐ மூன்றாந்தரப்பு சட்டமுறையான உரிமைகோரல்களுக்கான வழக்கு ஏற்பாடுகளுக்காக ஒதுக்கீடுசெய்ய சபை தீர்மானித்துள்ளது. தொடர்ச்சியான மூன்று வருட வருமானத்தின் 15% நிறையேற்றப்பட்ட சராசரி பெறுமானத்திற்கிணங்கவே மூன்றாந்தரப்பு ஏற்பாடு இனங்காணப்படுகின்றது. மேற்படி 15% வீதத்தில் முறையே 7% , 5% மற்றும் 3% நடப்பு வருட வருமானம் முந்திய வருடத்தின் வருமானத்துடன் முந்திய வருடத்திற்கு முந்திய வருடத்தின் வருமானத்திற்காக விகிதார அடிப்படையில் ஒதுக்கப்படும்.

4.3 அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள்

அறவிட முடியாக் கடன் ஏற்பாடுகளாக மொத்த பணியாட்டொகுதி கடனின் 5% ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4.4 வருமான வரியும் ஏற்பாடுகளும்

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான வரிச் செலவு விரிவான வருமானக் கூற்றின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025/2025 மதிப்பீட்டு வருடத்திற்காக சபையினால் ரூ. 121,339,946.45 மொத்த வருமானவரிப் பொறுப்பினைத் தங்கியுள்ளது. 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முதலாவது இரண்டு காலாண்டுகள் தொடர்பாக ரூ. 59,742,668.69 பணத்தொகை செலுத்தப்பட்டுள்ளதோடு மிகுதி காலாண்டுகள் இரண்டிற்காகவும் நிதிக்கூற்றுகளில் ரூ. 51,635,435.80 ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தொழில்முயற்சி வருமானம்	
முதலீட்டு வருமானம்	1,090,126,559.12
மேலாதிக்க உரிமை மூலமான வருமானத் திருப்பம்	114,400,000.00
முதலீட்டு வருமானத்துடன் தொடர்புடைய செலவினங்கள்	109,012,655.91
மதிப்பீடு செய்யத்தக்க மொத்த வருமானம்	**866,713,903.21**
வரிப் பொறுப்பினைக் கணிப்பீடு செய்தல்	
வரி வீதம்	14%
2025/2026 மதிப்பீட்டு வருடத்திற்காக செலுத்தவேண்டிய மொத்த வரி	**121,339,946,45**

4.5 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இற்கு அமைவாக "இளைப்பாற்று நன்மைக் கிரயம்" அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காகவும் சேவையின் முதலாவது வருடத்தை நிறைவுசெய்ததில் இருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு ஐந்து வருட இடையறாத சேவைக்காலத்தை பூர்த்திசெய்தால் மாத்திரமே தோன்றுகின்றது. அந்த பொறுப்பிற்காக வெளியிலிருந்து நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

4.6 மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்

எதிர்பாராத பொறுப்புகளாக பொருளாதார நன்மைகள் சாட்டுதல் செய்யப்படுவதற்கான வாய்ப்புகளற்ற அல்லது நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியாத சந்தர்ப்பங்களில் நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற நடப்புக் கடப்பாடுகள் ஆகும்.

சபையின் மூலதனக் கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.7 ஓய்வூதிய பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 4 இன் 15 வது பந்தியில் கூறப்பட்டுள்ளவகையில் காப்புறுதி உடன்படிக்கைகளில், காப்புறுதிக் கம்பெனி ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் தனது காப்புறுதி உடன்படிக்கையின்கீழ் எதிர்கால காசுப் பாய்வுகளின் நிகழ்கால மதிப்பீடுகளை பாவித்து தனது அடையாளம்கண்ட காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமானவையா என்பதை மதிப்பீடுசெய்ய வேண்டும். எதிர்கால காசுப் பாய்வுகளை கவனத்திற் கொண்டவிடத்து தனது காப்புறுதிப் பொறுப்புக்களின்

கொண்டுசெல்லல் பெறுமதி (சார்ந்த பிற்போடப்பட்ட கையகப்படுத்தலுக்கான கிரயம் மற்றும் சார்ந்த அருவச் சொத்துக்களை கழித்து) போதுமானதல்லவென அந்த மதிப்பீட்டில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பின் ஒட்டுமொத்த பற்றாக்குறையை இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காண வேண்டும்.

சந்தை வட்டிவீதங்களிலான வித்தியாசங்களை கவனத்திற்கொண்டு ஓய்வூதிய பொறுப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு இலாப மற்றும் நட்டக் கூற்றில் பிற விரிவான வருமானத்தினதும் நிதிசார் கூற்றுகளிலும் பிற விரிவான வருமானத்தின் பற்றாக்குறை இனங்காணப்பட்டுள்ளது.

அதனால் பிற விரிவான வருமானங்களின்கீழ் கமக்காரர்களுக்கும் கடற்றொழிலாளர்களுக்குமான ஓய்வூதியப் பொறுப்பின் மேற்படி அதிகரிப்பு மேற்படி தரத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

5. விரிவான வருமானக் கூற்று

5.1 வருமானம்

1. சபையின் வருமானம் காப்புறுதித் தவணைப்பணம், திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் மற்றும் நிலையான வைப்புகள், ஊழியர்கடன் மற்றும் பிற நானாவித வருமானத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

2. அனைத்து வருமானமும் அட்டுறு அடிப்படையிலேயே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

3. காப்புறுதி தவணைப்பணம் கமக்காரர்களுக்கான மானியம் என்றவகையிலேயே அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ளது.

4. மூலதனச் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடை படிப்படியான அடிப்படையில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

5.2 வருமானத்தை ஏற்பிசைவுசெய்தல்

1) காப்புறுதி தவணைப்பண வருமானம் காப்புறுதி செய்யப்பட்ட காலப்பகுதிக்காக ஏற்பிசைவு செய்யப்படும்.

2) மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையிலானதாக அமைவதோடு சார்ந்த செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

3) வட்டி வருமானம் கால அடிப்படையில் அட்டுறுநிலையடையும்.

5.3 வருமதியான தவணைப்பணம்

வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் மற்றும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2018 நிதியாண்டில் ஆரம்பித்து பொதுதிறைசேரியால் முறைப்படி வழங்கப்படுகின்ற நிதியங்களின் ஏற்பாடுகள் சகிதம் சபை தனது கணக்கீட்டுத் தொழிற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும் 2018 மற்றும் 2019 நிதியாண்டுகளின் பின்னர் சபையினால் கணக்குப் பதியப்பட்டுள்ளவாறு பயிர்செய்யப்பட்ட ஏக்கர்களுடன் தொடர்புடையதாக கணிப்பிடப்பட்ட தவணைப்பணத்தின் அடிப்படையில் நிதியங்களை ஒதுக்கீடுசெய்தலை வருடாந்த வரவுசெலவு ஏற்பாடுகளில் சேர்த்தல் நிறுத்தப்பட்டது.

5.4 அரசாங்கக் கொடைகளுக்கான கணக்கீடு

சபையினால் உறப்பட்ட செலவுகளுக்காக அதற்காக செலுத்தப்படுகின்ற கொடைகள் மேற்படி செலவுகள் இனங்காணப்பட்ட காலப்பகுதிக்குள் வருமானமென்றவகையில்

விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகளைச்சார்ந்த சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் படிப்படியான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

இழப்பீடு செலுத்துதலை உள்ளடக்கும் பொருட்டு கட்டாயக் காப்புறுதித் திட்டத்திற்காக அரசாங்கம் வருடாந்த கொடையினை வழங்குகின்றது. இந்த செயற்றிட்டத்தின்கீழ் வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் மூலமாக ஏற்படுகின்ற சேதங்களுக்காக கமக்காரர்களுக்கு ஏக்கரொன்றுக்காக ரூ. 40,000 உரித்தாகின்றது. இந்த காப்புறுதிக் நெற்செய்கைக்காக 5 ஏக்கர்கள் உச்சஎல்லை வரையிலும் சோயா அவரை, மிளகாய், வெங்காயம், சோளம் மற்றும் உருளைக்கிழங்கு உள்ளிட்ட ஏனைய பயிர்களுக்காக 2.5 ஏக்கர்கள் வரை விரிவாக்கப்படுகின்றது.

மேலும் கமக்காரர்களுக்காக அவர்களின் ஓய்வுகால வாழ்க்கையில் நிதிசார் பாதுகாப்பினை உறுதிசெய்வதை நோக்கமாகக்கொண்டு கமக்காரர் ஓய்வூதியத்திற்காக அரசாங்கம் ஆரம்பக் கொடையை வழங்குகின்றது. இந்த கொடை ஓய்வூதியத்திற்காக தகைமைபெறுகின்ற கமக்காரர்களுக்கு அவர்களின் வயது 60 நிறைவடைகையில் நிலையான மாதாந்த வருமானமொன்றை வழங்குகின்றது.

5.5 செலவுகள்

உறப்பட்ட செலவினங்கள் மற்றும் குறிப்பிட்ட செலவு உருப்படி ஈட்டல்களுக்கிடையிலான நேரடித்தொடர்பின் அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படுகின்றன. சபையைப் பேணிவருவதற்காகவும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறன்கொண்ட நிலைமையில் பேணிவருவதற்காகவும் உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டுக்கான மிகைநிலையை தயாரிக்கையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

401/4 இலக்கமும் 2008.10.15 திகதியும் கொண்ட பணிப்பாளர்சபை பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவினங்கள் பின்வருமாறு அமையும்.

செலவினம்	**வீதம்**	மின்சாரம்	55%
சம்பளம், ஊ.சே. நி. மற்றும் ஊ.ந.நி.	50%	பிரயாணம், மேலதிக நேரம்	50%
மருத்துவச் செலவுகள்	50%	நீர்க் கட்டணம்	55%
மதியுரைக் கட்டணம்	60%	நாட் சம்பளம்	50%
நலனோம்பல்	50%	பாதுகாப்பு அலுவல்கள்	75%
சீருடைகள்	50%	அலுவலகஉபகரணங்கள் பராமரிப்பு	75%
உபசரிப்பு	60%	வாகனப் பராமரிப்பு	57%
அச்சிடல்	60%	கணனிச் செலவுகள்	75%
சட்டக் கட்டணங்கள்	40%	எரிபொருள் செலவு	68%
பணிப்பாளர்சபை உறுப்பினர் படிகள்	60%	காகிதாதிகள்	50%
வாடகை	55%	கட்டிடப் பராமரிப்பு	55%
தொலைபேசி	55%	பிரச்சாரமும் பயிற்சியும்	80%
தபால் கட்டணம்	40%		

5.6 மிகைநிலை

அனைத்து பொறுப்புக்கள், அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன்கள் மற்றும் ஆதனம், சாதனம், பொறித்தொகுதி தேய்மானத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் மிகைநிலை கணிப்பிடப்படும்.

5.7 ஒதுக்க நிதியம்

அவசரவேளை ஒதுக்க நிதியமொன்று 2002 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோடு தொழிற்பாட்டு மிகைநிலையில் 5% வழங்குவதே கொள்கையாக அமைகின்றது.

5.7 முற்தவணைகள்

உரிய காலத்திற்கு முன்னராக கிடைத்திருப்பின் கால்நடை வளங்கள் மற்றும் கட்டாயக் காப்புறுதிக்கான காப்புறுதிக் கட்டணப் பற்றுச்சீட்டுகள் முற்தவணைகளாக கருதப்படும்.

6. காசுப் பாய்வுக்கூற்று

இலங்கை கணக்கீட்டுத் தரநியமம் 07 பிரகாரம் திட்டத்தின் காசுப்பாய்வுக் கூற்று "நேரில் முறைமையை" பயன்படுத்தியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்கும் நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் நேர்ந்த சாதகமான மற்றும் பாதகமான சம்பவங்களே அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான சம்பவங்களாக கருதப்படுகின்றன. நிதிநிலைமை பற்றிய அனைத்துவிதமான பொருண்மையான ஐந்தொகைக்கு பின்னரான சம்பவங்களையும் பரிசீலனைசெய்து உசிதமான சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி நிதிக்கூற்றுகளின் ஏற்புடைய குறிப்புகளில் ஒன்றில் சீராக்கப்பட்டுள்ளன அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

8. சார்ந்த தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்

கமக்காரர் ஓய்வூதியத் திட்டமும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டமும் கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படுகின்றன. இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன. கமத்தொழில் காப்புறுதித் திட்டம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு ரூ. 295,230,441.79 ஐ கடனாகப் பெற்றுள்ளது.

9. முந்திய வருடத்திற்கான சீராக்கங்கள்

9.1 சுவசெத காப்புறுதி மற்றும் தனியாள் விபத்து சேதஇழப்பீடு செலுத்துதல்களுக்கான ஏற்பாடுகள்

முந்திய வருடங்களிலிருந்து சுவசெத மற்றும் தனியாள் விபத்துகளுக்காக சபை ரூ. 1,500,000 ஐ ஒதுக்கியுள்ளதோடு 2025 நிதிக்கூற்றுகளில் முறையே ரூ. 499,400 மற்றும் ரூ. 799,400 மிகை ஏற்பாடு சீராக்கப்பட்டுள்ளது.

9.2 சென்மதியான ஊக்குவிப்புப் படிகளுக்கான ஏற்பாடு

முந்திய வருடங்களுடன் தொடர்புடைய கீழே காட்டப்படுகின்ற காப்புறுதி செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய ஊக்குவிப்புப் படிகளுக்கான ஏற்பாடு சபையினால் இனங்காணப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட மேலதிக ஏற்பாடு 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளில் முறைப்படி சீராக்கப்பட்டுள்ளது.

விபரம்	சீராக்கிய மிகையேற்பாடு
சென்மதியான பயிர்க்காப்புறுதி ஊக்குவிப்புப்படி	6,838,342.20
சென்மதியான கால்நடை வளங்கள் தொழிற்பாட்டுச் செலவுகள்	98,400.00
சென்மதியான தனியாள் விபத்து மற்றும் சுவசெத காப்புறுதி ஊக்குவிப்புப் படி	457,559.55
சென்மதியான கால்நடை வளங்கள் ஊக்குவிப்புப் படி	457,837.45
கூட்டுத்தொகை	**7,852,139.20**

10. கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டங்களினதும் ஏனைய சேவைகளினதும் பொறுப்புக்கள் மதிப்பீட்டுக்கான ஆயுட்கணிப்பு மதிப்பீடு

மதியுரை பெறுகை வழிகாட்டிகளின் கீழ் வழங்கப்பட்ட மதியுரைகளை தெரிவுசெய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் பற்றிய வழிகாட்டிகளின் பிரகாரம் சபை ஆயுட்கணிப்பாளரொருவரை ஈடுபடுத்தியுள்ளது. மிகவும் அண்மைக்கால ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை நிறைவுசெய்யும்வரை, 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு பொறுப்புக்களை சீராக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்கால ஆயுட்கணிப்பு மதிப்பீடு கீழே காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களையும் செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

1. பழைய கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்
2. புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்
3. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்
4. புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கான தவணைப்பணத்தை கணிப்பிடுதல்

2025திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளில் புத்தம்புதிய ஆயுட்கணிப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பெறுபேறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்போது மதியுரை நிறுவனத்தினால் மேலே குறிப்பிட்ட ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் நிலவுகின்ற பொறுப்பினை சரியாக மதிப்பீடுசெய்தல், சான்றுப்படுத்துதல், நிதியங்களின் மீதிகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் இறப்பு - ஏலாமை பொறுப்புகளைக் கணித்தல் என்பவை மேற்கொள்ளப்பட்டதோடு பொருத்தமான கழிவு வீதங்கள் மற்றும் வட்டி வீதங்கள் விதப்புரை செய்யப்பட்டன. 9% வட்டியின் அடிப்படையில் தேறிய தவணை ஆயுட்கணிப்புரீதியாக கணிக்கப்படுகின்றது.

10. எதிர்பாராத சந்தர்ப்பங்கள்

நூற்றிஇருபத்தொரு வழக்குகள் விசாரணை செய்யப்பட்டுள்ளதோடு வழக்குளின் நடப்பு நிலைமை கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களுடன் 2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் அபாயநேர்வுக் குழு மேற்கொண்ட தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டு ஆறு வழக்குகள் சமரசம் செய்யப்பட்டதோடு செலுத்தப்பட்ட பணத்தொகை ரூ. 1,500,000 ஆகும். அபாயநேர்வுக் குழுவின் தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டு 2025 ஆம் ஆண்டில் இரண்டு வழக்குகள் சமசரம் செய்யப்பட்டதோடு (மோட்டார் வாகன விபத்துகள் , மூன்றாந்தரப்பு காப்புறுதிக்காக மாற்று வழிமுறை ஊடாக இழப்பீடு செலுத்துதல்) ரூ. 1,000,000 செலுத்தப்பட்டது.

22 வழக்குகள் விசாரிக்கப்பட்டுளளதோடு வழக்குகளின் நடப்பு நிலைமை கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மனுதாரர்களுடன் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் அபாயநேர்வுக் குழு மேற்கொண்ட தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு 18 வழக்குகள் இணக்கத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு செலுத்திய பணத்தொகை ரூ. 2,975,000 ஆகும்.

இறுதி அறிக்கை 2024 - க.க.கா.சபையினாலும் அதற்கெதிராகவும் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள்

நீதிமன்றம்	வழக்கு எண்	தரப்பினர்	வழக்கிற்கான காரணம்	நடப்பு நிலைமை
ஊழியர் நட்டஈட்டு நீதிமன்றம் அநுராதபுரம்	01 WC/NF/1149/2019 (ANU)	எம்.எம். செனெவிரத்ன பண்டா எதிர் சபை	அலுவலக நேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்து தாடபாக காப்புறுதி பணத்தைக்கோரி சபைக்க எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.
அநுராதபுரம் மேல்நீதிமன்றம்	02 HC/233 & HC/234	சந்தகோமி மஹேஷிகா எதிர் பொலீஸ்	1. கமக்காரர்களுக்கு கிடைக்கவேண்டிய பணத்தை மேசடி செய்தமை 2. போலியாவணம் புனைந்தமை	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது
அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம்	01 B/2171/2002	பொலீஸ் எதிர் கே. ஏ. ஹீன்பண்டார	சபைக்கு கிடைக்கவேண்டிய பணத்தை மோசடி செய்தமை	2005 அம் ஆண்டிலிருந்து கீழடக்கி வைக்கப்பட்டுள்ளது
கொழும்பு மேல்நீதிமன்றம்	01 3/8/2 මෘ.අ / 2006	பொலீஸ் எதிர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை	மாவிலாறு பயிர்ச்செய்கைக்கான இழப்பீடு	மெலதிக ஆலோசனை கோரி வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
மாவட்ட நீதிமன்றம் (நாடு பூராவிலும்)	வழக்குகளின் எண்ணிக்கை 121	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு எதிராக மூன்றாந் தரப்பு நட்டஈடு கோருவோர்	மூன்றாந்த தரப்பு காப்புறுதியின்கீழ் சேதக் கோரிக்கை	வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கணக்குகளுக்கான குறிப்புகள்

குறிப்பு 01 - நடைமுறையல்லாச் சொத்துக்கள்

ஆதனம், சாதனம், பொறித்தொகுதி

குழுமம் **ரூ.**

சொத்துக்கள்	2025.01.01 இல் கிரயம் /மதிப்பீடு	கையுதிர்த்தவை	சேர்த்த கிரயம்	2025.12.31 இல் சொத்துக்களின் மீள் கணிப்பீடு	மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டவை	2025.12.31 இல் கிரயம் /மதிப்பீடு	2025.01.01 இல் திரண்ட தேய்மானம்	கையுதிர்த்தவை	மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றிய திரண்ட தேய்மானம்	ஆண்டுக்கான தேய்மானம்	2025.12.31 இல் திரண்ட தேய்மானம்	2025.12.31 இல் கழித்தெடுதிய பெறுமதி
நிலம்	-	-	106,343,000	-	-	106,343,000	-	-	-	-	-	106,343,000
தளபாடம், பொருத்திகள்	27,396,547	(658,741)	1,686,267	-	-	28,424,074	14,100,496	(648,915)	-	2,012,445	15,464,026	12,960,048
அலுவலக சாதனம்	30,527,670	(737,664)	6,865,740	-	-	36,655,746	13,197,451	(731,497)	-	2,692,861	15,158,815	21,496,931
மோட்டார் வாகனம்	164,082,300	-	8,900,000	(172,982,300)	178,335,000	178,335,000	8,124,750	-	(30,415,607)	34,179,857	11,889,000	166,446,000
நலன்புரிச் சாதனம்	2,317,857	(87,075)	107,399	-	-	2,338,181	764,530	(74,578)	-	190,163	880,115	1,458,066
கணினிச் சாதனம்	130,437,129	(4,309,371)	131,814	-	-	126,259,572	62,315,561	(4,306,192)	-	18,157,411	76,166,779	50,092,792
கணினி மென்பொருள்	1,475,000	-	-	-	-	1,475,000	1,475,000	-	-	-	1,475,000	-
தொலைபேசி	1,510,808	-	-	-	-	1,510,808	1,510,808	-	-	-	1,510,808	-
மோட்டார் சைக்கிள்	56,350	89,950	-	-	-	146,300	56,350	89,950	-	-	146,300	-
கட்டிடங்கள்	10,828,779	-	41,725,299	(8,629,015)	12,766,000	56,691,063	6,279,073	-	(1,395,405)	1,941,794	6,825,462	49,865,600
வளிச் சீராக்கிகள்	1,051,273	-	-	-	-	1,051,273	993,925	-	-	43,011	1,036,936	14,337
பிரச்சார சாதனங்கள்	3,105,817	(105,199)	-	-	-	3,000,618	2,508,962	(105,199)	-	92,120	2,495,883	504,735
துவிச்சக்கர வண்டிகள்	135,414	(3,950)	-	-	-	131,464	135,414	(3,950)	-	-	131,464	-
அறுவடைச் சாதனங்கள்	60,371	(250)	-	-	-	60,121	60,371	(250)	-	-	60,121	-
நட்டத் தடுப்புச் சாதனம்	41,280	-	-	-	-	41,280	41,280	-	-	-	41,280	-
நிலஅளவைச் சாதனம்	4,099	(1,800)	-	-	-	2,299	4,099	(1,800)	-	-	2,299	-
எடைத் தராசுகள்	1,036	(700)	-	-	-	336	1,036	(700)	-	-	336	-
நொறாட் உபகரணங்கள்	344,424	-	-	-	-	344,424	344,424	-	-	-	344,424	-
நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் - கட	34,494,099	-	(27,840,771)	-	-	6,653,328	-	-	-	-	-	6,653,328
	407,870,252	**(5,814,800.08)**	**137,918,747.71**	**(181,611,315.24)**	**191,100,999.99**	**549,463,885**	**111,913,528**	**(5,783,131)**	**(31,811,011)**	**59,309,661**	**133,629,047**	**415,834,837**

குறிப்பு :- 2025 திசெம்பர் 31 இல் ரூ. 63,166,209.37 பெறுமதிகொண்ட இன்னமும் பாவிக்கப்பட்டு வருகின்ற வரலாற்றுக் கிரயம்கொண்ட முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட சொத்துக்களை ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகள் என்பது உள்ளடக்குகின்றது.

முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட சொத்துக்களை ஆதனம்,
அவதானிக்கக்கூடிய சந்தைவிலையொன்று இல்லாத, நிதிநிலைமை பற்றிய கூற்றில் அறிக்கைசெய்யப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புகளுக்கான நியாயமான விலையை கணித முறை மாதிரிகளை பிரயோகித்தல் உள்ளிட்ட மதிப்பீடு செய்கின்ற பலதரப்பட்ட நுணுக்கமுறைகளை பாவித்தே நியாயமான விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. பெறக்கூடியவிடத்து அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளிலிருந்தே இந்த மாதிரிகள் வழமையாக பெறப்படுகின்றது. எவ்வாறாயினும் அவ்வாறான தரவுகள் இல்லாதவிடத்து இந்த நிதிச்சாதனங்களின் நியாயமான பெறுமதியை நிலைநாட்டும்பொருட்டு தீர்மானங்கள் அவசியப்படுத்தப்படுகின்றன.

2.8 நிதிச்சொத்துக்கள் சேதமடைதல்

ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் ஒவ்வோர்அறிக்கையிடல் திகதியிலும் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் பழுதடைவதற்கான புறநிலையான சான்றுகள் உள்ளவாவென சபை மதிப்பீடுசெய்து வருவதோடு அத்தகைய பழுதடைதல் இடம்பெற்றிருப்பின், சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் நடப்புப் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை பெற்றுக்கொள்ளல் மூலமாக சேதத்தின் அளவு கணிக்கப்படும்.

3. சொத்துக்களும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையும்

3.1 ஆதனம், சாதனம், பொறித்தொகுதி

3.1.1 இனங்காணலும் அளவிடலும்

சொத்துக்களை சார்ந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவரல் இடம்பெறுமாயின் மற்றும் சொத்தின் கிரயத்தை நம்பிக்கைமிக்கவகையில் அளவிட இயலுமாயின் மாத்திரமே ஆதனம், சாதனம், பொறித்தொகுதியை இனங்காண்பதற்கான அடிப்படை அடையாளம் காணப்படும்.

திரண்ட தேய்மானம் அல்லது சேதநட்டம் கழிக்கப்பட்ட கிரயத்திற்கே அனைத்துவிதமான ஆதனம், சாதனம், பொறித்தொகுதி தொடக்கத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன. சொத்தொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றது. ஆதனம், சாதனம், பொறித்தொகுதியொன்றின் கணிசமான பகுதிகள் இந்த காலஇடைவெளிக்குள் மீள்நிறுவப்படுவதற்கான அவசியமேற்படுமிடத்து மீள்நிறுவிய பகுதி அதனைச்சார்ந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்தைக் கொண்டதாக அமைப்பாண்மையால் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய சகலவிதமான திருத்தவேலைகளும் பராமரிப்பும் உறப்பட்ட செலவினமாக வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

ரூ. 25,191,6749.35 மொத்த வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாகவே தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் ஆதனம், சாதனம், பொறித்தொகுதியில் அடங்குகின்றன.

3.1.2 கிரயம்

சொத்தொன்றாக இனங்காணப்பட தகைமைபெறுகின்ற ஆதனம், சாதனம், பொறித்தொகுதி அல்லது உபகரண உருப்படி முதலில் கிரயத்திற்கே அளக்கப்படுகின்றது. ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளின் கிரயம் அதன் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்காக நேரடியாக செலவிடப்பட்ட கிரயத்தைக் கொண்டதாகவே கணிக்கப்படுகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிலையானதன்மைகொண்ட சொத்துக்களை கையகப்படுத்துதல் , விரிவாக்குதல் அல்லது முன்னேற்றுவதற்காக உறப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கருதப்படும்.

பழுதுபார்த்தல்களும் பராமரிப்பும் அவை உறப்பட்ட நிதிசார் காலப்பகுதிக்குள் இலாப - நட்டக் கூற்றில் செலவுச்சுமையாக காட்டப்படும். பிரதான மறுசீரமைப்புக்களின் கிரயம், நிலவுகின்ற செத்துக்களில் மிகவும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை தரநியமத்தை விஞ்சியதாக எதிர்கால பொருளாதார நன்மைகள் சபையைநோக்கிப் பாய்ந்து வருவதற்கான

இயலுமை நிலவுமாயின் அத்துடன் மறுசீரமைத்த சொத்தின் அடையாளம்காணக்கூடிய ஒரு பகுதி மீள்நிறுவப்படுமாயின் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானத்தில் உள்ளடக்கப்படும்.

3.1.3 மீள்கணிப்பீடு

சொத்தொன்றாக இனங்காணப்பட்ட பின்னர் நியாயமான பெறுமதியை நம்பகத்தன்மைமிக்கதாக அளவிடக்கூடிய காணிகளும் கட்டிடங்களும், ஏதேனும் அடுத்தடுத்த திரண்ட தேய்மானம் மற்றும் அடுத்தடுத்த திரண்ட சேத நட்டத்தைக் கழித்து மீள்கணிப்பீடு செய்யப்பட்ட திகதியில் மீள்கணிப்பீட்டு பெறுமானத்தில் காட்டப்பட்டுள்ளது. மீள்கணிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அறிக்கையிடல் திகதியில் அதன் கொண்டுசெல்லல் பெறுமதியிலிருந்து கணிசநிலையில் வேறுபடுவதில்லை என்பதை உறுதிசெய்யும்பொருட்டு மதிப்பீடுசெய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

திறந்த சந்தைப் பெறுமதியை பாவித்து மோட்டார் வாகனங்களுக்கான மீள்கணிப்பீடானது தொழில்சார் தகைமைகளைக்கொண்ட வெளிவாரி விலைமதிப்பீட்டாளர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. சொத்தின் தேறிய கொண்டுசெல்லல் பெறுமதியின் அடிப்படையிலேயே மீள்கணிப்பீட்டு மிகைநிலை இனங்காணப்படுவதோடு மீள்கணிப்பீடுசெய்த பணத்தொகைக்கு சொத்து மீண்டும் வெளிப்படுத்தப்பட்ட பின்னர் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுகின்றது. இலாப - நட்டக் கூற்றில் இனங்காணப்பட்ட மேற்படி சொத்தின் பெறுமதியில் முன்னர் இடம்பெற்ற குறைத்தலை அது தீர்க்குமாயின் அன்றி மோட்டார் வாகனமொன்று மீள்கணிப்பீடு செய்வதன் பேரில் மீள்கணிப்பீட்டு பெறுமதியிலாள ஏதேனும் அதிகரிப்பு முன்னுரிமைப் பங்கின் மீள்கணிப்பிட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படும். மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் முன்னர் இனங்காணப்பட்ட அதிகரிப்பு அதனை விஞ்சிச்செல்கின்ற சந்தர்ப்பங்களில் பெறுமதியிலான குறைவடைதல் இலாப - நட்டக் கூற்றில் இனங்காணப்படும். விற்றொழித்தலின்போது ஏதேனும் சார்ந்த மீள்கணிப்பீட்டு ஒதுக்கமொன்று மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து தேக்கிவைத்த ஈட்டல்களுக்கு சாட்டுதல் செய்யப்படுவதோடு விற்றொழித்தலின்பேரில் இலாபத்தை அல்லது நட்டத்தை தீர்மானிக்கையில் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

3.1.4 தேய்மானம்

எளிய நேர்கோட்டுத் திட்டத்தின் அடிப்படையில்கீழே காட்டப்பட்டுள்ள வருடாந்த வீதங்களில் அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்திற்குள் மேற்படி அளவுளை பதிவேடுகளிலிருந்து நீக்கிவிடுவதற்காக தேய்மானங்கள் விபரமான வருமானக் கூற்றில்செலவுச் சுமையாக காட்டப்படுகின்றது. சொத்தினை பாவனைக்கு எடுத்த தருணத்திலிருந்தே தேய்மானம் தொடங்குகின்றது.

கட்டிடங்கள்	4%	அளவைச் சாதனங்கள்	10%
மோட்டார் வாகனம்	20%	எடைத் தராசுகள்	10%
தளபாடம், பொருத்திகள்	10%	நலன்புரிச் சாதனங்கள்	10%
பிரச்சார சாதனங்கள்	10%	தொலைபேசி	20%
நட்டத் தடுப்புச் சாதனம்	10%	கணனி	20%
பயிர் அறுவடைச் சாதனம்	10%	மோட்டார் சைக்கிள்	20%
துவிச்சக்கர வண்டிகள்	20%		

3.2 அருவச் சொத்துக்கள்

சொத்தொன்றின் இயற்பண்பாகக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தைநோக்கி பாய்ந்துவரக்கூடிய நிலைமை இருக்குமாயின் அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - 38 இன் அருவச் சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியுமாயின் அருவச் சொத்தாக இனங்காணப்படும். அதன்படி இந்த சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் ஏதேனும் திரண்ட சேத நட்டத்தை கழித்து நிதிநிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படும்.

சபையின் அருவச் சொத்துக்களில் பெறப்பட்ட கணனி மென்பொருட்கள் அடங்கும். கணனி மென்பொருட்கள் எளிமையான நேர்கோட்டு வழிமுறையின்பேரில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

3.3 சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் மிகவும் குறைந்த கிரயத்திலும் நிகர தேறிய பெறுமானத்திலுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமதி என்பது பொதுவான தொழில்முயற்சிப் பணிகளின்போது மதிப்பீடுசெய்யப்பட்ட நிறைவுசெய்கின்ற மற்றும் விற்பனை செலவுகளைக் கழித்தபின்னர் மதிப்பீடுசெய்யப்பட்ட விற்பனை விலையாகும். இந்த கிரயத்தில் கையிருப்புப் பண்டங்களை கையகப்படுத்துவதற்கான மற்றும் அவை தற்போது இருக்கின்ற இடத்திற்கு அல்லது நிலைமைக்கு கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்கும்.

3.4 நிதிசார் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் விடயப் பரப்பிற்குள் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமானவகையில் இலாபம் அல்லது நட்டம் மற்றும் வருமதியானவை, பருவமுதிர்வுவரை தேக்கிவைக்கப்பட்ட முதலீடுகள், விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் அல்லது எதிர்கால பாதுகாப்பு சாதனங்களாக பெயர்குறிக்கப்பட்ட பெறப்பட்டவை ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். தனது நிதிசார் சொத்தில் அடிப்படை ஏற்பிசைவின் பேரில் பணிப்பாளர்சபை அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கும்.

அனைத்து நிதிசார் சொத்துக்களும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாக சொத்துக்கள் நியாயமான பெறுமதிக்கு ஏற்புடையதாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடியாக இயற்பண்பாகிய கொடுக்கல் வாங்கல் கிரயத்திலும் ஆரம்பத்தில் இனங்காணப்படும்.

சபையினால் கடன் மற்றும் வருமதிகள் மற்றும் வைப்புகள் அவை தொடங்கப்படுகின்ற தினத்திலேயே முதலில் இனங்காணப்படும். ஏனைய அனைத்து நிதிசார் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு காரணமாக்கப்பட்ட சொத்துக்களை உள்ளிட்டதாக) தொடக்கத்தில் சாதனங்களின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திலேயே இனங்காணப்படுகின்றது.

எதேனும் சொத்தொன்றின் காசுப்பாய்வுகள் மீதுள்ள ஒப்பந்தம்சார்ந்த உரிமைகள் நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்துக்கள் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமானவகையில் சாட்டுதல் செய்யப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின்பேரில் ஒப்பந்தம்செய்யப்பட்ட காசுப்பாய்வுகள் கிடைப்பதற்குள்ள உரிமையை அது சாட்டுதல் செய்யுமிடத்து சபை நிதிசார் சொத்துக்களை இனங்காணலை நீக்கிவிடும். சாட்டுதல் செய்யப்பட்ட சொத்தொன்று சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தேக்கிவைக்கப்பட்ட எதாவது கடப்பாடு, தனிவேறான சொத்தாகவோ அல்லது பொறுப்பாகவோ இனங்காணப்படும்.

நிதிசார் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு பணத்தொகையை எதிரீடுசெய்ய சபை சட்டரீதியான உரிமையைக் கொண்டுள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலுத்தித்தீர்க்க அல்லது சொத்தினை தேறியதாக்கி சொத்துக்களை இணையாக செலுத்தித்தீர்க்க கருதப்படுமாயின் மாத்திரம் தேறிய பணத்தொகைகள் நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு, குறுங்கால முதலீடுகள் மற்றும் வர்த்தக மற்றும் பிற வருமதிகள் அடங்குகின்றன.

3.4.1 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களில் வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்பிசைவின்பேரில் பெயர்குறித்த நிதிசார் சொத்துக்கள் அடங்குகின்றன. நிதிசார் சொத்துக்கள் கிட்டிய காலப்பகுதி சார்ந்ததாக விற்பனை அல்லது மீள்கொள்வனவு செய்கின்ற கருமத்திற்காக கையகப்படுத்தப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்பட்டு வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் நியாயமான பெறுமதியில் அறிக்கை செய்யப்படும். நியாயமான பெறுமதியின் மாற்றங்கள் நிதிசார் வருமான மற்றும் விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் செலவினமாக இனங்காணப்படும்.

3.4.2 கடனும் வருமதிகளும்

கடனும் வருமதிகளும் முனைப்பான சந்தையில் விலைகளை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட உருவாக்கப்படாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப கணக்கிடலின் பின்னர் அத்தகைய நிதிசார் சொத்துக்களின் சேதங்கள் கழிக்கப்பட்டு விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பிடப்படும். மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயமானது கையகப்படுத்துகையில் ஏதேனும் கழிவு அல்லது காப்பீட்டுக் கட்டணம் மற்றும் விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலின் உள்ளடங்கிய பகுதியான கட்டணங்களையும் கிரயத்தையும் கவனத்திற்கொண்டே கணிக்கப்படுகின்றது. விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலானது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதங்கள் காரணமாக ஏற்படுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடனும் வருமதிகளும் வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்பு முற்பணம், ஏனைய வருமதிகள் அத்துடன் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றையே உள்ளடக்குகின்றது.

3.4.3 விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் எனப்படுவது விற்பனைக்காக உள்ளதென பெயர் குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனுமொரு நிதிசார் சொத்துக்கள் பிரிவுக்கு வகைப்படுத்தப்படாத உருவாக்கப்பட்டிராத நிதிசார் சொத்துக்களாகும். அடிப்படை ஏற்பிசைவுகளுக்குப் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேத நட்டங்களைத் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படுகின்றன. விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்களின் பேரிலான வட்டி வருமானம் விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து கணிக்கப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றின் ஏற்பிசைவுசெய்தலை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டங்களில் மீள்வகைப்படுத்தப்படும்

அடிப்படை ஏற்பிசைவின்கீழ் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபை ஏதேனும் நிதிசார் சொத்துக்களை பெயர்குறிக்கவில்லை.

3.4.4 நிதிசார் சொத்தொன்றின் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம்

கீழே குறிப்பிட்ட இரண்டு நிபந்தனைகளும் நிறைவுசெய்யப்படின் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 09 இன் பிரகாரம் சபை நிதிசார் சொத்துக்களை மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்தில் இனங்காண்கிறது.

(அ) ஒப்பந்தம் செய்யப்பட்ட காசுப் பாய்வுகளை சேகரிக்கும் பொருட்டு நிதிசார் சொத்துக்களை தேக்கிவைக்கின்ற நோக்கத்தைக்கொண்ட தொழில்முயற்சி மாதிரியொன்றுக்குள் நிதிசார் சொத்துக்களை தேக்கிவைத்தல்.

(ஆ) நிதிசார் சொத்தின் ஒப்பந்தம் செய்யப்பட்ட விதிமுறைகள் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினங்களில் காசுப் பாய்வுகள் உருவாக்கப்படுவதோடு அவை வெறுமனே ஆரம்பத் தொகை அல்லது ஆரம்பத் தொகையில் தீர்க்கப்பட்டிராத தொகையின் மீதான வட்டியாகும்.

அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புக்களிலுமான முதலீடுகள் நிதிசார் சொத்துக்களில் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத் திட்டத்தின்கீழ் வகைப்படுத்தப்படும்.

4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களென வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக அமைவது கேள்வியின் பேரில் அல்லது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்படவேண்டியதாக உள்ளவையாகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக அமைவது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய மீதியாகும்.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான

பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.1 கமக்காரர் ஓய்வூதிய பொறுப்புகள்

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 4 இன் 15 வது பந்தியில் கூறப்பட்டுள்ளவகையில் காப்புறுதி உடன்படிக்கைகளில், காப்புறுதிக் கம்பெனி ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் தனது காப்புறுதி உடன்படிக்கையின்கீழ் எதிர்கால காசுப் பாய்வுகளின் நிகழ்கால மதிப்பீடுகளை பாவித்து தனது அடையாளம்கண்ட காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமானவையா என்பதை மதிப்பீடுசெய்ய வேண்டும். எதிர்கால காசுப் பாய்வுகளை கவனத்திற் கொண்டவிடத்து தனது காப்புறுதிப் பொறுப்புக்களின் கொண்டுசெல்லல் பெறுமதி (சார்ந்த பிற்போடப்பட்ட கையகப்படுத்தலுக்கான கிரயம் மற்றும் சார்ந்த அருவச் சொத்துக்களை கழித்து) போதுமானதல்லவென அந்த மதிப்பட்டில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பின் ஒட்டுமொத்த பற்றாக்குறையை இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காண வேண்டும்.

சந்தை வட்டிவீதங்களின் வித்தியாசங்களை கருத்தில்கொண்டு ஓய்வூதியப் பொறுப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு இலாப - நட்டக் கூற்றில் வேறு விரிவான வருமானத்தில் அத்துடன் நிதிசார் கூற்றுகளில் பிற விரிவான வருமானத்தின் பற்றாக்குறை இனங்காணப்பட்டுள்ளது.

இதனால் பிற விரிவான வருமானத்தின்கீழ் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பின் மேற்சொன்ன அதிகரிப்பினை இனங்காணுதல் மேற்படி தரநியமத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன. 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டுக்கிணங்க கமக்காரர் ஓய்வூதியத் திட்ட பொறுப்பு ரூ. 2,519,795,421.79 ஆல் அதிகரித்துள்ளது.

4.2 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 "இளைப்பாற்று நன்மைக் கிரயம்" உடன் அமைந்தொழுகத்தக்கவகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காகவும் சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததிலிருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்தின்படி ஊழியரொருவர் தொடர்பிலான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக்காலம் நிறைவடைந்ததிலிருந்து மாத்திரமே தொடங்குகின்றது. பொறுப்புகளுக்கான வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

4.3 மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்

எதிர்பாராத பொறுப்புகளாக பொருளாதார நன்மைகள் சாட்டுதல் செய்யப்படுவதற்கான வாய்ப்புகளற்ற அல்லது நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியாத சந்தர்ப்பங்களில் நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற நடப்புக் கடப்பாடுகள் ஆகும்.

சபையின் மூலதனக் கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.4 கமக்காரர் ஓய்வூதிய நிதியம்

2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பினை கவனத்திலெடுத்து நிகழ்கால பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுகளில் ஓய்வூதியப் பொறுப்பு கணக்குப் பதியப்பட்டுள்ளன.

கமக்காரர்களால் புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்ட 180.75 மில்லியன் ரூபா பங்களிப்புடன் நிதியத்திலிருந்து ஈட்டிய வட்டி கமக்காரர் ஓய்வூதிய நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வயது 60 வருடங்களை நிறைவுசெய்கையில் கமக்காரர்களுக்கு கமக்காரர் ஓய்வூதியத்தை செலுத்துவதற்கான நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்காக இந்த நிதியேற்பாடு அவசியமாகின்றது. குறிப்பு 07 இன் கீழ் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

5. விரிவான வருமானக் கூற்று

5.1 வருமானம்

1. சபையின் வருமானம் காப்புறுதித் தவணைப்பணம், திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் மற்றும் நிலையான வைப்புகள், ஊழியர்கடன் மற்றும் பிற நானாவித வருமானத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

2. அனைத்து வருமானமும் அட்டுறு அடிப்படையிலேயே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

3. காப்புறுதி தவணைப்பணம் கமக்காரர்களுக்கான மானியம் என்றவகையிலேயே அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ளது.

4. மூலதனச் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடை படிப்படியான அடிப்படையில் வருமானமான ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

5.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

அ) ஓய்வூதிய தவணைப்பண வருமானம் காப்புறுதி செய்யப்பட்ட காலப்பகுதிக்காக ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆ) மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையிலானதாக அமைவதோடு சார்ந்த செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

இ) வட்டி வருமானம் கால அடிப்படையில் அட்டுறுநிலையடையும்.

5.3 அரசாங்கக் கொடைகளுக்கான கணக்கீடு

உறப்பட்ட கிரயத்திற்காக சபைக்கு செலுத்தப்படுகின்ற கொடைகள் அந்த செலவுகள் இனங்காணப்பட்ட காலப்பகுதிக்குள் வருமானம் என்றவகையில் விரிவான வருமானத்திலல் இனங்காணப்படுகின்றன. சபையைப் பேணிவருவதற்காகவும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறக்கொண்ட நிலைமையில் பேணிவருவதற்காகவுமம் உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டுக்கான மிகைநிலையை தயாரிக்கையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

401/4 இலக்கமும் 2008.10.15 திகதியும் கொண்ட பணிப்பாளர்சபை பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவினங்கள் பின்வருமாறு அமையும்.

செலவினம்	**வீதம்**
சம்பளம், ஊ.சே. நி. மற்றும் ஊ.ந.நி.	50%
மருத்துவச் செலவுகள்	50%
மதியுரைக் கட்டணம்	40%
நலனோம்பல்	40%
சீருடைகள்	48%
உபசரிப்பு	40%
அச்சிடல்	40%
சட்டக் கட்டணங்கள்	60%
விழிப்பூட்டலும் பயிற்சியும்	20%
பணிப்பாளர்சபை உறுப்பினர் படிகள்	40%
வாடகை, தொலைபேசி	40%
தபால் கட்டணம்	55%
மின்சாரம்	40%
பிரயாணம், மேலதிகநேரம்	50%
நீர்க் கட்டணம்	40%
நாட் சம்பளம்	50%
பாதுகாப்பு அலுவல்கள்	20%
அலுவலக சாதனப் பராமரிப்பு	20%
வாகனப் பராமரிப்பு	40%
கணனிப் பராமரிப்பு	25%
எரிபொருள் செலவு	30%
கட்டிடப் பராமரிப்பு	40%
காகிதாதிகள்	48%

6. காசுப் பாய்வுக்கூற்று

இலங்கை கணக்கீட்டுத் தரநியமம் 07 பிரகாரம் திட்டத்தின் காசுப்பாய்வுக் கூற்று "நேரில் முறைமையை" பயன்படுத்தியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்கும் நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் நேர்ந்த சாதகமான மற்றும் பாதகமான சம்பவங்களே அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான சம்பவங்களாக கருதப்படுகின்றன. நிதிநிலைமை பற்றிய அனைத்துவிதமான பொருண்மையான ஐந்தொகைக்கு பின்னரான சம்பவங்களையும் பரிசீலனைசெய்து உசிதமான சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி நிதிக்கூற்றுகளின் ஏற்புடைய குறிப்புகளில் ஒன்றில் சீராக்கப்பட்டுள்ளன அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

8. சார்ந்த தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்

கமத்தொழில் காப்புறுதித் திட்டமும் கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டமும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படுகின்றன. இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன. கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் கமத்தொழில் காப்புறுதித் திட்டத்திடமிருந்து ரூ. 295,230,441.79 ஐ கடனாகப் பெற்றுள்ளது.

9. முந்திய வருடத்திற்கான சீராக்கம்

9.1 கமக்காரர் ஓய்வூதிய பொறுப்புகள்

முந்திய வருடங்களில் கமக்காரர் ஓய்வூதிய பொறுப்புகளுக்காக ரூ. 91,079,185,608 நிதியேற்பாட்டினை சபை ஒதுக்கியுள்ளதோடு 2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் ரூ. 1,518,531,938.50 மிகையேற்பாடு சீராக்கப்பட்டுள்ளது.

10. எதிர்பாராத சந்தர்ப்பங்கள்

மாவிலாறு அணைக்கட்டினை மூடிவிட்டதால் பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்கு நட்டஈடு செலுத்துகையில் 7 மில்லியன் ரூபாவிற்கு கிட்டிய பணத்தொகை மோசடி செய்யப்பட்டமை சம்பந்தமாக சபையின் 3 உத்தியோகத்தர்களுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதோடு நிதி மோசடி சம்பந்தமாக அவர்களுக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் குற்றப்பகர்வு தாக்கல்செய்யப்படவுள்ளது. மேலதிக அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதற்காக இந்த வழக்கு சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2025 திசெம்பர் 31 இல் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

குறிப்பு – 1 ஆதனம், சாதனம், காசுப் பாய்வுக் கூற்று பொறித்தொகுதி

விபரம்	2025.01.01 இல் கிரயம் /மதிப்பீடு	கையுதிர்த்தல்	சேர்த்தவை	மீள்மதிப்பீட்டுக்கு மாற்றியவை	மீள்மதிப்பீடு	மொத்தம்	2025.01.01 இல் திரண்ட தேய்மானம்	கையுதிர்த்தல்	ஆண்டுக்கான தேய்மானம்	மீள்மதிப்பீட்டுக்கு மாற்றியவை	மொத்த தேய்மானம்	2025.12.31 இல் தேறிய பெறுமானம்
மோட்டார் வாகனம்	4,350,000		-	(4,350,000)	4,800,000	4,800,000	217,500		900,000	(797,500)	320,000	4,480,000
அலுவலக சாதனம்	1,254,586	(50,040)	-	-	-	1,204,546	1,190,212	(50,040)	11,690	-	1,151,862	52,684
. நலன்புரிச் சாதனம்	33,826	(4,700)	26,699	-	-	55,825	17,627	(4,700)	2,030	-	14,957	40,868
தளபாம், பொருத்திகள்	1,385,296	(26,156)	-	-	-	1,359,140	1,197,928	(26,156)	69,878	-	1,241,650	117,490
வளிச்சீராக்கிகள்	1,051,273		-	-	-	1,051,273	993,925	-	43,011	-	1,036,936	14,337
கணினி	30,915,578	(801,164)	-	-	-	30,114,413	23,298,930	(801,164)	1,960,286	-	24,458,052	5,656,361
பிரச்சார சாதனங்கள்	422,837		-	-	-	422,837	422,837	-	-	-	422,837	-
கணினி மென்பொருள்	1,475,000		-	-	-	1,475,000	1,475,000	-	-	-	1,475,000	-
	40,888,396	**(882,060)**	**26,699**	**(4,350,000)**	**4,800,000**	**40,483,035**	**28,813,959**	**(882,060)**	**2,986,896**	**(797,500)**	**30,121,294**	**10,361,740**

2025 திசெம்பர் 31 இல் ரூ. 25,191,749.35 பெறுமதிகொண்ட இன்னமும் பாவிக்கப்பட்டு வருகின்ற வரலாற்றுக் கிரயம்கொண்ட முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட சொத்துக்களை ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகள் என்பது உள்ளடக்குகின்றது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2025 திசெம்பர் 31 இல் கணக்குக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2025	31.12.2024
	ரூ.	ரூ.
குறிப்பு 02 - கையிருப்பு		
அச்சிடல் பொருட்கள்	8,470,539	8,005,488
காகிதாதிகள்	166,083	173,871
	8,636,622	**8,179,359**
குறிப்பு 03 – வருமதிகள்		
சேகரித்தல் முகவர்களிடமிருந்து வருமதிகள்	686,979	686,979
அஞ்சல் திணைக்களத்திடமிருந்து வருமதிகள்	131,075,053	99,247,815
	131,762,032	**99,934,794**
குறிப்பு 04 – இலதாகஇய இரயத்தில் முதலீடு		
திறைசேரி உண்டியல்கள்	767,402,461	762,897,424
நிலையான வைப்பு	916,965,215	235,364,240
	1,684,367,676	**998,261,663**
குறிப்பு 05 – வருமதியான வருமானம்		
கமக்காரரின் பங்களிப்பு	484,167	780,425
ஆயுட் காப்புறுதிக் கட்டுப்பணத்திற்கான கமக்காரர்களின் பங்களிப்பு	98,220	157,170
நிருவாக வருமானத்திற்கான கமக்காரர் பங்களிப்பு	49,110	78,585
	631,497	**1,016,180**
குறிப்பு 06 – வங்கியிலுள்ள காசு		
கணக்கிலக்கம் 100150112345 – மக்கள் வங்கி யூனியன் பிளேஸ்	694,942	552,175
கணக்கிலக்கம் 100180112344 – மக்கள் வங்கி யூனியன் பிளேஸ்	1,588,174	849,025
கணக்கிலக்கம் 100130112351 – மக்கள் வங்கி யூனியன் பிளேஸ்	710,584	1,327,251
கணக்கிலக்கம் 100110112347 – மக்கள் வங்கி யூனியன் பிளேஸ்	11,072,811	12,860,045
கணக்கிலக்கம் 8403704 – இலங்கை வங்கி - யூனியன் பிளேஸ்	1,147,051	29,346
கணக்கிலக்கம் 87144457 - இலங்கை வங்கி - யூனியன் பிளேஸ்	140,697	32,100
கணக்கிலக்கம் 87649201 - இலங்கை வங்கி - யூனியன் பிளேஸ்	1,632,232	520,062
கணக்கிலக்கம் 335100370008791 – மக்கள் வங்கி நுகேகொட	138,827	635,597
கணக்கிலக்கம் 100440112349 – மக்கள் வங்கி யூனியன் பிளேஸ்	428,399	851,721
	17,553,716	**17,657,323**
குறிப்பு 07 – கமக்காரர் ஓய்வூதிய நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	(92,452,863,331)	(88,371,389,435)
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	1,518,531,939	-
ஓய்வூதிய பங்களிப்பும் அடுத்தடுத்த பங்களிப்புகளும்	132,137,422	97,949,579
புதிய கமக்காரர் ஓய்வூதிய நிதியம்	180,755,307	73,089,404
	(90,621,438,663)	**(88,200,350,452)**
கூட்டுக /கழிக்க		
செலவினை விஞ்சிய மொத்த வருமானம்	(2,400,921,388)	(4,179,423,475)
	(93,022,360,052)	**(92,379,773,927)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2025	31.12.2024
	ரூ	ரூ
குறிப்பு 08 – மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை		
முன்கொண்டுவந்த மீதி	7,944,528	3,663,542
கூட்டுக/ (கழிக்க)		
அரசாங்க கொடை இலதாக்கல்	(2,086,896)	(1,210,704)
ஆண்டில் சேர்த்தவை	26,699	5,491,691
முன்கொண்டுசென்ற மீதி	**5,884,331**	**7,944,528**
குறிப்பு 09 சென்மதிகள்		
முகவர் தரகு	756,441	248,323
பணியாளர் பாதுகாப்பு வைப்பு	142,300	142,300
ஓய்வூதியக் கொடுப்பனவு	3,000,277,848	2,345,496,047
ஓய்வூதியத் தரகு	16,288,552	1,255,674
காப்பீட்டு கணிப்பாய்வாளர்களின் கட்டணம்	600,000	
குழுகக் காப்புறுதிக் கட்டுப்பணம்	323,093,177	308,647,637
- க.க.கா.ச.	569,446,777	552,668,504
	3,910,605,095	**3,208,458,485**
குறிப்பு 10 – அட்டுறு செலவினங்கள்		
அச்சிடல் அறவீடுகள்	442,635	664,800
நிருவாகச் செலவினங்கள்	2,278,782	920,310
தபால் செலவுகள்	2,082,905	3,331,881
கணக்காய்வுக் கட்டணங்கள்	500,000	693,495
	5,304,322	**5,610,486**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2025 ரூ.	31.12.2024 ரூ.	31.12.2023 Rs.
குறிப்பு 11 – பிற வருமானம்			
அரசாங்கக் கொடை இலதாக்கல்	2,086,896	1,210,704	1,065,021
நானாவித வருமானம்	25,049	107,883	39,893
சொத்துக்கள் கையுதிர்த்தல் வருமானம்	11,887	-	50,560
	2,123,832	**1,318,588**	**1,155,474**
குறிப்பு 12 – நிருவாக மற்றும் தாபன செலவுகள்			
சம்பளமும் ஊதியமும்	154,176,231	135,547,011	103,777,380
ஊ.சே.நி	20,397,128	17,052,147	12,527,325
ஊ.ந.நி.	4,078,407	3,410,888	2,541,336
பிரயாணமும் வாழ்க்கைச் செலவுப்படியும்	11,622,143	11,953,311	11,268,488
மேலதிகநேரம்	5,883,769	4,448,111	3,432,367
நாளாந்தப் படி	562,548	554,581	562,604
மருத்துவச் செலவுகள்	1,762,450	1,735,350	1,759,900
பணிக்கொடை	7,767,255	4,770,210	4,368,782
மதியுரைக் குழு கொடுப்பனவுகள்	76,500	68,000	-
பணியாளர் நலனோம்பல்	1,778,531	1,766,399	1,435,321
பணியாளர் சீருடைகள்	270,013	752,976	-
சபை உறுப்பினர்களுக்கான படிகள்	238,000	270,800	276,200
மதியுரைக் கட்டணம்	600,000	-	68,000
தொழிலாளர் அறவிடல்கள்	28,300	-	62,570
வாடகை	11,601,672	11,438,685	9,902,831
தொலைபேசி	6,199,500	7,176,110	2,966,819
தபால் செலவுகள்	22,969,035	7,714,950	7,523,165
பாதுகாப்பு	734,815	696,093	738,121
மின்சாரம்	2,856,708	2,990,210	2,507,491
நீர்க் கட்டணம்	417,264	462,405	388,730
கணக்காய்வுக் கட்டணம்	581,553	323,595	363,000
எரிபொருள்	5,597,684	7,480,729	6,914,645
எரிபொருள் விழிப்புணர்வும் பயிற்சியும்	2,979,288	3,327,597	4,315,001
அச்சிடல்	2,239,519	866,041	1,206,478
காகிதாதிகளும் நுகரப்படற்பாலனவும்	9,608,768	9,209,975	7,337,029
களியாட்டங்கள்	521,774	454,227	541,126
மோட்டார் வாகனப் பராமரிப்பு	7,997,182	10,842,897	10,569,477
கட்டிடப் பராமரிப்பு	1,136,136	1,372,829	4,023,958
அலுவலக உபகரணப் பாதுகாப்பு	253,464	354,022	384,290
கணினி மற்றும் மென்பொருள் பராமரிப்பு	944,578	613,675	1,243,662
தேய்மானம்	2,986,896	2,028,204	1,635,021
	288,867,110	**249,682,029**	**204,641,116**
குறிப்பு 13 – நிதியும் பிறவும்			
கடன் வட்டி	42,831,809	46,482,878	62,601,947
வங்கி அறவீடுகள்	28,950	121,026	61,168
	42,860,759	**46,603,904**	**62,663,115**

11.3

நிதிசார் அறிக்கையிடல் - கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்



எனது இலக்கம்: ARI/C/FIPS/1/25/32/FA 2026 மே 21

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுகள்

1.1 அபிப்பிராயம்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, , அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று மற்றும் கணியரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தவல்களையும் உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளுடன் சம்பந்தப்பட்ட குறிப்புகளை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசு அரசியமைப்பின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

திட்டத்தின் நிதிக்கூற்றுகள் மூலமாக 2025 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச்செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.**2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்கீட்டு நியமங்களின்கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அத்திவாரத்தை

பெற்றுக்கொள்வதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 விடயமொன்றை வலியுறுத்துதல்

செயற்றிட்டத்திற்கு இடையறாத வழியுரிமை நிலவுகின்றதென்பதை தெளிவுபடுத்துகின்ற நிதிக்கூற்றுகளுகக்கான குறிப்பு இலக்கம் 2.7.1 மீது கவனத்தை ஈர்க்கச்செய்விக்கிறேன். 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் திட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூ. 5,439,404,553 எதிர்க்கணியப் பெறுமானத்தை வகித்ததோடு அன்றைய திகதியில் எதிர்கால ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 6,068,890,550 ஆக அமைந்தபோதிலும் முதலீடுகளின் பெறுமதி ரூ. 750,403,931 ஆக அமைந்திருந்தது. அதன்படி திட்டத்தின் மொத்த சொத்துகளை தேறவைப்பதால் மொத்த பொறுப்புகளை தீர்க்க முடியாததாக அமைவதோடு ஆதற்கான எதிர்காலத் திட்டமும் திட்டத்திடம் நிலவாமை காரணமாக திட்டத்தின் இடையறாத வழியுரிமை கருத்துபேதத்தை ஏற்படுத்த வல்லது. இது சம்பந்தமான எனது அபிப்பிராயம் மறுக்கப்பட மாட்டாது.

1.4 **நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுந் தரப்பினரதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் நிதியத்தை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் நிதியத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளற்றதாக அமைந்துள்ளதென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்துதல் என்பது உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்கையில் அது எப்போதும் கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான

உறுதிப்படுத்தலாக அமையாதிருக்கக்கூடும். மோசடிகளும் தவறுகளும் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக கணியரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியானதன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கங்களிலேயே தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களின்பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக நான் கணக்காய்வின்போது தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றினேன். நான் தொடர்ந்தும்

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை பெற்றுக்காள்கையில் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடிய அபாயநேர்வுகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தலுக்காக சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டது. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளால் இடம்பெறுகின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதற்கான காரணம் மறைசூழ்ச்சியால், போலியாவணம் புனைவதால், கருத்தொன்றிய கைவிடல்களால், தவறுதலாக காட்டுதலால் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை மீறிச்செல்லல் என்பவற்றினாலாகும்.
- உள்ளக் கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தரப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும்பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வு பெறப்பட்டது.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் உசிதமானதன்மை, நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக திட்டத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய நிச்சமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சமற்றதன்மைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அதுசம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் மறுக்கப்பட்டதாதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.

- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமாகவும் நியாயமாகவும் உள்ளடங்கி இருப்பதாகவும் வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி ஆளுந் தரப்பினர்களை விழிப்பூட்டுவேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்தாக அமைகின்றது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க எனது அறிக்கையில் விடயமொன்றை வலியுறுத்துதல் பகுதியில் 1.3 பிரிவின்கீழ் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டவிதிகள் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

சட்டதிட்டங்கள், பிரமாணங்களுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ) 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
(i) பிரிவு 7	திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு 60 வயது நிறைவடைகையில் ஓய்வூதியம் வழங்கப்படவேண்டியபோதிலும் 2007 சனவரி தொடக்கம் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதியுடன் தொடர்புடையதாக ஓய்வூதியம் வழங்கப்பட்ட 141 கடற்றொழிலாளர்களுக்காக ரூ. 4,240,063 உம் 2025 ஆம் ஆண்டில் ஓய்வூதியத்தைக்கோரிய 33 கடற்றொழிலாளர்களுக்காக ரூ. 1,059,063 என்ற வகையில் ரூ. 5,299,258 நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஓய்வுபெறும் வயதினை அடைந்திருந்த 33,330 கடற்றொழில் உதவதொகை செலுத்துனர்களில் 21,724 பேருக்கு முறைப்படி ஓய்வூதிய விண்ணப்பங்கள் கிடைத்திராமை மற்றும் முறைப்படி தவணைப்பணம் கிடைத்திராமை போன்ற காரணங்களின்பேரில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய நன்மைகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து பங்களிப்புத் தொகைகளை சேகரித்தல் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள், கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனர்கள் மற்றும் அவர்களின் உயிர்த்தரவுத் தகவல்கள் போன்ற செயற்றிட்டம் தொடர்பான தரவுத் தொகுதியொன்றை பேணிவராமை காரணமாக தொடரச்சியான பத்து தவணைகளுக்கான தவணைப்பணத்தை செலுத்தாமையின்பேரில் உதவுதொகை செலுத்துனர் நன்மைகளை இழத்தல் சம்பந்தமான உதவுதொகை செலுத்துனர்களுக்கு விழிப்பூட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொடர்ச்சியாக 06 மாதங்கள் கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியம்பெறுனர்களின் பெயர்களும் இறந்தவர்கள் அல்லது அவ்வாறு ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளாமைக்கான ஏதுவாக அமைந்த விடயங்களை உறுதிசெய்துகொண்டு மேற்படி பட்டியல்களையும் அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ஓய்வூதியம் செலுத்துகின்ற பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. மேலும் ஓய்வூதியம் பெறுனர் அனைவரும் உண்மையாகவே உயிருடன் இருக்கிறார்களா என்பது பற்றி உறுதிசெய்து கொள்ளாமல் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு இறப்புப் பணிக்கொடை விண்ணப்பங்கள் கிடைத்த திகதியிலிருந்து இறப்புப் பணிக்கொடை செலுத்துகின்ற செயற்பாங்கினை நிறைவுசெய்ய 6 தொடக்கம் 52 மாதங்கள் வரையான காலம் கழிந்திருந்தது.

ஒப்பம்
எல்.ஐ.எஸ். ஜயரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்பரித் திட்டம்
2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைகள் பற்றிய கூற்று

	குறிப்பு	31.12.2025 ரூ.	31.12.2024 ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி	1	21,701	37,056
		21,701	**37,056**
நிதிசார் சாதனங்கள்			
திறைசேரி முறிகள்		431,086,149	412,966,209
		431,086,149	**412,966,209**
நடைமுறை சொத்துக்கள்			
கையிருப்புகள்	2	109,321	116,255
வருமதிகள்	3	585,178	88,172
பருவமுதிர்வுவரை தடுத்துவைத்த முதலீடுகள்	4	319,317,782	329,035,746
வங்கியிலுள்ள காசு	5	2,788,706	1,087,964
		322,800,987	**330,328,138**
மொத்த சொத்துக்கள்		**753,908,836**	**743,331,403**
ரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்			
கடற்றொழிலாளர் ஓய்வூதிய திரண்ட நிதியம்	6	(5,439,404,553)	(5,417,682,964)
இறப்புப் பணிக்கொடை நிதியம்	7	37,310,095	35,733,815
		(5,402,094,458)	**(5,381,949,149)**
நடைமுறையல்லாப் பொறுப்புகள்			
ஓய்வூதியப் பொறுப்பு		6,068,890,556	6,042,840,342
ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடு		1,392,458	990,146
		6,070,283,014	**6,043,830,488**
நடைமுறைப் பொறுப்புகள்			
மொத்த சென்மதிகள்	8	84,537,509	80,021,837
அட்டுறு செலவினங்கள்	9	1,182,772	1,428,227
		85,720,280	**81,450,063**
மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்		**753,908,836**	**743,331,403**
		-	-

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

....
நிதிப் பிரதானீ பணிப்பாளர் நாயகம்

இந்த நிதிக்கூற்றுகளின் தயாரிப்பிற்கும் சமர்ப்பணத்திற்கும் பணிப்பாளர் சபை பொறுப்புக் கூறுகின்றது.
சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கையொப்பமிட்டது

....
பணிப்பாளர் சபை உறுப்பினர் பணிப்பாளர் சபை உறுப்பினர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

2025 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

		31.12.2025	31.12.2024
வருவாய்	*குறிப்பு*	ரூ.	ரூ.
வட்டி வருமானம்		106,221,908	125,108,886
கடற்றொழிலாளர்களின் பங்களிப்பு		371,426	67,017
		106,593,334	125,175,903
கழிக்க:			
வட்டி வருமானம் - நிருவாகச் செலவுகளுக்கு மாற்றப்பட்டது		(3,500,000)	(3,500,000)
நிதியத்திற்கான மொத்த வருவாய்		**103,093,334**	**121,675,903**
கழிக்க: செலவினங்கள்			
தேறிய உதவுதொகையின் மீளளிப்பு		(195,373)	(218,765)
தேறிய வட்டியின் மீளளிப்பு		(292,473)	(296,988)
ஊக்குவிப்புப் படி		(4,719)	(6,809)
குழுமக் காப்புறுதிக் கட்டுப்பணம்		(1,748,280)	(1,743,600)
ஓய்வூதியக் கொடுப்பனவும் தரகும்			
- - ஓய்வூதியக் கொடுப்பனவு		(91,442,566)	(88,348,718)
- ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான தரகு		(1,118,670)	(1,080,820)
ஓய்வூதியப் பொறுப்பின் அதிகரிப்பு		(404,039,716)	(510,491,316)
மொத்த செலவுகள்		**(498,841,797)**	**(602,187,016)**
தொழிற்பாட்டு மிகைநிலை / பற்றாக்குறை		**(395,748,463)**	**(480,511,113)**
நிருவாகச் செலவினங்களுக்கான வட்டி வருமானம்		3,500,000	3,500,000
நிருவாகச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை		1,500,000	1,500,000
		5,000,000	5,000,000
நானாவித வருமானம்		675	200
		(390,747,788)	**(475,510,913)**
கழிக்க: செலவுகள்			
நிருவாக மற்றும் தாபன செலவுகள்	10	8,679,432	8,137,200
நிதி அறவீடுகள்	11	1,810	13,800
மொத்த நிருவாகச் செலவுகள்		**8,681,242**	**8,151,000**
ப்ரோபைட்/ (லாஸ்) போர் தி இயர்		**(399,429,030)**	**(483,661,913)**
பிற விரிவான வருமானம்			
பணிக்கொடை ஆதாயம் / (இழப்பு)		(282,061)	934,103
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்		**(399,711,091)**	**(482,727,810)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்பரித் திட்டம்

மைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

	கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியம்	இறப்புப் பணிக்கொடை நிதியம்	மொத்தம்
2024 சனவரி 01 இல் மீதி	**(4,934,955,153)**	**34,199,215**	**(4,900,755,938)**
ஆண்டில் சேர்த்தவை	-	1,743,600	1,743,600
செலுத்திய நன்மைகள்	-	(209,000)	(209,000)
தேறிய மிகைநிலை /(பற்றாக்குறை)	(482,727,810)	-	(482,727,810)
2024 திசெம்பர் 31 இல் மீதி	**(5,417,682,964)**	**35,733,815**	**(5,381,949,149)**
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	377,989,502		377,989,502
ஆண்டில் சேர்த்தவை	-	1,748,280	1,748,280
செலுத்திய நன்மைகள்	-	(172,000)	(172,000)
தேறிய மிகைநிலை /(பற்றாக்குறை)	(399,711,091)	-	(399,711,091)
2025 திசெம்பர் 31 இல் மீதி	**(5,439,404,553)**	**37,310,095**	**(5,402,094,458)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்பரித் திட்டம்

காசுப் பாய்வுக் கூற்று

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீதி

	31.12.2025	31.12.2024
	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப் பாய்வு		
தேறிய மிகைநிலை /பற்றாக்குறை	(399,429,030)	(483,661,913)
சீராக்கல்கள்		
தேய்மானம்	15,356	17,642
ஓய்வூதியப் பொறுப்பிலான அதிகரிப்பு	404,039,716	510,491,316
குழுமக் காப்புறுதி திட்டத்திற்கான பங்களிப்பு	1,748,280	1,743,600
க.கா.சபையினால் செலுத்தப்பட்ட நிருவாகச் செலவுகள்	5,880,077	6,194,629
இளைப்பாற்று பணிக்கொடைக்கான ஏற்பாடு	120,251	92,408
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முற்பட்ட தொழிற்பாட்டு இலாபம்	**12,374,649**	**34,877,682**
சரக்குத்தொக்குகளிலான (ஏற்றம்) /இறக்கம்	6,934	(28,825)
வருமதிகளிலான (ஏற்றம்) /இறக்கம்	(497,006)	(83,172)
பிற சென்மதிகளின் (ஏற்றம்) /இறக்கம்	(1,364,405)	(86,763,315)
அட்டுறு செலவினங்களிலான (ஏற்றம்) /இறக்கம்	(245,455)	578,527
	(2,099,932)	**(86,296,785)**
தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசு		
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து பிறப்பித்த காசு	10,274,717	(51,419,103)
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து தேறிய காசுப் பாய்வு	**10,274,717**	**(51,419,103)**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வு		
நிதிச்சாதனங்கள்	(8,401,975)	51,306,737
Purchases of Property, Plant & Equipment	-	-
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	(172,000)	(209,000)
Benefits during the year-group insurance scheme	N2'!D16	N2'!D16
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்வு	**(8,573,975)**	**51,097,737**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வு		
	-	-
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்வு	**-**	**-**
காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் தேறிய ஏற்றம் /(இறக்கம்	**1,700,741**	**(321,366)**
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு இணையாவை	1,087,964	1,409,330
	2,788,706	**1,087,964**
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் வங்கி மீதி		
வங்கியிலுள்ள காசு - 31.12.2025	**2,788,706**	**1,087,964**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

1. பொதுவான கொள்கைகள்

1.1. அறிக்கையிடும் அமைப்பாண்மை

இலங்கை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதோடு நுகேகொட, கங்கொடவில, சுபத்தராராம வீதியில் இலக்கம் 117 எனுமிடத்தில் அமைந்துள்ளதோடு அதன் பிரதான தொழில்முயற்சி நிலையமாகவும் செயலாற்றி வருகின்றது.

மேலும் விதிக்கப்படுகின்ற தினத்திலிருந்து அமுலுக்கு வரத்தக்கதாக 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கு கையளிக்கப்பட்ட அனைத்துவிதமான தத்துவங்களும் பணிகளும் அதன்படி அமுலாக்கப்படவும் ஈடேற்றப்படவும் வேண்டும்.

1.2 தாய் அமைப்பாண்மை மற்றும் இறுதியான தாய் அமைப்பாண்மை

சபையின் தாய் அமைப்பாண்மை மற்றும் இறுதியான தாய் அமைப்பாண்மையாக அமைவது இலங்கை அரசாங்கமாகும்.

1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை நெறிப்படுத்துவதே பிரதானமான செயற்பாடாக அமைகின்றது.

1.4 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

1.5 பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுகள் அங்கீகரிக்கப்படுதல்

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுகள் 2026 பெப்ருவரி 26 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு வெளியிடுவதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்டது.

2.1 தயாரித்தலுக்கான அடிப்படை

(அ) இசைவுக் கூற்று

இந்த நிதிக்கூற்றுகள் நிதி நிலைமை பற்றிய கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்வுக் கூற்று, மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள் /இலங்கை கணக்கீட்டு நியமமங்கள்) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் கீழ்க்காணும் ஆக்கக்கூறுகளை உள்ளடக்குகின்றன.

- நிதி நிலைமை பற்றிய கூற்று 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் பற்றிய தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 01)
- விரிவான வருமானக் கூற்று மீளாய்வாண்டுக்கான கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் நிதிசார் செயலாற்றுகை பற்றிய தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 02)
- உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று உரிமைப் பங்கிலான அனைத்துவிதமான மாற்றங்களையும் சித்தரிக்கின்றது. (பக்கம் 03)
- காசுப் பாய்வுக் கூற்று, காசு மற்றும் காசுக்கு இணையானவற்றை பிறப்பிப்பதில் சபை கொண்டுள்ள இயலுமையையும் மேற்படி காசுப்பாய்வின் பாவனை பற்றியும் பயனர்களுக்கு தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 04)
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல்களுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள். (பக்கம் 05 -20)

2.2 அளவிடுதலுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புகளின்கீழ் நியாயமான பெறுமதி தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றவேளையில் தவிர்ந்ததாக இந்த நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய மரபின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் அதன் சார்புரீதியான திரவத்தன்மையை பிரதிபலிப்புச் செய்வதற்காக விரிவானவகையில் அதன் நிதிநிலைமை பற்றிய கூற்றினை சமர்ப்பிக்கின்றது. நிதிக்கூற்றுகள்மீது தாக்கமேற்படுத்துகின்ற பணவீக்கம்சார்ந்த காரணிகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

2.4 நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தலிலான புழக்கத்திலுள்ள பணம்

சபையின் நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தல் புழக்கத்திலுள்ள பணமான இலங்கை ரூபாய்களில் இந்த நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் சமர்ப்பித்துள்ள அனைத்துவிதமான நிதிசார் தகவல்களும் வேறுவிதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய அண்மித்த ரூபாவில் தரப்பட்டுள்ளது.

2.5 கணிசநிலையும் திரட்டலும்

ஒத்த உருப்படிகளில் ஒவ்வொரு கணிசமான வகுப்புகளும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இயல்பு அல்லது பணிகளுக்கிணங்க உருப்படிகள் சமமற்றதாக அமைந்தாலேயன்றி அவையும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.6 அறிக்கையிடல் காலப்பகுதி

அறிக்கையிடல் காலப்பகுதியாக அமைவது 2025 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியாகும். ஏற்புடையதாகுமிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அதனையடுத்து காட்டப்பட்டுள்ள குறிப்புகள் மூலமாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

2.7 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள் /இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகளின்

கணிசநிலை பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தை பணிக்கின்றது. பிரயோகிக்கப்பட்ட இந்த மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஊகங்களும் இடையறாதவகையில் மீளாய்வு செய்யப்படும். கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீட்டுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதிக்குள்ளேயும் அவை தாக்கமேற்படுத்துகின்ற எதிர்கால காலப்பகுதிகளுக்குள் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிசார் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகளின்பேரில் மிகவும் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக்கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், ஐயப்பாடுகள் மற்றும் தீர்மானகரமான தீர்மானங்கள் பற்றி கருத்திற்கொள்ளப்படவேண்டிய துறைகள் பற்றிய தகவல்கள் நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகளில் அடக்கப்பட்டுள்ளன.

2.7.1 இடையறாத வழியுரிமை

நடப்புத் தொழில்முயற்சி என்றவகையில் இடையறாமல் நிலவ கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் கொண்டுள்ள இயலுமை பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றினை செய்துள்ளது. அதனால் நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2.7.2 ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

இடைப்பட்ட காலஎல்லையின் ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும் பொருட்டு நடப்புக் காலஎல்லையின் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்துவதற்காக நிதிக்கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பணத்தொகைகளுக்காகவும் முந்திய கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட கணியரீதியான, தொடருரைசார்ந்த மற்றும் விபரங்களை உள்ளடக்கிய ஒப்பீட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் உருப்படிகளை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும்பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பணத்தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.7.3 நிதிசார் சொத்தொன்றின் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம்

கீழே காட்டப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படின் இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் சபை நிதிசார் சொத்துக்களை மதிப்பிறக்கம் செய்த கிரயத்தில் இனங்காண்கின்றது.

(அ) உடன்படிக்கைசெய்த காசுப் பாய்வினை சேகரிக்கும்பொருட்டு நிதிசார் சொத்துக்களை தேக்கிவைக்கின்ற நோக்கத்தைக்கொண்ட தொழில்முயற்சி மாதிரிக்குள் நிதிசார் சொத்துக்களை தேக்கிவைத்தல்

(ஆ) நிதிசார் சொத்துக்களின் உடன்படிக்கைசெய்த விதிகள் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினங்களில் காசுப்பாய்வினை உருவாக்குவதோடு அவை வெறுமனே ஆரம்பத் தொகை மற்றும் ஆரம்பத் தொகையின் தீர்க்கப்படாத பணத்தொகை மீதான வட்டியாக அமையும்.

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் மேற்கொண்ட முதலீடுகள், நிதிசார் சொத்துக்களின் மதிப்பிறக்கஞ்செய்த கிரய வழிமுறையின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2.7.4. நிதிச் சாதனங்களின் நியாயமான பெறுமதி

அவதானிக்கக்கூடிய சந்தைவிலையொன்று இல்லாத, நிதிநிலைமை பற்றிய கூற்றில் அறிக்கைசெய்யப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புகளுக்கான நியாயமான விலையை கணித முறை மாதிரிகளை பிரயோகித்தல் உள்ளிட்ட மதிப்பீடு செய்கின்ற பலதரப்பட்ட நுணுக்கமுறைகளை பாவித்தே நியாயமான விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. பெறக்கூடியவிடத்து அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளிலிருந்தே இந்த மாதிரிகள் வழமையாக பெறப்படுகின்றது. எவ்வாறாயினும் அவ்வாறான தரவுகள் இல்லாதவிடத்து இந்த நிதிச்சாதனங்களின் நியாயமான பெறுமதியை நிலைநாட்டும்பொருட்டு திறனாய்வு விவேகம் அவசியப்படுத்தப்படுகின்றது.

2.8 நிதிச்சொத்துக்கள் சேதமடைதல்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் ஒவ்வோர்அறிக்கையிடல் திகதியிலும் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைவதற்கான புறநிலையான சான்றுகள் உள்ளவாவென சபை மதிப்பீடுசெய்து வருவதோடு அத்தகைய சேதமடைதல் இடம்பெற்றிருப்பின், சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் நடப்புப் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை பெற்றுக்கொள்ளல் மூலமாக சேதத்தின் அளவு கணிக்கப்படும்.

3. சொத்துக்களும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையும்

3.1 ஆதனம், சாதனம், பொறித்தொகுதி

3.1.1 இனங்காணலும் அளவிடலும்

சொத்துக்களை சார்ந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவரல் இடம்பெறுமாயின் மற்றும் சொத்தின் கிரயத்தை நம்பிக்கைமிக்கவகையில் அளவிட இயலுமாயின் மாத்திரமே ஆதனம், சாதனம், பொறித்தொகுதியை இனங்காண்பதற்கான அடிப்படை அடையாளம் காணப்படும்.

திரண்ட தேய்மானம் அல்லது சேதநட்டம் கழிக்கப்பட்ட கிரயத்திற்கே அனைத்துவிதமான ஆதனம், சாதனம், பொறித்தொகுதி தொடக்கத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன. சொத்தொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றது. ஆதனம், சாதனம், பொறித்தொகுதியொன்றின் கணிசமான பகுதிகள் இந்த காலஇடைவெளிக்குள் மீள்நிறுவப்படுவதற்கான அவசியமேற்படுமிடத்து மீள்நிறுவிய பகுதி அதனைச்சார்ந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்தைக் கொண்டதாக அமைப்பாண்மையால் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய சகலவிதமான திருத்தவேலைகளும் பராமரிப்பும் உறப்பட்ட செலவினமாக வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

ரூ. 727,925.42 மொத்த வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாகவே தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் ஆதனம், சாதனம், பொறித்தொகுதியில் அடங்குகின்றன.

3.1.2 கிரயம்

ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளின் கிரயம் அதன் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்காக நேரடியாக செலவிடப்பட்ட கிரயத்தைக் கொண்டதாகவே கணிக்கப்படுகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிலையானதன்மைகொண்ட சொத்துக்களை கையகப்படுத்துதல் , விரிவாக்குதல் அல்லது முன்னேற்றுவதற்காக உறப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கருதப்படும்.

பிரதான பரீட்சித்தல்கள் மற்றும் கிரயமாக்குதலை உள்ளிட்ட தனிவேறாக கணக்குகள் வைக்கப்பட்டுள்ள ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி உருப்படியொன்றை மீள்நிறுவுவதற்காக உறப்பட்ட செலவினம் மூலதனமயமாக்கப்படும். ஏனைய அடுத்தடுத்த கிரயங்கள் அந்த பகுதிக்குள் அடங்கிய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு சபையைநோக்கிப் பாய்ந்து வருவதற்கான இயலுமை நிலவுமாயின் அத்துடன் உருப்படியின் கிரயத்தை நம்பகத்தன்மைமிக்தாக அளவிட முடியுமாயின் மாத்திரமே மூலதனமயமாக்கப்படும்.

3.1.3 தேய்மானம்

எளிய நேர்கோட்டு வழிமுறையின் அடிப்படையில் கீழே காட்டப்படுகின்ற வருடாந்த வீதத்தில் மதிப்பீடுசெய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்திற்குள் அந்த அளவுகளை பதிவேடுகளிலிருந்து நீக்கும்பொருட்டு தேய்மானங்கள் விரிவான வருமானக் கூற்றில் செலவுச்சுமையாக காட்டப்படும்.

அலுவலக சாதனங்கள்	10%
தளபாடம், பொருத்திகள்	10%
நலன்புரிச் சாதனங்கள்	10%
கணனி	20%

3.2 அருவச் சொத்துக்கள்

சொத்தொன்றின் இயற்பண்பாகக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தைநோக்கி பாய்ந்துவரக்கூடிய நிலைமை இருக்குமாயின் அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - 38 இன் அருவச் சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியுமாயின் அருவச் சொத்தாக இனங்காணப்படும். அதன்படி இந்த சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் ஏதேனும் திரண்ட சேத நட்டத்தை கழித்து நிதிநிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படும்.

சபையின் அருவச் சொத்துக்களில் பெறப்பட்ட கணனி மென்பொருட்கள் அடங்கும். கணனி மென்பொருட்கள் எளிமையான நேர்கோட்டு வழிமுறையின்பேரில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

3.3 சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் மிகவும் குறைந்த கிரயத்திலும் நிகர தேறிய பெறுமானத்திலுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமதி என்பது பொதுவான தொழில்முயற்சிப் பணிகளின்போது மதிப்பீடுசெய்யப்பட்ட நிறைவுசெய்கின்ற மற்றும் விற்பனை செலவுகளைக் கழித்தபின்னர் மதிப்பீடுசெய்யப்பட்ட விற்பனை விலையாகும். இந்த கிரயத்தில் கையிருப்புப் பண்டங்களை கையகப்படுத்துவதற்கான மற்றும் அவை தற்போது இருக்கின்ற இடத்திற்கு அல்லது நிலைமைக்கு கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்கும்.

3.4 நிதிசார் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் விடயப் பரப்பிற்குள் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமானவகையில் இலாபம் அல்லது நட்டம் மற்றும் வருமதியானவை, பருவமுதிர்வுவரை தேக்கிவைக்கப்பட்ட முதலீடுகள், விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் அல்லது எதிர்கால பாதுகாப்பு சாதனங்களாக பெயர்குறிக்கப்பட்ட பெறப்பட்டவை ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.

தனது நிதிசார் சொத்தில் அடிப்படை ஏற்பிசைவின் பேரில் பணிப்பாளர்சபை அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கும்.

அனைத்து நிதிசார் சொத்துக்களும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாக சொத்துக்கள் நியாயமான பெறுமதிக்கு ஏற்புடையதாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடியாக இயற்பண்பாகிய கொடுக்கல் வாங்கல் கிரயத்திலும் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

சபையினால் கடன் மற்றும் வருமதிகள் மற்றும் வைப்புகள் அவை தொடங்கப்படுகின்ற தினத்திலேயே முதலில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்து நிதிசார் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு காரணமாக்கப்பட்ட சொத்துக்களை உள்ளிட்டதாக) தொடக்கத்தில் சாதனங்களின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திலேயே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

எதேனும் சொத்தொன்றின் காசுப்பாய்வுகள் மீதுள்ள ஒப்பந்தம்சார்ந்த உரிமைகள் நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்துக்கள் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமானவகையில் சாட்டுதல் செய்யப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின்பேரில் ஒப்பந்தம்செய்யப்பட்ட காசுப்பாய்வுகள் கிடைப்பதற்குள்ள உரிமையை அது சாட்டுதல் செய்யுமிடத்து சபை நிதிசார் சொத்துக்களை இனங்காணலை நீக்கிவிடும். சாட்டுதல் செய்யப்பட்ட சொத்தொன்று சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தேக்கிவைக்கப்பட்ட எதாவது கடப்பாடு, தனிவேறான சொத்தாகவோ அல்லது பொறுப்பாகவோ இனங்காணப்படும்.

நிதிசார் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு பணத்தொகையை எதிரீடுசெய்ய சபை சட்டரீதியான உரிமையைக் கொண்டுள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலுத்தித்தீர்க்க அல்லது சொத்தினை தேறியதாக்கி சொத்துக்களை இணையாக செலுத்தித்தீர்க்க கருதப்படுமாயின் மாத்திரம் தேறிய பணத்தொகைகள் நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு, குறுங்கால முதலீடுகள் மற்றும் வர்த்தக மற்றும் பிற வருமதிகள் அடங்குகின்றன.

3.4.1 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களில் வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்பிசைவின்பேரில் பெயர்குறித்த நிதிசார் சொத்துக்கள் அடங்குகின்றன. நிதிசார் சொத்துக்கள் கிட்டிய காலப்பகுதி சார்ந்ததாக விற்பனை அல்லது மீள்கொள்வனவு செய்கின்ற கருமத்திற்காக கையகப்படுத்தப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்பட்டு வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் நியாயமான பெறுமதியில் அறிக்கை செய்யப்படும். நியாயமான பெறுமதியின் மாற்றங்கள் நிதிசார் வருமான மற்றும் விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் செலவினமாக இனங்காணப்படும்.

3.4.2 கடனும் வருமதிகளும்

கடனும் வருமதிகளும் முனைப்பான சந்தையில் விலைகளை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட உருவாக்கப்படாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப கணக்கிடலின் பின்னர் அத்தகைய நிதிசார் சொத்துக்களின்

சேதங்கள் கழிக்கப்பட்டு விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பிடப்படும். மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயமானது கையகப்படுத்துகையில் ஏதேனும் கழிவு அல்லது காப்பீட்டுக் கட்டணம் மற்றும் விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலின் உள்ளடங்கிய பகுதியான கட்டணங்களையும் கிரயத்தையும் கவனத்திற்கொண்டே கணிக்கப்படுகின்றது. விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலானது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதங்கள் காரணமாக ஏற்படுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடனும் வருமதிகளும் வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்பு முற்பணம், ஏனைய வருமதிகள் அத்துடன் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றையே உள்ளடக்குகின்றது.

3.4.3. நிதிசார் சொத்தொன்றின் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம்

கீழே குறிப்பிடப்பட்ட இரண்டு நிபந்தனைகளையும் நிறைவுசெய்தால் இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் சபை நிதிசார் சொத்துக்களை மதிப்பிறக்கம்செய்த பெறுமதிக்கு இனங்காணும்.

(அ) உடன்படிக்கைசெய்த காசுப்பாய்வுகளை சேகரிக்கும்பொருட்டு நிதிசார் சொத்துக்களை தடுத்துவைக்கும் நோக்கத்தைக்கொண்ட தொழில்முயற்சி மாதிரிக்குள் நிதிசார் சொத்துக்களை தடுத்துவைத்தல் மற்றும்

(ஆ) நிதிசார் சொத்தின் உடன்படிக்கைசெய்த விதிகள் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்ட தினங்களில் காசுப் பாய்வுகள் எற்படுத்தப்படுவதோடு அவை வெறுமனே காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் தீர்த்திராத பணத்தின் பேரிலான வட்டியாக அமையும்.

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் முதலீடுகள் நிதிசார் சொத்துக்களில் மதிப்பிறக்கம்செய்த கிரயத் திட்டத்தின்கீழ் வகைப்படுத்தப்படும்.

3.4.4 விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் எனப்படுவது விற்பனைக்காக உள்ளதென பெயர் குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனுமொரு நிதிசார் சொத்துக்கள் பிரிவுக்கு வகைப்படுத்தப்படாத உருவாக்கப்பட்டிராத நிதிசார் சொத்துக்களாகும். அடிப்படை ஏற்பிசைவுகளுக்குப் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேத நட்டங்களைத் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படுகின்றன. விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்களின் பேரிலான வட்டி வருமானம் விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து கணிக்கப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றின் ஏற்பிசைவுசெய்தலை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டங்களில் மீள்வகைப்படுத்தப்படும்

அடிப்படை ஏற்பிசைவின்கீழ் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபை ஏதேனும் நிதிசார் சொத்துக்களை பெயர்குறிக்கவில்லை.

3.4.5 நிதிசார் சொத்தொன்றின் சேதமதிப்பீடு

ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்கள் குழுமமொன்று சேதமடைவதற்காக வெளிப்படையான சான்றுகள் உள்ளனவாவென சபை மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் ஏற்பட்டிருப்பின் சொத்தொன்றின்

கொண்டுசெல்லல் பெறுமானம் மற்றும் மதிப்பீடுசெய்யப்பட்ட பெறுமானத்திற்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்கொள்ளல் மூலமாக சேதத்தின் அளவு கணிக்கப்படும்.

4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களென வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக அமைவது கேள்வியின் பேரில் அல்லது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்படவேண்டியதாக உள்ளவையாகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக அமைவது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய மீதியாகும்.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.1 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 "இளைப்பாற்று நன்மைக் கிரயம்" உடன் அமைந்தொழுகத்தக்கவகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காகவும் சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததிலிருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்தின்படி ஊழியரொருவர் தொடர்பிலான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக்காலம் நிறைவடைந்ததிலிருந்து மாத்திரமே தொடங்குகின்றது. பொறுப்புகளுக்கான வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

4.3 மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்

எதிர்பாராத பொறுப்புகளாக பொருளாதார நன்மைகள் சாட்டுதல் செய்யப்படுவதற்கான வாய்ப்புகளற்ற அல்லது நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியாத சந்தர்ப்பங்களில் நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற நடப்புக் கடப்பாடுகள் ஆகும்.

சபையின் மூலதனக் கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.4 கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியம்

2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினைக் கவனத்திற்கொண்டு நிகழ்கால பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுகளில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பகள் கணக்குப் பதியப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 4 இன் 15 வது பந்தியில் கூறப்பட்டுள்ளவகையில் காப்புறுதி உடன்படிக்கைகளில், காப்புறுதிக் கம்பெனி ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் தனது காப்புறுதி உடன்படிக்கையின்கீழ் எதிர்கால காசுப் பாய்வுகளின் நிகழ்கால மதிப்பீடுகளை பாவித்து தனது அடையாளம்கண்ட காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமானவையா என்பதை மதிப்பீடுசெய்ய வேண்டும். எதிர்கால காசுப் பாய்வுகளை கவனத்திற் கொண்டவிடத்து தனது காப்புறுதிப் பொறுப்புக்களின் கொண்டுசெல்லல் பெறுமதி (சார்ந்த பிற்போடப்பட்ட கையகப்படுத்தலுக்கான கிரயம் மற்றும் சார்ந்த அருவச் சொத்துக்களை கழித்து) போதுமானதல்லவென அந்த மதிப்பட்டில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பின் ஒட்டுமொத்த பற்றாக்குறையை இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காண வேண்டும்.

சந்தை வட்டிவீதங்களின் வித்தியாசங்களை கருத்தில்கொண்டு ஓய்வூதியப் பொறுப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு இலாப - நட்டக் கூற்றில் வேறு விரிவான வருமானத்தில் அத்துடன் நிதிசார் கூற்றுகளில் பிற விரிவான வருமானத்தின் பற்றாக்குறை இனங்காணப்பட்டுள்ளது.

இதனால் பிற விரிவான வருமானத்தின்கீழ் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பின் மேற்சொன்ன அதிகரிப்பினை இனங்காணுதல் மேற்படி தரநியமத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புக்களின் திட்பநுட்பத்தன்மையை உறுதிசெய்யும்பொருட்டு 2025 ஆம் ஆண்டில் சபை ஆயுட்கணிப்பாளர் ஒருவரது சேவையைப் பெற்றுக்கொண்டது.

5. விரிவான வருமானக் கூற்று

5.1 வருமானம்

1. சபையின் வருமானம் காப்புறுதித் தவணைப்பணம், திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் மற்றும் நிலையான வைப்புகள், ஊழியர்கடன் மற்றும் பிற நானாவித வருமானத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

2. அனைத்தது வருமானமும் அட்டுறு அடிப்படையிலேயே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

3. காப்புறுதி தவணைப்பணம் கடற்றொழிலாளர்களுக்கான மானியம் என்றவகையிலேயே அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ளது.

4. மூலதனச் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடை படிப்படியான அடிப்படையில் வருமானமான ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

5.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

1) ஓய்வூதிய தவணைப்பண வருமானம் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இனங்காணப்படும்.

2) மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையிலானதாக அமைவதோடு சார்ந்த செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

3) வட்டி வருமானம் கால அடிப்படையில் அட்டுறுநிலையடையும்.

5.3 அரசாங்கக் கொடைகளுக்கான கணக்கீடு

உறப்பட்ட செலவுகளுக்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் இந்த செலவுகள் இனங்காணப்பட்ட காலப்பகுதிக்குள் வருமானமாக விரிவான வருமானக்கூற்றில் இனங்காணப்படும். சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகளைச் சார்ந்ததாக சொத்தொன்றின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும்

படிப்படியான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

5.4 செலவுகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் செயற்பாட்டு தொழிற்பாடுகளிலும் சபை பேணிவருதல் அத்துடன் மூலதன சொத்துக்களை வினைத்திறன்கொண்ட நிலைமையில் பேணிவருவதற்காக உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான மிகைநிலையை தயாரிக்கையில் வருமானத்தில் வரவுவைக்கப்பட்டுள்ளது.

401/4 இலக்கமும் 2008.10.15 திகதியும் கொண்ட பணிப்பாளர்சபை பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவினங்கள் பின்வருமாறு அமையும்.

செலவினம்	**வீதம்**
வாடகையும் தொலைபேசியும்	5%
தபால் கட்டணமும் நீர்க்கட்டணமும்	5%
மின்சாரம்	5%
தலைமை அலுவலக உபகரணங்கள்	5%
கட்டிடப் பராமரிப்பு	5%
மோட்டார் வாகனப் பராமரிப்பு	3%
எரிபொருள்	2%
காகிதாதிகள்	2%
சீருடைகள்	2%
பாதுகாப்பு	5%
கணனி செலவுகள்	5%

6. காசுப் பாய்வுக்கூற்று

இலங்கை கணக்கீட்டுத் தரநியமம் 07 பிரகாரம் திட்டத்தின் காசுப்பாய்வுக் கூற்று "நேரில் முறைமையை" பயன்படுத்தியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெறுகின்றசம்பவங்களின் பொதுமானதன்மை கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதோடு அவசியமான இடங்களில் கணக்குகளில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8. சார்ந்த தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்

கமத்தொழில் காப்புறுதித் திட்டமும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டமும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படுகின்றன. இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

9. முந்திய வருடத்திற்கான சீராக்கங்கள்

முந்திய வருடங்களிலிருந்து கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்புகளுக்காக ரூ. 6,042,840,342 நிதியேற்பாட்டினை சபை ஒதுக்கீடு செய்துள்ளதோடு ரூ. 377,989,502.09 மிகையேற்பாடு 2025 ஆண்டின் நிதிக்கூற்றுகளில் சீராக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

குறிப்பு -01

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

சொத்துக்கள்	2025.01.01 இல் கிரயம்/ மதிப்பீடு கணித்தல்	கையுதிர்த்தல்	கிரயம் சேர்த்தவை	2025.12.31 இல்மீதி	2025.01.01 இல் திரண்ட தேய்மானம்	கையுதிர்த்தல்	ஆண்டுக்கான தேய்மானம்	மொத்த தேய்மானம்	2025.12.31 இல் பதிவழித்த பெறுமதி
அலுவலக உபகரணங்கள்	528,649	-	-	528,649	492,305	-	14,643	506,948	21,701
நலன்புரிச் சாதனங்கள்	1,325	-	-	1,325	1,325	-	-	1,325	-
தளபாடம் - பொருத்திகள்	77,677	-	-	77,677	76,964	-	713	77,677	-
கணினிகள்	264,945	-	-	264,945	264,945	-	-	264,945	-
	872,595	**-**	**-**	**872,595**	**835,539**	**-**	**15,356**	**850,895**	**21,701**

ஆதனம், சாதனம். பொறித்தொகுதி முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட இன்னமும் பாவிக்கப்பட்டு வருகின்ற 2025 திசெம்பர் 31 இல் ரூ. 727,925.42 மொத்தப் பெறுமதிகொண்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றன

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2025	31.12.2024
குறிப்பு - 02 - கையிருப்பு	ரூ.	ரூ.
அச்சிடல் பொருட்கள்	109,321	116,255
	109,321	**116,255**
குறிப்பு - 03 - வருமதிகள்		
வழங்கப்படாத ஓய்வூதியம்	580,178	83,172
இறப்புப் பணிக்கொடை முற்பணம்	5,000	5,000
	585,178	**88,172**
குறிப்பு - 04		
பருவமுதிர்வு வரை தடுத்துவைத்த நிதிச்சாதனங்கள்		
திறைசேரி உண்டியல்	38,445,703	29,076,885
நிலையான வைப்பு - மக்கள் வங்கி	280,872,078	299,958,861
	319,317,782	**329,035,746**
குறிப்பு 5 - காசு மற்றும் காசுக்கு இணையானவை		
க/கு இலக்கம் 164790 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	861,984	190,525
க/கு இலக்கம் 164795 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	1,355,328	711,056
க/கு இலக்கம் 91071672 இலங்கை வங்கி நுகேகொட	372,845	24,000
க/கு இலக்கம் 335100280112349 மக்கள் வங்கி நுகேகொட	76,896	47,945
சேகரிப்பு கணக்குகள்	121,653	114,438
	2,788,706	**1,087,964**
குறிப்பு - 06 - கடற்றொழிலாளர் ஓய்வூதிய திரண்ட நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	(5,417,682,964)	(4,934,955,153)
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	377,989,502	-
	(5,039,693,462)	(4,934,955,153)
ஆண்டில் சேர்த்தவை		
ஆண்டுக்கான மிகைநிலை / (பற்றாக்குறை)	(399,711,091)	(482,727,810)
	(5,439,404,553)	**(5,417,682,964)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2025	31.12.2024
	ரூ.	ரூ.
குறிப்பு - 07- இறப்புப் பணிக்கொடை நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	35,733,815	34,199,215
சேர்க்க:		
ஆண்டுக்கான பங்களிப்பு	1,748,280	1,743,600
கழிக்க:		
செலுத்திய இறப்புப் பணிக்கொடை	(172,000)	(209,000)
	(172,000)	(209,000)
	1,576,280	**1,534,600**
	37,310,095	**35,733,815**
குறிப்பு - 08 - சென்மதிகள்		
ஓய்வூதியக் கொடுப்பனவு	5,299,258	5,560,510
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	78,469,779	74,051,578.69
மீளளிக்கத்தக்க உதவுதொகை	129,491	104,594
இறப்புப் பணிக்கொடை	153,000	169,000
இன்சென்டிவ்மென்	28,500	-
உதவுதொகை மீதான வட்டியின் மீளளிப்பு	196,031	124,704
மதியுரைக் கட்டணம்	250,000	-
கணினிப் பராமரிப்பு	11,450	11,450
	84,537,509	**80,021,837**
குறிப்பு - 09 - அட்டுறு செலவினங்கள்		
அச்சிடலுக்கான ஏற்பாடு	513,447	545,812
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு	375,000	535,725
போஸ்டேஜ்	294,325	346,690
	1,182,772	**1,428,227**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்

	31.12.2025	31.12.2024
	ரூ.	ரூ.
குறிப்பு - 10 - நிருவாகச் செலவினங்கள்		
சம்பளமும் ஊதியமும்	1,065,092	845,412
ஊ.சே.நி. பங்களிப்பு	146,766	116,637
ஊ.ந.நி. பங்களிப்பு	29,353	23,327
மேலதிகநேரம்	73,789	3,242
மதியுரைக் குழு மற்றும் பிற குழுப் படிகள்	63,800	-
விசேட படிகள்	337,515	483,879
பணிக்கொடை	120,251	92,408
நாட்சம்பளம்	5,263	-
எரிபொருள்	463,032	498,715
காகிதாதிகள்	345,508	345,370
அச்சிடல்	553,227	333,265
பிரச்சாரமும் பயிற்சியும்	130,652	-
களியாட்டப் படிகள்	3,860	-
சீருடைகள்	11,251	31,374
வாடகை	1,450,209	1,429,836
தொலைபேசி	772,731	895,270
தபால்	776,849	801,008
நீர்க் கட்டணச்சிட்டை	52,158	57,801
பாதுகாப்பு	183,704	174,023
மின்சாரம்	357,089	373,776
மோட்டார் வாகனப் பராமரிப்பு	605,789	813,217
கட்டிடப் பராமரிப்பு	142,017	171,604
அலுவலக சாதன பராமரிப்பு	63,366	173,243
கணினி செலவுகள்	243,804	247,426
தேய்மானம்	15,356	17,642
கணக்காய்வுக் கட்டணம்	417,003	208,725
மதியுரைக் கட்டணம்	250,000	-
	8,679,432	**8,137,200**
குறிப்பு 11 - நிதி அறவீடுகள்		
வங்கி அறவீடுகள்	1,810	13,800
	1,810	**13,800**

12

சேவை அணுகலும் வசதிகளை விருத்திசெய்தலும்



சேவை அணுகலும் வசதிகளை விருத்திசெய்தலும்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

மாவட்ட அலுவலகங்க

இலங்கை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (AAIB) அதன் தலைமை அலுவலகமான நுகேகொட, கங்கொடவிலவில் அமைந்துள்ள வளாகத்திலும் நாடு பூராவிலும் அமைந்துள்ள அதன்



வெப் தளம்

www.aib.gov.lk

Facebook

துரித தொலைபேசி சேவை

1918

இச்சேவையானது விவசாயிகளிடமிருந்து வரும் விசாரணைகள், காப்பீடு தொடர்பான தகவல்கள், புகார்கள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதிலளிப்பதை எளிதாக்குவதுடன், விவசாய மற்றும் விவசாய நிலக் காப்பீட்டு வாரியத்தின் சேவைகளை உரிய நேரத்தில் பெறுவதற்கும் வழிவகுக்கிறது.

மாவட்ட அலுவலகங்களின் பரம்பல்

	மாவட்டம்	மாவட்ட அலுவலக முகவரி
1	கொழும்பு	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. கொவிஜன கேந்திரம், உடஹமுல்ல, நுகேகொட.
2	கம்பஹா	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. இலக்கம் 56, ஆனந்த மாவத்த கம்பஹா.
3	களுத்துறை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. 04 வது மாடி, செயலக அலுவலகம், களுத்துறை.
4	கண்டி	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. இலக்கம் 03, செமனேரிஸ் பூங்கா, தென்னேகும்புற.
5	மாத்தளை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. மாவட்ட செயலகம், மாத்தளை.
6	நுவரெலியா	பிரதிப் பணிப்பாளர் க.க.கா.ச., மாவட்ட செயலகம், நுவரெலியா.
7	காலி	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. இலக்கம் 01, பாலதக்ஷ மாவத்த, கோட்டை, காலி.
8	மாத்தறை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. இலக்கம் 360, குமாரதுங்க மாவத்த, நூபே,மாத்தறை.
9	அம்பாந்தோட்டை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. மாகம் றுஹுணுபுர நிர்வாகத் தொகுதி, அம்பாந்தோட்டை.
10	யாழ்ப்பாணம்	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. அடியாபனம் வீதி, திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்.
11	மன்னார்	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. மாவட்ட செயலக வளாகம், மன்னார்.
12	வவுனியா	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. மாவட்ட செயலகம், வவுனியா,
13	முல்லைத்தீவு	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. தொழில் திணைக்களக் கட்டிடம், முள்ளியவலை, முல்லைத்தீவு.
14	மட்டக்களப்பு	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. தேசிய கூட்டுறவுச் சங்க கட்டிடம், மட்டக்களப்பு.
15	அம்பறை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. D-1, அரசாங்க இல்லம், அம்பாறை.
16	திருகோணமலை	பிரதிப் பணிப்பாளர், க.க.கா.ச. அரசாங்க அதிபர் அலுவலகம், திருகோணமலை.
17	புத்தளம்	பிரதிப் பணிப்பாளர், க.க.கா.ச. 215,புத்தளம் வீதி, சிலாபம்.
18	குருநாகல்	பிரதிப் பணிப்பாளர், க.க.கா.ச. வத்ஹிமி வீதி, குருநாகல்.
19	மாகோ	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. 234/1, தலதாகம, பலல்ல.
20	அநுராதபுரம்	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. மாவட்டச் செயலகம், அநுராதபுரம்.
21	பொலநறுவை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. நவ நகரம், பொலநறுவை.
22	மொனறாகல	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. பழைய கச்சேரி, மொணறாகலை.
23	பதுளை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. மாவட்ட விவசாய அமைப்புக் கிளை கட்டிடம், கெப்பெட்டிபொல மாவத்த, பதுளை.
24	இரத்தினபுரி	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. இலக்கம் 450, பிரதான வீதி, இரத்தினபுரி.
25	தம்புத்தேகம	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. தம்புத்தேகம.
26	மன்னம்பிட்டி	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. கமநல சேவைகள் நிலையம், மன்னம்பிட்டி.
27	கேகாலை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. 5/1/1, ரத்தம்பலாவத்த, கேகாலை.
28	உடவளவை	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. நவ நகரம், எம்பிலிபிட்டிய.
29	தெஹிஅத்த கண்டிய	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. மகாவலி வலயம், தெஹிஅத்தகண்டிய.
30	கிளிநொச்சி	உதவிப் பணிப்பாளர், க.க.கா.ச. பழைய மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

13

மேம்பாட்டு செயற்பாங்குகளின் டிஜிட்டல்மயமாக்கலும் தொழில்நுட்ப பாவனையும்



சபையின் மேம்பாட்டு அலுவல்களுக்காக துரித

e-SMS சேவையைப் பேணிவருதல்.

தகவல் தொழில்நுட்ப பிரிவு நிறுவப்பட்டதும் சபையின் பிரச்சார அலுவல்களையும் விழிப்பூட்டல் அலுவல்களையும் மேற்கொள்வதற்காக e -SMS சேவையொன்று அதாவது குறுந்தகவல் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு அதன்மூலமாக அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் இடம்பெறுகின்ற வாடிக்கையாளர் விழிப்பூட்டல்களும் ஏனைய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களும் இந்த குறுந்தகவல் சேவையூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடைய உதவுதொகை செலுத்துனர்களை திட்டத்தில் முனைப்பானவர்களாக தடுத்துவைப்பதற்காக மாதாந்த குறுந்தகவல் சேவை ஊடாக அவர்களுக்கு விழிப்பூட்டுதலும் மூன்றாந்தரப்பு காப்புறுதித் திட்டம் மற்றும் ஏனைய காப்புறுதித் திட்டங்களுடன் தொடர்புடையதாக வாடிக்கையாளர்களுக்கு விழிப்பூட்டுதலும் இந்த குறுந்தகவல் சேவை ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

டிஜிட்டல் நுழைவாயில்: சபையின் பிரதான வெப்தளம்

சபைக்குச் சொந்தமானதாக நிலவுகின்ற பிரதான வெப் தளத்தின் தகவல்களை இற்றைப்படுத்துதல், பேணிவருதல் போன்றே வெப் தளத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நிறுவனங்களை இணைப்பாக்கம்செய்தல் ஆகிய செயற்பாங்குகள் மேற்கொள்ளப்பட்டன.



சபைக்கான உத்தியோகபூர்வ Facebook பக்கத்தை பேணிவருதல்

நிறுவனத்தின் உத்தியோகபூர்வ சேவைகள் மற்றும் நற்பயரை சரிவர மக்களிடம் முன்வைத்து மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக புதிய வாடிக்கையாளர்களை கவர்ந்திழுத்து சந்தைப்படுத்தலை அதிகரித்துக்கொள்வதற்காக சபைக்காக ஓர் உத்தியோகபூர்வ Facebook பக்கத்தை நிர்மாணித்து பேணிவருதல் மேற்கொள்ளப்பட்டது



2023.06.13 ஆந் திகதி எமது சபை முதல்த்தடவையாக தகவல் தொழில்நுட்பத்தை முதன்மையாகக்கொண்டு ஆரம்பித்த தகவல் தொழில்நுட்பப் பிரிவு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நோக்கு மற்றும் அரும்பணிக்கு அமைவாக செயலாற்றி சபையின் தொழிற்பாட்டு செயற்பாங்கினை டிஜிட்டல்மயப்படுத்துதல் மூலமாக மிகுந்த ஆக்கவிளைவும் பயனுறுதியும்கொண்ட சேவையை வழங்குவதற்காக அவசியமான தொழில்நுட்பத் திட்டங்களை வகுத்தல், அதற்கு அவசியமான தகவல்களைத் திரட்டுதல் மற்றும் பகுப்பாய்தல், அத்திட்டங்களை அமுலாக்குதல் மற்றும் நெறிப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

தலைமை அலுவலகத்தினதும் மாவட்ட அலுவலகங்கங்களினதும் வலையமைப்பாக்கலை மேற்கொள்ளல்.

➢ தலைமை அலுவலக வலையமைப்பாக்கல்

2025 ஆம் ஆண்டின் இறுதியளவில் தலைமை அலுவலக வலையமைப்பாக்கல் அலுவல்களுக்காக அவசியமான களத்திட்டங்கள் அனைத்தும் ஒவ்வொரு பிரிவிற்கும் அமைவாக உருவாக்ககப்பட்டு நிறைவுசெய்யப்பட்டதோடு 2024 ஆம் ஆண்டில் வலையமைப்பாக்கல் மேற்கொள்ளப்பட்டிராத ஓய்வூதியப் பிரிவினதும் பிரதான கூட்ட மண்டபத்தினதும் வலையமைப்பாக்கல் செயற்பாங்கு நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

➢ வட்ட அலுவலக வலையமைப்பாக்கல்

மாவட்ட அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கோரல் ஆவணங்களில் நிலவுகின்ற விலைமட்டங்களை நடப்பு சந்தை விலைமட்டங்களுடன் ஒப்பிட்டு அதற்கு அவசியமான தொழில்நுட்ப ஒத்துழைப்பு தகவல் தொழில்நுட்ப பிரிவினால் வழங்கப்பட்டு ஏற்கெனவே மாவட்ட அலுவலக வலையமைப்பாக்கல் செயற்பாங்கு நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

பிரிவுகளுக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் இடையிலான இணைப்பாக்கத்தை மேற்கொள்ளலும் வெளிவாரி நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பாக்கமும்

➢ பிரிவுகளுக்கும்மாவட்டஅலுவலகங்களுக்கும் இடையிலான இணைப்பாக்கம்

மாவட்ட அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் நிலவுகின்ற வன்பொருள்கள் மற்றும் வலையமைப்பு சார்ந்த சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்ப பிரிவின் உத்தியோகத்தர்களால் தொலைத் தொடர்பாடல் முறையூடாக தொழில்நுட்ப உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதோடு அவசியமான சந்தர்ப்பங்களில் அந்த மாவட்ட அலுவலகங்களுக்கு சென்று அங்கு உருவாகியுள்ள சிக்கல்களுக்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

➢ வெளிவாரி நிறுவனங் களுக்கிடையிலான இணைப்பாக்கம்

கமத்தொழில் அமைச்சினாலும் அவ்வமைச்சின்கீழ் பேணிவரப்படுகின்ற கருத்திட்டங்களுடனும் தொடர்புடைய (IDAT) கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றல். அதனுடன் சம்பந்தப்பட்டதாக கோரப்பட்ட தொழில்நுட்ப அறிக்கைளை தயாரித்தல் மற்றும் அவ்வறிக்கைளை நிறுவனத் தலைவர்கள் ஊடாக நிறுவனங்களுக்கு துரிதமாக அனுப்பிவைத்தல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

ERP முறைமையை அபிவிருத்திசெய்தலும் அதற்கான பயற்சி நிகழ்ச்சித்திடட்டங்களை அமுலாக்குதலும்.

GIZ (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit) நிறுவனத்தின் நிதியுதவியின்கீழ் சபையின் உள்ளக நிர்வாக மற்றும் நெறிப்படுத்தல் செயற்பாங்குகளை டிஜிட்டல்மயப்படுத்துவதற்காக அமுலாக்கப்பட்ட வருகின்ற ERP (Enterprise Resource Planning) முறைமையில் அபிவிருத்தி அலுவல்களை மேற்கொள்ளலும் அதற்காக சபை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநிகழ்ச்சிகளை அமுலாக்குதலும்.

இதன் பூர்வாங்க கட்ட நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டின் இறுதியளவில் மேற்படி முறைமையின் நிலைமை கீழ்க்காணும் வகையில் அமைந்திருந்தது.

- அதன்கீழ் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கோள்வதற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட HRM மொடியூல் தொடர்பாக சபையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பயனர் கணக்குகள் நிர்மாணிக்கப்பட்டு HRM வெப் மற்றும் நடமாடும் உள்ளீடு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதோடு அதற்காக அவசியமான பயிற்சித் தொடர்களும் நடாத்தப்பட்டுள்ளன.

- மேலும் இதற்கு சமாந்தரமாக ERP முறைமையின் HRM மொடியூலுடன் தொடர்புடையதாக மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களின் வரவு மற்றும் வெளியேறிச்செல்லல் நேரப்பதிவுக் குறிப்புத் தரவுகளை பெற்றுக்கொள்கின்ற செயற்பாங்கிற்காக மாவட்ட அலுவலகங்களில் காணப்படுகின்ற விரல் அடையாளக் கருவிகளை பிரதான வலையமைப்புடன் இணைக்கும் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டதோடு 2025 ஆம் ஆண்டின் இறுதியளவில் தலைமை அலுவலகத்தை உள்ளிட்ட 30 மாவட்ட அலுவலகங்களுக்காகவும் அந்த செயற்பாங்கு நிறைவுசெய்யப்பட்டது.

- மூன்றாந் தரப்பு காப்புறுதித் திட்டத்துடன் தொடர்புடையதாக மூன்றாந் தரப்பு காப்புறுதி மொடியூலின் பூர்வாக கட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டு அது சம்பந்தமான அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்குமான பயனர் கணக்குகள் உருவாக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. அனைத்து மாவட்ட அலுவலகங்களுடனும் தொடர்புகொண்டு இந்த மொடியூல் பற்றிய பிரயோக பயிற்சித் தொடர்கள் ஊடாக அவர்களுக்கு விழிப்பூட்டுகின்ற அலுவல்கள் நிறைவுசெய்யப்பட்டன. அத்துடன் மூன்றாந் தரப்பு காப்புறுதித் திட்டத்துடன் தொடர்புடையதாக நிகழ்நிலை திட்டத்தினூடாக வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய செயற்பாங்கின் (electronic Revenue Licence - eRL 2.0) அபிவிருத்தி அலுவல்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே எமது வாடிக்கையாளர்களால் இந்த வசதி online மூலமாக பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் நிலவுகின்றது.

- பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம் தொடர்பான அவசியப்பாடுகளை திரட்டுகின்ற (Requirement gathering) செயற்பாடுகளை நிறைவிற்கு கொண்டுவந்து அதன் அபிவிருத்தி அலுவல்களையும் பயனர் ஏற்றுக்கொள்ளல் பரீட்சித்தலையும் (User acceptance testing) நிறைவுசெய்து 2025 ஆம் ஆண்டு நிறைவடைகையில் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் இந்த மொடியூல் பற்றிய பிரயோக பயிற்சித் தொடர்கள் ஊடாக அவர்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே LIVE முறைமைக்குள் தரவுகளை உள்ளீடுசெய்கின்ற அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கால்நடைவளக் காப்புறுதி செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக அவசியப்பாடுகளை திரட்டுகின்ற (Requirement gathering) செயற்பாடுகளை நிறைவிற்கு கொண்டுவந்து அதன் அபிவிருத்தி அலுவல்களையும் பயனர் ஏற்றுக்கொள்ளல் பரீட்சித்தலையும் (User acceptance testing) நிறைவுசெய்து 2025 ஆம் ஆண்டு நிறைவடைகையில் 21 மாவட்ட அலுவலகங்களில் இந்த மொடியூல் பற்றிய பிரயோக பயிற்சித் தொடர்கள் ஊடாக அவர்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளதோடு ஏனைய மாவட்ட அலுவலகங்களுக்கு பயிற்சித் தொடர்களை நடாத்த அவசியமான நடவடிக்கைகள் எதிர்வரும் வருடங்களில் திட்டமிடப்பட்டுள்ளன.

- ஆயுட் காப்புறுதி செயற்றிட்டம் தொடர்பான முறைமையின் அபிவிருத்திப் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

- ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அவசியப்பாடுகளை திரட்டுகின்ற செயற்பாடுகளை நிறைவிற்கு கொண்டுவந்து அதன் அபிவிருத்திப் பணிகளில் ஏறக்குறைய 95% நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

- கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அவசியப்பாடுகளை திரட்டுகின்ற செயற்பாங்கு மற்றும் பயனர் ஏற்றுக்கொள்ளல் பரீட்சித்தலையும் (User acceptance testing) நிறைவுசெய்து Live முறைமை ஊடாக NAQDA மற்றும் DFAR நிறுவனங்கள் தொடர்பான Policies வெளியிடுதல் மேற்கொள்ளப்பட்டது.

- நிதிசார் மொடியூல்களுடன் தொடர்புடையதாக அவசியப்பாடுகளை திரட்டுகின்ற (Requirement gathering) செயற்பாடுகளை நிறைவிற்கு கொண்டுவந்து அதன் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மொடியூல்களுடன் தொடர்புடைய நடமாடும் செயலியை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேறகொள்ளப்பட்டு வருகின்றன.

- அத்துடன் ஏனைய மொடியூல்களையும் மேற்படி மொடியூகளுடன் தொடர்புடையதாக நிலவுகின்ற உப மொடியூல்களையும் எமது சபையின் அவசியப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அந்த மொடியூல்களின் இடைமுகங்கள் பயனர்களின் பாவனைக்கு வசதியானவகையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தாபனஞ்சார் முன்னேறப்பயணத்தின் திருப்புமுனைகள்







- 2025 ஆம் ஆண்டின் புத்தரிசி விழா அதிமேதகு சனாதிபதியவர்களின் தலைமையில் 2025.04.03 மற்றும் 04 ஆகிய தினங்களில் அநுராதபுரம் ஜய ஸ்ரீ மகா போதிக்கருகில் நடாத்தப்பட்டவேளையில் அனுசரணை வழங்கியமையும் செயற்பாடுகளை மேற்கொண்டமையும்.

- "கிளீன் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையானதாக பிரச்சாரக் கூடங்களை நடாத்தி மக்களுக்கு விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சிகள் காலி, பதுளை உள்ளிட்ட பிரதேசங்களில் அமுலாக்கப்பட்டமை.

- அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாக மூன்றாந்தரப்பு மோட்டார் வாகன காப்புறுதியை மேற்கொள்ளல் சம்பந்தமான அலுவல்களை விரிவாக்குதல்.

- அநுராதபுரம் மாவட்டத்தில் சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லத்தை சுற்றுலா இல்லமாக அபிவிருத்தி செய்து சபை உத்தியோகத்தர்களின் பாவனைக்காக பெற்றுக்கொடுத்தமை.

- சபையின் காப்புறுதி சந்தைப்படுத்தல் அலுவல்களை ஒழுங்குபடுத்துவதற்காக புதிய வெளிவாரி முகவர்களை சேர்த்துக்கொண்டமையும் காப்புறுதி முறையியல்கள் பற்றி நாடளாவிய விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதலும்

- கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் வெளிவாரி முகவர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுடனான சந்திப்புகளை நடாத்தியமை (திருகோணமலை, குருநாகல், காலி, நுவரெலியா)





- சபையின் வெளிவாரி முகவர்களின் சேவைவையைப் பாராட்டுமுகமாக முகவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழையும் குடையையும் வழங்கியமை.




- "நினைப்போம் மாகம் வருண - 2025" நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்டு மேம்பாட்டு நடவடிக்கைளை மேற்கொள்ளல்.




- 2025.07.14 ஆந் திகதி "சயுர" மீனவர் திடீர் விபத்துக் காப்புறுதி செயற்றிட்டத்தின் ஆரம்ப வைபவம் அம்பாந்தோட்டை குடாவெல்ல மீன்பீடித் துறைமுக வளாகத்தை மையமாகக்கொண்டு மேற்கொண்டமை.




- கமத்தொழில் அமைச்சரை உள்ளிட்ட அரச பிரிவின் பங்கேற்புடன் பயிர்ச்சேத இழப்பீட்டு காசோலைகளை பகர்ந்தளிக்கும் வைபவத்தை நடாத்தியமை (தம்புத்தேகம, அநுராதபுரம், யாழ்ப்பாணம், புத்தளம், பதுளை, பொலநறுவை, மொணறாகல, திருகோணமலை, மட்டக்களப்பு)




- காலி, மட்டக்களப்பு மாவட்டங்களில் நடமாடும் பிரச்சார நிகழ்ச்சிகளையும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூடங்களையும் நடாத்தியமை

- புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கி மாவட்ட அலுவலகங்களுக்கிடையில் போட்டியொன்றை நடாத்தி உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்வதற்கான தொழிற்பாடுகளை அமுலாக்குதல்.





- பிரச்சார அறிவித்தல்கள், துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தல் (கம்பஹா, அநுராதபுரம், மாத்தறை, மட்டக்களப்பு, தம்புத்தேகம, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மாத்தளை)

- சபையின் காப்புறுதி செயற்றிட்டங்கள் சம்பந்தமாக தனித்தனியாக துண்டுப்பிரசுர மாதிரிகளையும் பெனர் மாதிரிகளையும் தயாரித்தமை (பயிர்க்காப்புறுதி, சயுர மீனவர் திடீர் விபத்துக் காப்புறுதி, செல்லப் பிராணிகள் - காலநடைவளக் காப்புறுதி, கமக்காரர் ஓய்வூதியத் திட்ட சேர்த்துக்கொள்ளல், மூன்றாந் தரப்பு காப்புறுதி)







- உலக மீன்பிடித் தேதிக்கு சமகாலவ காலத்துக்குச் சரியாகப் புதுப்பிக்கப்பட்டது முறைப்படி பெறுதல் தொடங்கும்.





- தம்புத்தேகம, அநுராதபுரம், யாழ்ப்பாணம், புத்தளம், மொணறாகலை, பதுளை, பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு ,கண்டி மாவட்டங்களின் பயிர்ச்சேதங்களை பரிசோதனை செய்கின்ற வெளிக்கள அவதானிப்புப் குழுக்களை அனுப்பிவைத்தலும் பயர்ச்சேத பரிசோதனைகளை மேற்கொள்ளலும்






- சபை உத்தியோகத்தர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி விழிப்பூட்டுகின்ற நிகழ்ச்சியை கழுத்துறை பொலீஸ் வித்தியாலயத்துடன் கூட்டாக மேற்கொள்ளல்.






- ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் கூட்டாக சந்தைப்படுத்தல் பற்றிய நிகழ்ச்சியை சபை உத்தியோகத்தர்களுக்காக நடாத்தியமை




- கம்பஹா மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "கொவிஜன பென்க்கு அபிமன்" மேம்பாட்டு நிகழ்ச்சிக்காக சபை மூலமாக அனுசரணை வழங்கப்பட்டமை.

- பிரகதி பரிசீலனை நிகழ்ச்சிகள் மற்றும் க்ஷேத்ர அதிகாரி நிர்வாக குழு அபிப்ரேனைக்காக உயர் வருமானம் பெற்ற அதிகாரிகள் பரிசீலனை நிகழ்ச்சி நடைபெற்றது.




- பாதிப்பை சரிசெய்யும் திட்டங்களை செயல்படுத்துதல்.


